UNIVERSITY OF JAFFNA LIBRARY

**DR. ILLANGO & ASSOCIATES**
SCARBOROUGH OFFICE
3852 Finch Ave. East, Unit 204 & 303
டாக்டர் எம். இளங்கோ
(416) 292-7004
BRACE FOR A GREAT SMILE
MISSISSAUGA OFFICE
3025 Hurontario St., # 102
டாக்டர் இ. ஜானகி
(905) 270-7844

SAMY & SONS
1884B Kennedy Rd. (at Ellesmere) Scarborough
- புத்தம் புதிய ஆடை வகைகள்
- சுடிதார் சாறி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்
- 22 கரட் தங்க நகைகள்
- துரித பணமாற்றுச் சேவை
- வீடியோ, ஓடியோ, பிரதிமாற்றம்

இன்னும் எழுத்திலடங்காதன
மொன்றியல் சுமித் தொடர்புகளிற்கு
குகன் 514-736-6228
TEL: 416-298-1598 FAX: 416-298-2849

டாக்டர் சண்முகம் சிவநேசன்
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-291-1085
டாக்டர் பகீரதன் (பகி)
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-728-0345
3852 Finch Ave. East, #207, Scarborough, Ont. (Between Birchmount & Kennedy

Neelam Silk
தற்பொழுது இரு இடங்களில்
1453 Gerrard St. East , Toronto
Tel: 416-778-7455
2378 Eglinton Ave. East., Scarborough
Tel: 416-759-2002
(Kennedy Rd. & Eglinton Ave.) சந்திப்பில்
www.neelamsilk.com

INCOME TAX
வீடு வாங்க விற்க
HOMELIFE
Selva Vettyvel
Real Estate Broker
Tel: 416-261-1544 Cell: 416-568-4301
Future Realty Inc.
262 Markham Road, Scarborough, ON
Markham & Eglinton

UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

416-752-1524 www.uthayan.ca 416-752-6703

உதயம்: 345 Chief Editor: R. N. Logendralingam 22.11.2002 FRIDAY

ALL INSURANCE & FINANCIAL SERVICES
- Auto
- Home
- RRSP
- Group
- Travel
- Business

LIBERTY MUTUAL
London Life
Balan Kanapathi
Office: 416-321-1515
Home: 905-294-2429
Pager: 416-336-4027
Mobile: 416- 452-6975
4433 Sheppard Ave. East, Suite 200
Scarborough, ON M1S 1V3

## உலகமே செவி மடுக்கும் தலைவரின் மாவீரர் உரை அடுத்த வாரம்

**செப்பர்ட்- டொன்மில்ஸ் புதிய ரயில் பாதை இன்று திறந்து வைக்கப்படுகின்றது.**
விபரம் உள்ளே...

## ஸ்காபரோவில் இந்திய இராஜாங்க அமைச்சர்


படம்: சத்தியன்

இந்தியாவில் வெளிநாட்டு விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் திரு. டிக்விஜேசிங் கடந்த வாரம் கனடாவிற்கு இராஜாங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவர் ஸ்காபரோவில் பிரபல ஹோட்டல் மண்டபத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு சில ஈழத்தமிழ் அன்பர்களையும் சந்தித்தார். இங்கே காணப்படும் படத்தில் இந்திய அமைச்சருடன் ஸ்காபுறோ பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸ், லிங்கெயர் அதிபர் அன்ரனி செல்லராஜா, தமிழன் வழிகாட்டி செந்திலாதன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## ஏழாலை நாகபூசணி அம்மன் தாயகம் திரும்பினார்

கனடாவில் கடந்த சில தினங்களாக தமது பக்தர்களுக்கு அருள்வாக்கு நல்கியும், விஷேட அம்மன் பூஜைகளையும் நடத்தி தனது பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்திய ஏழாலை வசந்த நாகபூஷணி அம்மன் கடந்த வாரம் தாயகம் திரும்பினார். விமானநிலையத்தில் அவரை வழியனுப்பி வைப்பதற்காக ஏராளமான பக்தர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் அங்கு திரண்டிருந்தனர். மீண்டும் மிக விரைவில் கனடாவிற்கு வருகைதந்து பக்தர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்ற தமமாலான இறைபணியை மேற்கொள்ளவுள்ளதாக அம்மன் கூறிச்சென்றார்.



இங்கே காணப்படும் படத்தில் ஜெனரல் ரூர்ஸ் அதிபர் திரு. திருமதி செல்வா மற்றும் பல பிரமுகர்கள் அம்மன் அவர்களுடன் நிற்பதைக் காணலாம்.

கனடாவில் சன் ரிவி உங்கள் வீட்டை வந்தடைய அழையுங்கள்
துல்லியமான படம், நாடகம், பட்டிமன்றம்,
புதிய பழைய படங்கள், கிரிக்கெட் மற்றும் பல
பல வருடங்கள் வியாபாரத்தில்
நம்பிக்கை, நாணயம், உத்திரவாதம்
Seven Star Satellite 416-630-3339

## கிறிஸ்தவ இன்னிசை இரவு

நாளை சனி 23ம் திகதி மாலை 7 மணிக்கு 1428 கென்னடி வீதி (கென்னடி அன் உல்ஸ்மேயர்) தேவாலய மண்டபத்தில் 416-433-5465

GOREWAY DENTAL CENTRE
பிறம்ரன், மால்ரன், எற்றபிக்கோ, றெக்ஸ்டேல், டவுண்ஸ்வியு, மிசிசாகா நகரங்களுக்கு
வசதியான பல்வைத்திய நிலையம்
(905) 673-7874
DR. NIRMALA SIVA & DR. C YOGESWARAN
பற்களை ஒழுங்குபடுத்துதலும் இதர பற்சிகிச்சைகளும்
7125 Goreway Drive, Suite 206, Mississauga (Malton)
இலவச ஆலோசனைகளுடன் வாரத்தில் 7 நாட்களும் சேவை

ஸ்காபரோ நகரில் பற்கள் சம்பந்தமான சிகிச்சைகளுக்கு
டாக்டர் கோபால் கோபாலகிருஸ்ணன்
குடும்பப் பல் மருத்துவர்
*1910 Kennedy Rd., (Kennedy/Ellesmere)
416-299-7080
கிழமையில் ஏழு நாட்களும் சேவையுண்டு.

AJB TRAVELS
IATA
AWARD WINNER 1993/2000
"Try us first"
Tel: 416-412-0244
E-mail: sales@ajbtravels.com Web: www.ajbtravels.com
1900 Kennedy Road, at Ellesmere, Scarborough, Ont. M1P 2L8

ஓம் சாயிராம்
ஜெயசாயி நகை மாளிகை
WHOLESALERS AND RETAILERS
சகலவிதமான தரமான கைவண்ணங்கள்
கூடிய நகைத்தேவைகளுக்கு என்றும் நாடுங்கள்
Finest Quality 22k Gold and Singapore Jewellery
Expert Custom Jewellery and Repairs
3601 Lawrence Ave. E. #14, Scarborough, Ontario
Tel: (416) 431-1536 Fax: (416) 431-7712
Newin Centre, 2580 Sheppard Ave., Unit #45
Mississauga, ON (HWY 10 - Dundas)
Tel: (905) 270-1558 Fax: (905) 270-1553

OVER 8,000 FREE CIRCULATION EVERY WEEK IN CANADA


**எல்ஸ்மெயர்**
மீன் இறைச்சி மார்க்கட
இலங்கையிலிருந்து வரும்
ஓட்டி, ஓரா, நெத்தலி, கீளி, பாரை
விளை மீன் யாவும் எம்மிடம்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்
**ELLESMERE FISH & MEAT MART**
1243 Ellesmere Road, Scarborough, ON, M1P 2X8
**TEL/FAX: 416-285-8558**


உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள்
அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

TEL: 416-752-1524 FAX: 416-752-6703

# சிறு விளம்பரங்கள் உதயன்
# CLASSIFIED ADs


**வீட்டு இடியப்ப மெசின்**



வீட்டு மெசின் -> $249
வர்த்தக மெசின்
கை மெசின் -> $450
மின் மெசின் -> $1,490
மின் தேங்காய்துருவி
E-mail: webmaster@worldtamil.com
www.worldtamil.com
மோகன் P.Eng.:
Tel: (416) 243-6000
Cell: (416) 433-6006/Pgr: (416) 715-4371


## MATH TUITION
ஒன்ராறியோவின் பிரபல பாடசாலையில் புதிய பாடத்திட்டத் திற்கமைய MATH கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர் Yoga Balasingam அவர்களால் நடத்தப்படும் பிரத்தியேக கணித வகுப்புக்கள்.
**Math:** Grades 10 & 11
**Calculus:** Grade 12
**Algebra & Geometery:** Grade 12
**Limited number of students in each group*
** Gr. 12 (fun & calculus) will be started in Dec.*
call: (416) 286-2000

## HOPPER HUT
ஸ்காபரோ நகரில் சுவைமிக்க உணவு வகைகளை அருந்தி மகிழ எம்மிடம் வாருங்கள்
இடியப்பம் அதிவிஷேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்
880 Ellesmere Road
at Kennedy Unit 215
(416) 299-4311

## BASEMENT for RENT
Steeles / Middlefield
2 bedroom, separate entrance, TTC, school, mall, shopping complex, cable, parking சகல வசதிகளுடன் basement வாடகைக்கு உண்டு.
Available Janurary 1st, 2003
**Call:**
**(905) 472-7912**

## BASEMENT for RENT
Brimley / Steeles
2 bedroom, TTC, school, shopping complex சகல வசதிகளும் கொண்ட basement வாடகைக்கு உண்டு.
**Call:**
**(905) 944-1666**

## ACCESS ACCIDENT BENEFITS INC.
சட்டபூர்வமாக நீங்கள் பெறக்கூடிய உச்சப்படியான பணத் தொகையினை பெற்றுத் தருவோம்.
வாகனவிபத்து நஷ்டஈடு
ஊனமுற்றோர் நஷ்டஈடு
All Traffic Tickets
பங்காளிகள் பிணக்குகள்
வீட்டுக் காப்புறுதி
உரிமை கோரல
கனடாவில் பேரம் பேசும் 23 வருட அனுபவம்
(416) 733-8880

## BASEMENT for RENT
McCowan / Steeles
1 large bedroom, large hall, TTC, shopping complex, school சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
CALL:
(905) 479-2671

## BASEMENT for RENT
Albion / Finch
1 bedroom basement, separate entrance, close to Humber College சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Available December 1st
Call: (416) 835-6790

## BASEMENT for RENT
Morningside / Ellesmere
Basement and rooms are available. Close to U of T
Contact:
(416) 282-3239

## BASEMENT for RENT
Nielson / McLevin
2 bedroom, separate entrance, washer & dryer, cable, parking, close to TTC, school, mall சகல வசதிகளுடன் basement est வாடகைக்கு உண்டு.
**Available Dec. 15th**
(416) 287-1106

## Live-in Nanny Wanted
Need a live-in nanny for a family with a 7-year-old child.
**Living in Scarborough, Toronto**
(416) 491-4558

## BASEMENT for RENT
Markham / Lawrence
சந்திப்பிற்கண்மையில் TTC, பாடசாலை, கடைகள் போன்ற வசதிகளுடன் கூடிய நிலத்திற்கு மேலேயுள்ள 1 bedroom basement வாடகைக்கு உண்டு.
**Available from December 1st**
Call: (416) 438-6735

## HOUSE for RENT
*Brampton* Queen / Bramilea
சந்திப்பில் 4 bedroom சகல வசதிகளுடன் (cable, parking), வீடு வாடகைக்கு உண்டு. (முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும்.
416- 999-7380
905 -458-6816

## Home Child Care
Neilson / Sheppard
*Home child care by quailified and experienced ECE. Safe home and garden. Lots of toys, indoor and outdoor activities.*
Contact Kamala at:
(416) 724-7245

## FOR SALE
63 Pilkey Cresent
Best deal in town!
SEMI DETACH
Hi, it is #9 Hurry up!
Call Shahid: *office:*
(905) 470-9800
*cell:*
(416) 910-8004

## APARTMENT for RENT
McCowan / Hwy 7
1 bedroom basement for rent.
All kinds of facilities
**Available Immediately**
Call:
(416) 414-5562

## BASEMENT for RENT
Donmills / Eglinton
சந்திக்கு மிக அருகாமையில் 1 bedroom, separate entrance, cable, parking சகல வசதிகளுடன் basement வாடகைக்கு உண்டு.
**Call Nathan: (416) 425-1149**
*(Weekdays 5pm to 10pm, Saturday & Sunday 9am to 9pm)*

## வீட்டுவேலைக்கு ஆள் தேவை
அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் வீட்டு வேலைக்கு ஆள் தேவை. தங்குமிடவசதி, போக்கு வரத்து வசதி என்பன செய்து தரப்படும்.
**தொடர்புகட்கு:**
Sarui 416 - 565 6221
905 - 472 8038

## அறை வாடகைக்கு
Sheppard / Nelison
தனி நபருக்குரிய ஒரு அறை வாடகைக்கு உண்டு.
**தொடர்புகட்கு:**
*(சனிக்கிழமை எந்நேரமானாலும் தொடர்பு கொள்ளலாம்)*
(416) 754-9202

## CONDO for RENT
Neilson / McLevin 480
1 Bedrooms, close to TTC, schools, and malls சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Parking Available.
**Available from Janurary 1st, 2003**
(905) 471-3972

## BASEMENT for RENT
Brimley / Finch
**SEPARATE ENTRANCE.** சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Call:
(416) 332-1230
cell:
(416) 771-8041

## தமிழீழம், நல்லூரில் வீடு விற்பனைக்கு
கோவிலுக்கருகாமையில் 4 பரப்பு காணி, சுற்றிவரமதில், இரட்டைகேற், 5 அறை, குசினி, கராஜ், 2 மலசலகூடம் குளியல் அறை, மா பலா தென்னை சகல வசதியுடன் விற்பனைக்குண்டு.
*தொடர்புகொள்ளவும்*
*பி.ப. 5 மணிக்குப் பின்னர்*
(416) 431-5789

## Basement for Rent
McCowan / Steeles
1 bedroom basement, separate entrance, cable, parking, TTC, school, shopping mall சகல வசதிகளும் கொண்ட basement வாடகைக்கு உண்டு.
Call:
(905) 471-8156

## மணமகன் தேவை
கனடாவில் வசிப்பவரும் 37 வயதுடையவரும் விவாகரத்து பெற்றவரும், கத்தோலிக்க சமயத்தை சேர்ந்தவருமான பெண்ணுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. பெண் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
(416) 438-7851

## BASEMENT for RENT
Middlefield / Denison
புதிதாக அமைக்கப்பட்ட 1 அறை கொண்ட basement வாடகைக்கு உண்டு. Separate entrance, free cable and parking. Close to school, TTC, & schopping.
Call: (905) 471-4953

## BASEMENT for RENT
Brimley / Ellesmere
1 Bedroom basement, separate entrance, parking, cable, TTC சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
CALL:
416 -438-2442
905- 474 2060

## Apartment for Rent
Morningside / Ellesmere
2 bedroom condo with 2 full bathrooms, den & parking lot. Cable/utilities. Close to TTC & U of T.
**Available Immediately**
Call Viji:
(416) 450-6438
(416) 289-4479
Kajan: (647) 271-4479

## OFFICE SPACE
Finch / Kennedy
800 சதுர அடிக்கு மேற்பட்டது, திறமையான சுற்றாடல், அலுவலகங்கள் கொண்ட இடம், Steeles சந்திப்பில், car parking, school, வைத்தியவசதிகள் சகல வசதிகளுடன் உண்டு. விலை: **$120,000**
விருப்பமுள்ளவர்கள் தொடர்புகளுக்கு:
Ms. Wan: (416) 661-9425

## CAR for SALE
89 Civic CX
90 EXR
93 Corrolla
94 Accord LX
96 Camry LE
97 Corrolla SD
Call Prem:
(416) 803-5813
(416) 520-3212

**STORE BASEMENT FOR RENT**
*(Tution, Vocal music, etc..)*
**1235 Ellesmere Road**
**Call: (416) 752-1524 *or* (416) 884-0005**

**கடை விற்பனைக்கு**

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டு இருக்கும் குறோசறி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
(416) 787-1995

**Office for Rent**

Medical office available in a High traffic and Demand area for General Practitioner to rent with lab, physiotherapy, and pharmacy in the building complex.
Call :
**(416) 282-9320 for details**

**மணமகன் தேவை**

யாழ் இந்து வேளாளகுலத்தில் பிறந்த விவாகரத்துப்பெற்ற குழந்தைகள் இல்லாத பெண்ணிற்க்கு சகோதரர் தகுந்த வரனைத் தேடுகின்றார். பெண் அமெரிக்காவில் **Green Card** உடன் உத்தியோகம் பார்க்கின்றார். 45 இருந்து 53 வயதிற்கு உட்பட்ட வரன் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு
(416) 429-8169

சிறந்த சேவை
மகிழ்ச்சிகரமான விளைவில்

Century 21 #1 Office in Canada

Percy Fulton Ltd.
10 Years Champion
24 Hours / 7 Days
**Bus : 416-298-8200**
**Fax : 416-298-6602**



**Mohan Subramaniyam**
Sales Representative
Residential & Commercial
Real Estate Marketing
**At its Best!**



பிரதம ஆசிரியர்: ஆர். என். லோகேந்திரலிங்கம்

"உதயன்" வெளியீட்டாளர்கள்
**Head Office: 'UTHAYAN PUBLISHERS**
1235 Ellesmere Road
Scarborough, Ont. M1P 2X8 Canada
**Tel: 416.752-1524**
**Fax: 416.752-6703**

**'UTHAYAN PUBLISHERS**
**Regional Office in Germany**
**P. O. Box: 750162,**
**60531- Frankfurt**
**Germany**
**Tel: (+49)69-693774**
**Fax: (+49)69-694442**

*Chief Editor:* R. N. Logendralingam
*Graphic* : Suthaharn, Rani & Pathma
*Advertising & Circulation Manager* : S. J. Sothy
*Printers* : Weller Publishers Canada
*Europe Edition; Managing Editor:* Sripathy Sivanadiyan
**E-mail: uthayan66@hotmail.com**



**Basement for Rent**
**Neilson and Finch**

Close to 24 hrs bus service, close to school, and shopping center.

(416) 297-6262
(416) 328-1348

**வீடு வாடகைக்கு**
**House for Rent**
**Kennedy/Eglinton**
சந்தியில் உள்ள மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. பாடசாலைகள் மற்றும் வசதிகள் அருகில் உள்ளன. அமைதியான சூழல்.
Convenient Location
Please Call (416) 264-3899

**Basement for Rent**

**Markham/Denison**
2 bedroom basement for rent. Separate entrance, close to schools, TTC and shopping mall. Available Immediately.
(905) 201-9726
(416) 737-4603

**Room for Rent**

**Middlefield and Elson**
2 அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது. பாடசாலை, கடை, TTC, அருகில் உள்ளது. சாப்பாட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**(416) 520-0496**


## உதயன் கதிரோட்டம்

# உலகமே செவிமடுக்கும் தலைவரின் ஓருரை

மாவீரர் வாரம் களை கட்டத் தொடங்கிவிட்டது. மாவீரர்களை இழந்த சோகம் ஒரு புறம் இருந்தாலும் அவர்களின் தியாகத்தினால் ஏற்பட்ட தீரம் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவரும், போராளிகளும், பொதுமக்களும் உற்சாகமாக அவர்களின் வீரச்சாவை வியந்து பாராட்டும் விழாக்களின் வாரமிது. இந்த வாரத்திற்கு முத்தாய்ப்பு வைப்பது போல் அமையவுள்ளது தலைவரின் மாவீரர்நாள் உரை ஆரம்ப நாட்களில் சாதாரணமாக கேட்கப்பட்டு வந்த இந்த உரையானது தற்போது உலகமே கேட்டு வியக்கும் உரையாக எழுச்சி பெற்றுள்ளது. உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் மட்டுமல்ல ஏனைய இனத்தவர்களும் 'இவ்வாண்டு தலைவர் என்ன சொல்லப்போகிறார்' எனப் பேராவலோடு எதிர்பார்த்து நிற்பது யாவரும் அறிந்த உண்மை.

இவ்வாண்டு தலைவரின் மாவீரர் உரை சமாதானத்தின் ஆரோக்கியமான அத்திவாரத்திலிருந்து வரும் உண்மையான செய்திகளை கொண்டுவரும் என்று உலகமே காத்து நிற்கின்றது. மறைந்து போன மாவீரர்களின் நினைவுகளோடு இவ்வாரத்தின் புனிதத்தை நாம் புரிந்து கொள்வோம்.

## முக்கிய அறிவித்தல்

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மற்றும் நாட்காட்டி பற்றிய அண்மைக்கால பொய்யான விளம்பரம் சார்பாக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகிறது.

எமது நோக்கம் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க முறையினை மக்களுக்கு சரியாக கொடுப்பதாகும். கனடாவில் உள்ள ஆலயங்கள் எம்மை கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நாம் இங்கு இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் - நாட்காட்டி வெளியிடுகின்றோம். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கனடாவுக்கான சகல வெளியீடுகளும் அவர்களது பஞ்சாங்கத்தில் 2ம் 3ம் பக்கத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டவாறு பிரமஸ்ரீ இ. வெங்கடேச ஐயரால் கணிக்கப்படுகிறது. நாட்காட்டி வெளியிடப்படும் வருட கடைசி மாதங்களில் பொய்யான செய்திகளை விளம்பரம் செய்யும் மிகவும் கீழ்தரமான செய்கைகளை இட்டு நாம் விசனப்படுகின்றோம்.

எம்மால் வெளிவிடப்பட்ட விரத அட்டவணைகளில் குறிப்பிட்ட சகல விரதங்கள், மாத சக்கிராந்தி அபிசேகங்கள் மிகவும் சரியாகவே குறிக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் புதிய வருடப்பெயர் சுபானு வருடம் என்பது அச்சுத்தவறுதலாக சித்திரபானு என குறிக்கப்பட்டதை நல்ல எண்ணம் கொண்டவர்கள் புரிந்து கொள்வார்கள்.இந்த புனைப்பெயரைக் கொண்டவர்களின் அரை குறையாக கற்றுக்கொண்ட கணிதப்படி விரதங்கள் எப்படி வந்தாலும் அது அவரது பிரச்சனை எமது அல்ல. இந்த புனைப்பெயர் வழி வாக்கிய பஞ்சாங்க சுலோகங்கள் ஒன்று இரண்டை பிழையாக விளங்கிவிட்டு இது தான் சரி என காலத்துக்கு காலம் முரணாக வாதிடுவது வாக்கிய பஞ்சாங்க மரபுக்கும் இந்து மதத்துக்கும் உகந்தது அல்ல. கீழ்தர வர்த்தக நோக்கம் கொண்டவர்களும் தம் கணித மரபையும், சொந்த பெயர் விபரத்தை வெளியிட முடியாத தப்பு பெயர்வழியால் ஏற்படும் சாப கேடுகள் நீங்க எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டி வெளியீட்டாளர்கள் Tel: (416) 760-6509


**பகுதி நேர வேலைவாய்ப்புக்கள்**
கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் பத்திரிகை நிறுவனமொன்றில் பின்வரும் பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் உள்ளன
- அலுவலக உதவியாளர் (கொம்பியூட்டர் அறிவு அவசியம்)
- உதவி ஆசிரியர்கள்
- தமிழ் தட்டெழுத்தாளர்(கொம்பியூட்டரில்)
- பத்திரிகை விநியோகம் செய்வோர் (கடைகளுக்கும் வீடுகளுக்கும்)
- தயாரிப்பு உதவியாளர்கள்
- மொழிபெயர்ப்பாளர்கள் (ஆங்கிலம், தமிழ்)

விண்ணப்பங்களை பின்வரும் விலாசத்திற்கு தபால் மூலம், அல்லது தொலைநகலுக்கு அனுப்பி வைக்கலாம்
**Advertiser, 1235 Ellesmere Road, Scarborough. Ont. M1P 2X8**
**Fax: 416-752-6703**

# GENERAL TOURS & TRAVELS





**Lowest Air Fares to Colombo, Singapore, India & Other Destinations**

இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கான ஒழுங்குகள் மிகக்குறைந்த விலையிலும், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பிரயாணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

FARES ARE SUBJECT TO CHANGE BASED ON SEATS AVAILABILITY
ALSO CALL US FOR ANY DESTINATION ONE WAY FARE ON REQUEST
**1468 VICTORIA PARK AVE., SUITE 117 TORONTO ON M4A 2M2**
**TEL: (416) 755-8500** **FAX: (416) 755-5552**

**யாழ் செல்வதற்கான அனுமதி பெற்று டிக்கட்டும் ஒழுங்கு செய்து தரப்படும்.**

# கொலைகாரி ஹோமோல்கா பற்றிய புத்தகம் ஆங்கிலத்திலும் வெளியாகின்றது

பாடசாலை மாணவிகள் கொலைகாரி கார்லா ஹோமோல்கா பற்றிய சர்ச்சைக்குரிய புத்தகத்தை பிரெஞ்சில் எழுதிய ஸ்டீபன் வில்லியம் அந்த நூல் ஆங்கிலத்திலும் வருவதாக அறிவித்திருக்கிறார். *கார்லா- சாத்தானுடன் ஒரு ஒப்பந்தம்* என்ற தலைப்பில் வெளியாகும் அந்தப் புத்தகம் கிறிஸ்மஸ் அளவில் புத்தகக் கடைகளில் இடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒண்டாரியோ டீன் ஏஜினர் கிறிஸ்டின் பிரெஞ்ச், லெஸ்லீ மஹாவி ஆகியோரின் கொலைகளுக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச் சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஹோமோல்கா 12 வருட சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றார்.

அவர் நீதிமன்றத்திற்கு அளித்த உறுதி மொழியின் பிரகாரம் செய்தி ஊடகங்களுடன் கொலைகள் பற்றி அவர் எதுவும் கூறக் கூடாது. அதன் அடிப்படையிலேயே அவருக்கு குறைந்த அளவு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனது நாவலுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிய போது ஹோமோல்காவுடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டிருந்ததாக நாவலாசிரியர் கூறுகின்றார். ஹோமோல்காவும் தன்னுடன் ஒத்துழைத்ததாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். பிரெஞ்சு மொழி நாவல் வெளியானதைத் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு கொடுத்த உத்தரவாதத்தை ஹோமோல்கா மீறினாரா என்பதைக் கண்டறியும் பணியில் நயகரா பிரதேச பொலிஸார் ஈடுபட்டிருக்கிறார்கள்.

வாக்குறுதியை அவர் மீறியுள்ளார் என்பது தெரியவரின் அவரது தண்டனை மீளாய்வு செய்யப்படலாம். வில்லியம்ஸ் எழுதிய புத்தகம் ஹோமோல்கா தந்த தகவலின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அது உண்மையெனில் அவருக்கான தண்டனை மீளாய்வு செய்யப்படும் என்று கொலை செய்யப்பட்ட இளம் பெண்களின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வழக்கறிஞர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

# கியோடோ ஒப்பந்த அமுலாக்கல் திட்டம்

சீதோஷ்ண மாற்றம் தொடர்பான கியோடோ ஒப்பந்தத்தை சமஷ்டி அரசு எவ்வாறு அமுல்படுத்த எண்ணியுள்ளது என்பது வியாழக்கிழமை காலை நாடாளுமன்றத்தில் அதனால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் திட்டம் எடுத்துக் கூறுகின்றது. நாடாளுமன்றத்தில் பெரும் வாக்குவாதங்களை எழுப்பவிருக்கும் ஒப்பந்தம் தனிநபர்கள், தொழிற்துறையினர், அரசாங்கங்கள் தங்கள் தங்கள் பங்களிப்பினைச் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளது.

ஒவ்வொரு கனடியரும் தாங்கள் பாவிக்கும் சக்தியின் அளவைக் குறைப்பதன் மூலம் வெளியாகும் நச்சு வாயுக்களின் அளவைக் குறைக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. வெளியாகும் வாயுக்களின் அளவு வருடம் ஒன்றுக்கு 240 மேகா தொன்னால் குறைக்கப்பட வேண்டும் என அரசு விரும்புகின்றது. எரிபொருளின் விலை கண்டபடி அதிகரிக்காது என்றும் கியோடோ அமுலாகத்தினால் மக்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வெளியேறும் வாயுக்களின் அளவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களுக்கு சலுகை வழங்குவது பற்றியும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் தங்களது கோரிக்கைகளில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படாததால் மாகாணத் தலைவர்கள் கனடா அரசின் திட்டதினால் திருப்தி அடையப் போவதில்லை. ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட ஆரம்பிக்கும் போது ஏற்படக் கூடிய இழப்புகளை மீளளிப்புச் செய்யவதென்ற வாக்குறுதியை அரசு தர வேண்டும் என்று மாகாணத் தலைவர்கள் கோரியிருந்தார்கள். ஆனால் சமஷ்டி அரசு அப்படியான உத்தரவாதம் எதனையும் தர முன்வரவில்லை. அதே நேரம் எந்த ஒரு மாகாணமும் சமானமில்லாத அளவுக்கு ஒப்பந்த அலுலாக்கல் செலவீனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டி வராது என்று அது உத்தரவாதம் தந்துள்ளது.


**Rogers**

**Hi-Speed Internet**

**24.95** For 4 months

**Basic Cable**

*புதிய இல்லம் செல்கின்றீர்களா இலவசமாக இணைப்பை பெறுவதற்கும்*

**Digital Cable**

*தமிழ் தொலைகாட்சி சேவை மற்றும் இன்ரநெற் தேவைகளுக்கும் அழையுங்கள்*

Sunthar

416 564 6397

416 267 3024

(இந்தச் சலுகை எமது வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே)


# ஸ்காபரோவில் துப்பாக்கியுடன் பட்டப்பகலில் வீட்டினுள் நுழைந்து தாயையும், மகளையும் தாக்கிய கோஷ்டியினர்

அடுத்த அறையில் தாயாரும், சகோதரியும், நண்பர் ஒருவரும் இருந்த போதிலும் பட்டப்பகலில் வீட்டினுள் நுழைந்த மூவர் 20 வயது பிரேட் குரொதர் என்பவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் ஸ்காபுரோ இடம் பெற்றிருக்கிறது.

இலக்கம் 29 பின்டி பே புளோவாட் வீட்டினுள் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மூன்று நபர்கள் கைத் துப்பாக்கிகள் சகிதம் அத்துமீறி உள் நுழைந்தார்கள். அவர்களில் இருவர் பிரேட் குரோதரை பலவந்தமாக மாடிக்கு அழைத்துச் சென்று தாக்கினார்கள். அந்தச் சமயம் மூன்றாவது நபர் பிரேட் குரோதரின் தாயாரை மாடி அறை ஒன்றில் இருந்த பாதுகாப்பு பெட்டகத்தை திறக்கும்படி பலவந்தப்படுத்தினான். மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிரேட் குரோதர் கழுத்திலும் மார்பிலும் சுடப்பட்டார்.

எதற்காக அவர் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார், சுடப்பட்டார் என்ற விபரம் இன்னும் வெளியாகவில்லை. சந்தேக நபர்கள் மூவரும் கறுப்பர்கள் என்று கூறப்படுகின்றது. அவர்கள் அங்கிருந்து வெளியேறியதும் குரொதரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஸ்தலத்திலேயே அவர் மரணமானார்.


தீராத நோய்களைத் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

Dr.(Mrs.)K.வசந்துகுமார்

(அக்யுபஞ்சர் வைத்தியர்)

D.CA., M.A.C.F., M.A.C.A.N.A., M.CACA.

- காசநோய்(Asthma)
- நீரழிவுநோய்(Diabetes)
- மனத்தளர்ச்சி(Depressioon)
- ரைனிசம்(Rhintis)
- மூட்டுவலி(Rheumatism & Rheumatoid)
- சர்மவியாதிகள்(Skin dieseases)
- வயிற்றுவலி(Gastritis)
- தலைவலி(Headache, Sinustis)
- உடல்பருமன் குறைத்தல்(Loss of Weight)

முதலான தீராத நோய்களுக்கு அழையுங்கள்

Mon-Fri 9:30-12:00, 4:00-8:00

Sat. 9:00-1:00, 3:00-8:00

416 754 4024, 416321 5557

4565 Sheppard Ave. East, #205 McCowan & Sheppard

DR. SUGANTHY SUTHAGAR

டாக்டர் (திருமதி) சுகந்தி சுதாகர்

FAMILY DENTIST

குடும்ப பல் வைத்தியர்

CALL (416) 299 7466






❏ COSMETIC AND GENERAL DENTISTRY
பொதுவான பல் வைத்திய சேவைகளுடன் பற்களை அழகுபடுத்தல்

❏ FREE CONSULTATION
இலவச மருத்துவ ஆலோசனை

❏ ORTHODONTICS (BRACES) FOR ADULTS & CHILDREN
வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்

❏ SEDATION FOR NERVOUS PATIENTS

3410 SHEPPARD AVE. E., SUITE 311, SCARBOROUGH, ON. M1T 3K4 TEL: (416) 299 7466

THIS WEEK SPECIAL

Brampton
2 Bedroom Condo,
2 washroom
Balcony,
Hardwood Floor,
24 hr Security Guard,
Buy with $6250 Dp only
Must be seen.

உங்களுடைய மாதாந்த Rent ஐக்கொண்டு உங்களை வீட்டுக்குச் சொந்தக்காரராக்க எம்மால் முடியும்!

Mortgage Consultant



M.R. SHANKAR
416-453-6666

SPECIAL
• எங்கள் ஊடாக வீடு வாங்குபவர்களுக்கு Mortgage ஒழுங்குபடுத்தல் இலவசம்!
• உங்கள் ஊடாக வீடு விற்பவர்களுக்கு 1% Commission only!

IF WE CAN NOT ARRANGE THE MORTGAGE FOR YOU, NOBODY CAN

Over 10 years Experience
நாங்கள் வியாபார நிலையங்களை வாங்குவதிலும் விற்பதிலும் உதவுகின்றோம்

Bad Credit? Bankruptcy? New Immigrant? Low Income?
NOOOOO.....PROBLEM

உங்கள் எல்லாவிதமான credit பிரச்சினைகளுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு
Home Life Superstars R.E. Ltd. (Realtor, Member) Tel: 416-740-4000

Licenced Real Estator



ALEX (NAV) MALAHI
416-873-SOLD (7653)

Mortgage Special 5.35% fixed for 5 years

# மத்தியகிழக்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடி விமான சேவை- அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்

வெளிநாடு ஒன்றிலிருந்து நீண்ட காலத்திற்கு பின்னர் நேரடியாக விமானசேவை ஒன்று நடத்தப்படவுள்ளது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான முதலாவது சர்வதேச விமான சேவையை ஆரம்பிக்க கட்டார் விமான நிறுவனம் முன்வருமென தான் கருதுவதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கட்டாருக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் ரவி கருணாநாயக்க, கட்டார் அதிகாரிகளுடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தியிருந்தார். இதன் போதே யாழ்.குடாநாட்டில் பலாலிக்கும், கட்டாருக்குமிடையில் சர்வதேச விமான சேவையை நடத்த அந்நாடு முன்வந்திருப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பலாலி விமான நிலையத்தையும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு கட்டார் விரும்புகிறது. அத்துடன் இலங்கையில் கட்டுநாயக்க உட்பட பலாலிக்கும் தனது விமான சேவையை விஸ்தரிக்க அந்த நாடு விரும்புவதாகவும் அமைச்சர் கருணாநாயக்க தெரிவித்தார். எனினும், இந்த விமான சேவை எப்போது ஆரம்பமாகுமென அமைச்சர் கருணாநாயக்க தெரிவிக்காதபோதும் இது தொடர்பான இறுதி முடிவுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே மேற்கொள்வார் என்றும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கு தேவாரம் திருமுறைகளில் பயிற்சியளிக்க காஞ்சிமடம் முயற்சி

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தேவாரம் போன்ற திருமுறைகள் மற்றும் பூஜை முறை களில் இலவசமாகப் பயிற்சி அளிக்க காஞ்சி மடம் தயாராக உள்ளது என காஞ்சி ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தெரிவித்தார்.

தஞ்சையை அடுத்த திருமலை சமுத்திரம் சாஸ்த்ரா நகர் நிலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வீடியோ மாநாட்டு வசதி மூலம் கோலாலம்பூரில் கூடியிருந்த தமிழர்களிடம் தமிழும் தமிழ் சார்ந்த தெய்வீகமும் என்ற தலைப்பில் ஞாயிற்றுக்கிழமை ஜயேந்திரர் உரைநிகழ்த்தினார்.

நமது சமுதாயத்தில் மட்டும்தான் அனைவரையும் சகோதரர்கள் என அழைக்கிறோம். பெரியபுராணத்தில 63 நாயன்மார்கள் சொல்லப்பட்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களது கடமையை நிறைவேற்றியுள்ளனர். ஒவ்வொருவரும் தங்களது கடமையை நிறைவேற்றினால் கடவுள் காட்சியளிப்பார். இஸ்லாமியர்கள் தினசரி 5 வேளை தொழுகின்றனர். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவாலயம் சென்று வழிபடுகின்றனர். நம்மிடையே நாகரிகம் காரணமாக கோயில் சென்று சாமி கும்பிடுவது குறைந்து வருகிறது. தினமும் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும். அவ்வாறு வழிபட்டால் சந்தோஷம் கிடைக்கும்.

எந்த இடத்திலிருந்தாலும் கடவுள் மீது நம்பிக்கை வேண்டும். நமது சமயத்தையே நாம் கடைப் பிடிக்க வேண்டும். ஒரு மரத்தில் இரு கிளைகள் போன்றது சைவமும், வைணவமும் ஆண்டவன் ஒருவர்தான்.அவருக்கு பல்வேறு வடிவங்கள் உள்ளன. மலேசியாவில் உள்ளவர்கள் அங்குள்ள மக்களுடன் ஒற்றுமையுடன் வாழவேண்டும். நமது சமயத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது. அங்கு கோயில்கள் கட்டி இந்து சமயக் கோயில் எனப்பெயர் வைக்க வேண்டும். வேத ஆகமப்படி பூஜை நடத்த வேண்டும். கற்பூரம் காட்ட வேண்டியது அவசியம். திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நாட்டைச் சீரழித்து வருகின்றன. அத்தோடு தற்போது பத்திரிகைகளும் சேர்ந்துள்ளன. 4.5 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்ட இராமாயணம் உள்ளிட்ட 24 000 ஸ்லோகங்களைக் கொண்ட இணையத் தளமும் தொடக்கி வைக்கப்பட்டது.

# ஒஸ்லோ மகாநாட்டில் இந்தியாவையும் பங்குபற்ற வைக்க இலங்கை தீவிர முயற்சி

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெற விருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், அமைப்புகளின் மாநாட்டில் இந்தியாவும் கலந்து கொள்ள வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்ப்புடன் தீவிரமாக முயற்சி எடுத்து வருகின்றது.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு புதுடில்லியை வலியுறுத்துவதற்காக இரு அமைச்சர்களையும் அரசு அங்கு அனுப்புகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொர கொடவும், கப்பல்துறை, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீமும் வெள்ளிக்கிழமை புதுடில்லிக்கு பயண மாகின்றனர். இதேவேளை, கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் வெஸ்ட்பேர்க்கும் டில்லி செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா? என்பது குறித்து இந்தியா இதுவரை தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. மாநாட்டில விடுதலைப் புலிகளின் தரப்பில் அந்த அமைப்பின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொள்கிறார். விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்திருப்பதால் அந்த அமைப்பின் பிரதிநிதி கலந்து கொள்ளும் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது அரசியல் ரீதியாக வாஜ்பாயின் பாரதீய ஜனதா தலைமையிலான அரசாங்கம் மீது கடுமையான விமர்சனங்கள் ஏற்படலாமென இந்திய அரசு தரப்பினர் கருதுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம், ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பங்கேற்காவிடில் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் இந்தியாவின் பங்களிப்பை முழுமையாக இழந்து விடக் கூடுமென்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. இந்த விடயம் குறித்து இந்திய வெளி விவகார அமைச்சு பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து இன்னரும் இந்தியா முடிவெடுக்கவில்லை என்றும் இது குறித்து பரிசீலனை செய்து வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளமாட்டாது என்று முன்னர் வெளிவந்த செய்திகளை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராட்டியிருக்கிறது. அதேசமயம் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்த போதும் மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

அதனால், இந்தியாவும் பங்கேற்க முடியுமென்றும் ஆனால், அரசியல் ரீதியான விமர்சனங்களைக் கருத்தில் கொண்டே புதுடில்லி தயக்கம் காட்டுவதாகவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இந்தியாவுக்குச் செல்லும் இரு இலங்கை அமைச்சர்களும் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹா, நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங் உட்பட பல இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளனர். ஒஸ்லோவில் இந்தியத் தூதுவராக இருக்கும் கோபாலகிருஷ்ண காந்தியை மாநாட்டில் பங்கேற்குமாறு இந்தியா அறிவுறுத்தும் என்று முதலில் செய்திகள் வெளிவந்தன. ஆனால், அவ்வாறு தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?

YOGI & PARTNERS

உங்களது காப்புறுதி நிறுவனம் உங்களில் ஆதாயம் தேடவிடாதீர்கள்.
உங்கள் உரிமைகள், ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் குறித்து ஆலோசனைகள் பெற எம்மை நாடுங்கள்.
தவறு உங்களுடையதாயினும்..

உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்



EAST OFFICE
1920 Ellesmere Rd., Suite: 110
Scarborough, Ont. M1H 2V6
Tel : (416) 289-4141

அனுபவம்மிக்க பல காப்புறுதி ஆலோசகர்கள்
எமது நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.
யோகி தம்பிப்பிள்ளை

WEST OFFICE
4 John Street, Suite 10,
Toronto, Ont. M9N 1J3
Tel : (416) 241-9292

# உள்ளூர் செய்திகள்



Earo ELECTRIC
24hrs
அனைத்து மின் இணைப்பு திருத்த வேலைகளுக்கும்
Licensed Electrician
Maniam : 416-289-9393
☐INDUSTRIAL
☐RESIDENTIAL
☐COMMERCIAL


## பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 77 வது பிறந்ததினம்

வெஸ்டன்-திருச்செந்தூர் வேல் முருகன் (Weston/Finch 2400 Finch Ave. West # 10 Weston, Ont (416) 744-7351 ஆலயத்தில் உள்ள சாயி மந்திராலய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 24ம் திகதி நவம்பர் மாதம் சாயி பக்தர்களால் கொண்டாடப்பட உள்ளது. சாய் பக்தர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## ஸ்காபரோ சாயி சமித்தியினரால் நடத்தப்படும் பாபாவின் 77 வது ஜெயந்திதினம்

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் நடத்தப்படும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 77 வது ஜெயந்திதினம் எதிர்வரும் 23ம் திகதி நவம்பர் மாதம் சனிக்கிழமை மாலை 5 மணி -8.30 மணிவரை நடைபெற இருக்கிறது. நாதஸ்வர வித்துவான் கலாசூரியர் அளவையூர் திரு. N.K.பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் பஜனை, ஊஞ்சல், வைபவம் என்பனவும் இடம்பெறும். அனைவரும் கலந்து கொண்டு பகவான் பாபாவின் அருளை பெறுமாறு ஸ்காபரோ சாயி சமித்தியினர் அழைக்கின்றனர்.

Hot Line: (416) 410-3423

## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயமண்டல மகர விழாவும் சபரிமலை யாத்திரையும்

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் 16-11-2002 திகதி சனிக்கிழமை மண்டல மகர விரத பூசையும் மாலை அணியும் வைபவமும் ஆரம்பமாகி தினமும் மாலை 6.30 மணிக்கு ஸ்நபன அபிசேகமும் விசேட படிப்பூசையும் வசந்த மண்டபபூசையும் நடைபெற்று ஐயப்ப பெருமான் சரணகோசத்துடன் வீதியுலா வரும் காட்சியும் 21.01.2003 வரை நடைபெறும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் பகல் மண்டலபூசை திருவிழா நடைபெற்று வருகிறது. 13.12.2002 வெள்ளிக்கிழமை மாலை அணிந்த சுவாமிமார்களின் திருவிளக்கு பூசையும் 21.12.2002 சனிக்கிழமை சுவாமிமார்களினால் லட்சார்ச்சனையும் இடம்பெறும். 25.12.2002, 26.12.2002 ஆகிய திகதிகளில் விரதத்தின் முக்கிய நிகழ்வான நெய் நிறைக்கும் வைபவம் நடைபெறும். மண்டல மகர பூசை காலங்களில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து ஐயப்பபெருமானின் அருட்கடாச்சத்தை பெறுமாறு அன்புடன் அழைக்கின்றனர் ஆலய அறங்காவலர் சபையினர். சபரிமலை செல்லவிருக்கும் மாலை அணிந்த சுவாமிமார்கள் 27.12.2002 திகதிக்கு முன்னர் ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு 416-321-6104

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட் கொடையின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிவாராக! என்வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பெனென உறுதி கூறுகின்றேன் நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பற்ற வேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 தினங்களுக்குள் இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்பவரின் தேவை நிறைவேறும். இச் செபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி

## இந்திரசிகாமணி சங்கரவேலுப்பிள்ளை கனடிய சட்டத்தரணியானார்



இலங்கை சட்டத்தரணியான திரு. வே. இந்திரசிகாமணி 1987 ல் இருந்து 1991 வரை கனடிய குடிவரவு இலாகாவிலும் அதன் பின்பு குடிவரவு அகதிசபையில் பதில் உதவி பதிவாளர் ஆக பணி புரிந்து தற்பொழுது வழக்கு அதிகாரியாக (Refugee Protection Officer) ஆக பணிபுரிந்து வருகின்றார். அண்மையில் கனடிய சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்து கொண்டார்.

இந்திரசிகாமணி அவர்கள் கணக்காளரும் சட்டத்தரணியுமான காலஞ்சென்ற திரு. சங்கர் வேலுப்பிள்ளையின் புதல்வர். 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து தமிழுக்கும் இலக்கியத்திற்கும் சமயத்திற்கும் பணியாற்றிய வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கபிள்ளை அவர்களின் பூட்டனாவார்.

தொடர்புகளுக்கு: (416) 286-7462

## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 11 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் நவம்பர் மாதம் 24 ந்திகதி ஞாயிற்றுக்கிழமை 2002ம் ஆண்டு காலை 10.00 மணிக்கு, 150 டீழசழரபா னுசளைந ல் அமைந்துள்ள ளுஉயசடிழசழரபா ஊளைஉ ஊநவெசந மண்டபத்தில் நடைபெற உள்ளது. மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரிபழைய மாணவர்கள், மாணவிகள், அவர்களது குடும்பத்தினர்கள், நலன் விரும்பிகள், நண்பர்கள், அனைவரும் தவறாது சமூகமளித்து புதிய நிர்வாக சபைத் தேர்விலும் நடப்பு ஆண்டின் செயல் திட்டங்களை வகுப்பதிலும் பங்களிப்புச் செய்யுமாறு சங்கத்தின் செயற்குழுவினர் அழைப்பு விடுக்கின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு: கனேசலிங்கம்: (416) 499-6248, சத்தியகுமாரி (416) 431-2176, விஜயகுமார் (416) 439-8031, அரவிந்தா (416) 286-0512, மகேந்திரநாதன் (416) 419-6923

## மனவெளி கலையாற்றுக்குழு தொடர்பூடகங்களுக்கான அறிவித்தல்

தீவிர நாடகங்களை சீரிய முறையில் அரங்காடல் நிகழ்வுகள் மூலம் மேடையேற்றி வரும் மனவெளி கலையாற்றுக் குழுவின் பத்தாவது அரங்காடல் எதிர்வரும் மார்ச் khjk;9k;jpfjp 09.03.2003 Qhapw;Wf;fpik) thHld ;& Hwy 7 சந்திக்கு அருகாமையிலுள்ள மார்க்கம் தியேட்டர் அரங்கில் நண்பகல் 1 மணிக்கும், மாலை 6 மணிக்குமாக இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது.

மேற்கண்ட அறிவித்தலை உங்கள் செய்தி ஊடகத்தினூடாக மக்களுக்கு அறியத்தருமாறு மனவெளி கலையாற்றுக்குழு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

## ஞாபகார்த்த ஒன்றுகூடல்

அமரர் சி. சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர் பரமேஸ்வரா கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் ஞாபகார்த்த ஒன்றுகூடல் 1.12.2002 மாலை 4 மணிக்கு கனடா கந்தசாமி கோவிலில் (20 Nugget Ave. Scarborough) நடைபெறவுள்ளது. அமரர் சி. சிவபாதசுந்தரம் அவர்களுடன் தொடர்புடையவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

குருமூர்த்தி (905) 890-9815, தவராஜா (416) 482-3702, குலம் (416) 287-8416



Waran S. Nathans
Sales Representative
ROYAL LePAGE

For All Your Real Estate Needs...
Buy • Sale • Lease
Residential & Commercial
Mortgage Financing • Free market evaluation • Flexible commission
Please Feel Free to call for Consultation
Tel: (905) 275-9400
Cell: (416) 804-1571
"You will succeed, if you Make the right move, With the right people, At the right time."

DON'T MISS IT....


DIXIE / BLOOR
3 Large BR
1X4, 1X2 Bath
Call for more details

# புதிய ஷெப்பர்ட் - டொன்மில்ஸ் ரயில் பாதை இன்று திறக்கப்படுகின்றது

ரொறன்ரோ வாழ் மக்களுக்கு மேலும் போக்குவரத்து வசதியினை இலகுவாக்கும் வகையில் 22.11.02 (இன்று வெள்ளிக்கிழமை) நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஷெப்பர்ட் - டொன்மில்ஸ் ரயில்வே பாதை திறக்கப்படுகின்றது. ரி.ரி.சி. நிர்வாகத்தால் ஒரு பில்லியன் டாலர் செலவில் அரசு அமைத்துள்ள இந்த இரயில்வே பாதை ஷெப்பர்ட் அவனியு கிழக்கு பகுதியில் (டொன்மில்ஸ்- லெஸ்லி- பெசார்ட்டின்- பேவியு- ஷெப்பர்ட் ரயில் நிலையம் வரை இணைக்கப்பட்டு பிற இடங்களுக்கு செல்லும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையிலும் விரைவு பயணம் மேற்கொள்ளும் வசதியாகும். இப்புதிய ரயில் பாதை திறப்பு விழா மிகவும் கோலாகலமான முறையில் இன்று மதியம் துவங்கி பொது மக்கள் அனைவரும் இலவசமாக இன்று ஒரு நாள் மட்டும் மதியம் 2.-00 மணி வரை பயணித்து விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கப்பட்டுள்ளனர். சனிக்கிழமையன்று ரி.ரி.சி. நிர்வாகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் மட்டும் இந்த ரயில் பயணம் அனுமதிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் தொடர்ந்து பிற சப்வேக்களில் நடைமுறையில் உள்ளது போல் செயல்படும்.

இன்று நடைபெறும் துவக்க விழா வெள்ளோட்ட நிகழ்ச்சியில் பொதுமக்கள் பங்குகொண்டு இன்புறும் வகையில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் சிற்றுண்டி முக்கியமாய் 3000 பேருக்கு உண்டு மகிழும் வகையில் ஓர் ராட்சத கேக் ஒன்றும் தயார் செய்யப்பட்டு அனைவருக்கும் விநியோகிக்கப்படும். டொன்மில்ஸ் சப்வே தொடங்கி ஷெப்பர்ட் சப்வே வரை உள்ள 5 ரயில்வே நிலையங்களிலும் விழாக்கோலத்துடன் புகைப்படக் கண்காட்சி, கலை மற்றும் சிறப்பக் காட்சிகள் கடைகள் சிற்றுண்டி நிலையங்கள் என பல்வேறு பொழுதுபோக்கு மற்றும் பயணிகள் வசதிகள் என மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது.

# ராஜகுரு மார்ஸல் ஆட்ஸ் அக்கடமி கராத்தே இரண்டாம் சுற்றுப்போட்டியில் மீண்டும் சாதனை



கனடா வாழ் தமிழ் மக்களின் மதிப்பிற்குரிய பாடசாலையானதும் தன்னிகரற்ற தற்காப்புக் கலையான கராத்தேயில் தற்பொழுது கனடாவில் சிறந்த ஒரு இடத்தைப் பிடித்து கராத்தேப் பயிற்சிக் கழகமாகிய ராஜகுரு மார்ஷல் ஆட்ஸ் அக்கடமியைப்ப ற்றிய விபரங்களை நேயர்களாகிய நீங்கள் பலமுறை எங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். ஆன்மீகத்தின் வழித்தோன்றலாய் அதற்கே எடுத்துக்காட்டாய் வாழ்ந்துவரும் ராஜகுரு ரவீந்திரனின் தலைமையிலும் ஸ்ரீராம் மாஸ்ரர் வைசாலி ஸ்ரீராம் வழிநடத்தலிலும் செயலாளர் ஸ்ரீ சுரேந்திரகுமாரின் இணைத்தோன்றலிலும் இப்பாடசாலையானது தற்பொழுது முன்னணியில் நிற்பதும் தெரிந்ததே. அத்தோடு இப்பாடசாலையில் வளர்ச்சிக்கு பல பிரமுகர்கள் உதவிக்கரம் கொடுத்தும், மாணவர்களும் அவர்தம் பெற்றோரும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் ஒத்துழைத்தள்ளார்கள். மேலும் கார்த்திகை மாதம் 17ம் திகதி 2002ம் ஆண்டு ஒன்ராரியோவில் நடைபெற்ற கிறான்- பிளிக்ஸ் இரண்டாம் சுற்றுப்போட்டியிலும் இப்பாடசாலையானது ஸ்ரீராம் மாஸ்ரரின் அயராத பயிற்றுவித்தலாலும் மாணவர்களின் இடைவிமாப் பயிற்சியாலும் இப்போட்டியீலம் அவர்கள் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். பைற்றிஸ் நொயிலா சென் நீக்லஸ் தங்கப்பதக்கத்தையும், காட்டா மனோபாலன் கந்தையா வெண்கலப் பதக்கத்தையும், பிறேமன் சுப்பிரமணியம் வெள்ளிப் பதக்கத்தையும் பைற்றிஸ் நிரோசன் வெண்கலப் பதக்கத்தையும், அரவிந்தன் சற்குணராசா வெள்ளிப் பதக்கத்தையும், பைற்றிஸ் ஸ்ரீலோஜன், ஸ்ரீஆனந்தன் வெண்கலப் பதக்கங்களையும், இப்போட்டியிலும் வென்றுள்ளார்கள்

அத்தோடு கடந்த புரட்டாதி மாதம் நடைபெற்று முடிந்த முதலாம் சுற்றுப் போட்டியிலும் இவர்கள் பல தங்கப், வெள்ளி பதக்கங்களைப் பெற்றுள்ளனர். அத்தோடு இவ்வெற்றிக்கு வழித்தோன்றலாகிய ராஜகுரு ரவீந்திரனும் அவரது மாணவராகிய ஸ்ரீராம் மாஸ்ரரும் இம்மாணவர்களின் வெற்றிக்கு வித்திட்டு வழிசமைத்துள்ளனர். நாமும் எமது குழந்தைகளை இப்பயிற்சிச் சாலையில் சேர்த்து இக்கலை தற்காப்புக்கு மட்டுமல்லாது தன்னடக்கத்திற்குரிய கலை என்பதை புரிந்து ஆவன செய்தோமானால் எமது சிறார்கள் தம் பொழுதை வீணே கழியாது சுயவிருப்புடன் இக்கலையைக் கற்று நம் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பேணிக் காப்பார்கள்.


Heritage
Scholarship Trust Plan
Distributed by
Allianz Education Funds Inc.
(Registered Education Savings Plans, RESPs)
WORRYING ABOUT YOUR CHILDREN'S FUTURE EDUCATION!




Are You Planning To Start An Education Savings Plan (RESP)?
If YES, get professional help and a free consultation about a Heritage RESP and the Canada Education Savings Grant (CESG)
receive up to 20% of your first $2000 contributed annually to an RESP maximum $400 per year per child
Offered by prospectus only.
Please call:
BAALA KUNARATNAM
Res: 416-385-1941
Fax: 416-385-2537
E-mail: respbaala@aol.com
(Dignity starts upon donating yourself & your time for good service for great purpose)




BAALA KUNARATNAM

EYE EXAM

கண் பரிசோதனை
OPTIMART



Served by Licensed Opticians
Bright Optical Opticians
Meet the optician and receive your glasses within an hour



தகுதி பெற்ற கண் பரிசோதகர்களால் ஒரு மணி நேரத்தில் உங்கள் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்!
Eye Glasses, Contact Lenses
We have excellent prices on colour contact lenses to change the colour of your eyes

416-266-3389
3150 Eglinton Ave.
(Markham & Eglinton)
Scarborough, ON M1J 2H2

416-690-4649
294 Main St. (at Danforth)
Professional Building
Toronto, ON M4C 4X5




Office Hours:
Mon-Fri: 10am - 8pm
Sat: 10am - 5pm
Sun: Closed



# ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு

எஸ். ஆர். ராஜபாலன் (B.Sc.(Hons) Cey., Diploma in Accounting

16ம் நூற்றாண்டில் இலங்கைத் தீவு போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்ட காலம் தொடக்கம் தமிழினத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

ஈழத்தமிழர்களின் பாரம்பரிய தாயக பிரதேசங்களை கைப்பற்றிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக கடந்த ஆறு நூற்றாண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெற்று வந்துள்ளன. எனினும் கடந்த 25 வருட காலப் பகுதியில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஓர் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தின.

1505ம் ஆண்டு முதல் இலங்கைத் தீவில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்வுகள் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த நிகழ்வுகளின் தொகுப்பான இந்த வரலாற்றுத் தொடரின் இறுதிப் பாகம் இவ்வாரம் முதல் ஆரம்பமாகிறது.

ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் பயனுள்ளதான இந்த வரலாற்றுத் தொடரை உங்கள் முன்பாக சமர்ப்பிப்பதில் உதயன் மகிழ்ச்சி அடைகிறது. - பிரதம ஆசிரியர்

## பாகம்-4

இந்த வரலாற்றுத் தொடரில் ஈழப்போர் (1,2,3), தற்போதைய சமாதான நடவடிக்கைகள் என்பன பற்றிய தகவல் தொகுப்பு இடம்பெறவுள்ளது

## ஈழப்போர்

1977ம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பித்த ஈழப்போர் மூன்று கால கட்டங்களாக நடைபெற்றுள்ளன

ஈழப்போர் -1 1977- 1986 செப்டம்பர்
ஈழப்போர் - 2 1986 ஒக்டோபர் - 1995 மார்ச்
ஈழப்போர் -3 1995 ஏப்ரல் - 2001 டிசம்பர்

ஈழப்போர் -1 1977- 1986 செப்டம்பர்

1978 பெப்ரவரி-4: ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு சிறிலங்கா சோஷலிச ஜனநாயகக் குடியரசின் அரசியல் சாசனத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா நிறை வேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதியாகினார். அதே சமயம் அடுத்த 6 வருடங்களுக்கு அவர் அந்தப் பதவியை வகிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.



அத்துடன் அமைச்சரவையை நியமனம் செய்வதற்கும் பாராளுமன்றத்தை கலைப்பதற்குமான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

1978 பெப்ரவரி 7- புதிய அரசியல் சாசனத்தின் கீழ் ரணசிங்க பிரேமதாசா பிரதமராக பதவிப் பிரமாணம் செய்தார்.



1978 ஏப்ரல் 11: விடுதலைப் புலிகளைத் தேடுவதற்காக புலனாய்வு பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை தலைமையில் வடபகுதிக்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழு முருங்கனில் வைத்து சுற்றி வளைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

1979 ஆடி 24: பயங்கரவாதத்தை தடை செய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தனது மருமகன் ரி.ஜே. விஜயதுங்காவை யாழ் மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை அதிகாரியாக நியமித்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா வருடம் முடிவதற்குள் இலங்கைத் தீவில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் பயங்கரவாதத்தை முற்றாக அகற்றும்படி உத்தரவிட்டார்.

அதே தினத்தில் தமிழ் பிரதேசங்களில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்தினார். இச்சட்டத்தின்படி இறந்தவர்களின் உடல்களை மரணவிசாரணையின்றி தகனம் செய்யலாம் என பாதுகாப்பு படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

1979 நவம்பர் 07- யாழ் குடாநாட்டில் ராணுவம் நிலை கொள்ளுதல் ஆரம்பமாகியது. சுன்னாகத்தில் வர்த்தக நிலையங்கள் அழிக்கப்பட்டன. யாழ் மாவட்டம் முழுவதிலும் அநேக இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதுடன் அநேக சித்திரவதை முகாம்கள் நிறுவப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஏராளமான இளைஞர்கள் காணாமற் போயினர்.

1980 மே 23: சிறிலங்காவில் தமிழ் உத்தியோக பூர்வமான மொழியாக ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.



1981 யூன் 18: அமைச்சர் காமினி திசநாயக்கா உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பல பிரமுகர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

யாழ்ப்பாண தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வதிவிடம் தீயிடப்பட்டது

ஈழநாடு பத்திரிகை காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டது


காரணம் எதுவும் கூறப்படாமல் மதகுருமார்கள் உட்பட ஏராளமான தமிழர்கள் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், துன்புறுத்தப்படுதல், காணாமற் போதல் என்பன ஆரம்பமாகின. (தொடரும்)


## டாக்டர் சபாபதி இரவீந்திரன்

## Dr. SABAPATHY RAVEENDRAN

B.D.S, M.S, F.D.S.R.C.S (Eng.), General Practitioner (Mainly Surgery)

பல வருடங்கள் இலங்கையிலும் இங்கிலாந்திலும்
விசேட பல்வைத்தியராகப் பணியாற்றிய அனுபவத்துடன்
இங்கு இரண்டு இடங்களில் சேவை புரிகிறார்



- முரசிலிருந்து இரத்தம் கசிவது, முரசு கரைவதைத் தடுத்தல்
- நோயுற்ற பழுதடைந்த பற்களைப் பாதுகாத்து மீளமைத்தல்
- பற்களை வெண்மையாக்குதல், ஒழுங்குபடுத்தல்
- பற்களின் அழகை மெருகூட்டுதல்
- ஞானப்பற்களை அகற்றுதல்
- பற்களுக்கிடையிலான இடைவெளியை நீக்குதல்
- நிரந்தரப் பல்கட்டுதல்
- வாய் சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை




SCARBOROUGH
(Kennedy & Finch)
3852 Finch Ave. East,
Units 303
Scarborough, ON
(416) 292-7004




MISSISSAUGA
(Dundas & Hurontario)
3025 Hurontario St.,
Unit 102
Mississauga, ON
(905) 270-7844

ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தின் உட்பிரகாரம் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்
- ஆலய நிர்வாக சபையில் கருத்து

## கனடா இந்து

# ஜனவரி 1, 2003 கனடா இந்துமத பீடத்தின் இரண்டாவது ஆண்டுவிழா

### இயல் - கவிஞர் சேரன் , இசை - திரு. வர்ண ராமேஸ்வரன், நாடகம் - திரு. இளையபாரதி

## 2002ம் ஆண்டின் முத்தமிழ் இளைஞர்கள் எனப் பாராட்டி இந்துமதபீட கருத்தரங்கில் உரை

கடந்த வாரம் நிகழ்ந்த கனடா இந்துமத பீடத்தின் காலாண்டுக் கருத்தரங்கில், தமிழ்ப்பிரிவினர் தமது அடுத்த ஆண்டுக்கான செயற்பாடுகளைச் சமர்ப்பித்தனர். அத்துடன் கனடா இந்துமத பீடத்தின் 2வது ஆண்டுவிழா கடந்த ஆண்டு போல ஜனவரி மாதம் 1ம் திகதி ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் நிகழும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

கனடா இந்துமத பீட தமிழ்ப் பிரிவும் ரொறன்ரோ துர்க்கை அம்மன் ஆலயமும் இணைந்து அண்மையில் தமிழ் மொழிக்கும் இந்து சமயத்துக்கும் புதிய பாடத்திட்டம் அமைத்து இலவச வகுப்புக்களை நிகழ்த்தி வருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே. இதே பாடத்திட்டத்தினைப் பின்பற்ற தமிழர்கள் வாழும் வேறு சில நாடுகளில் உள்ள கல்வி ஸ்தாபனங்களும் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும், பாடத்திட்டத்தில் மேலும் சில மாற்றங்களை செய்ய அந்த ஸ்தாபனங்கள் ஆலோசனை தெரிவித்துள்ளன என்றும் கருத்தரங்கில் கூறப்பட்டது.

கனடாவில் இயல், இசை, நாடகத் தமிழில் பல இளைஞர்கள் முத்திரை பதித்து வருகின்றனர். அவர்களில் இந்த ஆண்டின் இளைஞர்களாக கவிஞர் சேரன் அவர்களையும், திரு. வர்ண ராமேஸ்வரன் அவர்களையும், திரு. இளையபாரதி அவர்களையும் கனடா இந்துமத பீடத்தினர் வெகுவாகப் பாராட்டிப் பேசினர். திறமைகளை மெச்சுவதும், அடையாளம் காண்பதுவும் கலை வளர்ச்சியில் மிக அவசியம் என்று அங்கு கருத்துரைக்கப்பட்டது.

தமிழகக் கவிஞர்களுக்குள்ளும் தன்னை அடையாளப்படுத்தி, அங்கீகாரம் பெற்ற கவிஞராக கவிஞர் சேரன் திகழ்கிறார். அதுபோன்றே திரு. வர்ண ராமேஸ்வரன் அவர்களின் இசைப்பணியும் அமைந்திருக்கிறது. கனடாவில் தமிழ் நாடகத்துறையில் (வானொலி) நிகரில்லாத் திறமை கொண்டவராக திரு. இளையபாரதி அவர்கள் விளங்குகிறார். இவர்களைக் கனடா இந்துமத பீடம் பாராட்டுகின்றது என கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய கனடா இந்துமத பீடாதிபதி. சிவஸ்ரீ. தியாகராஜாக் குருக்கள் கணேஷ்சுவாமிகள் தனது உரையில் குறிப்பிட்டதாவது.

"திறமை உள்ளவர்கள் யார் என்றாலும், அவர்களை முன்வந்து பாராட்டுவது அவசியம். சாதி, மத பேதமின்றி, கட்சி, அமைப்பு, பேதமின்றி, தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்ற பேதமின்றி திறமை உள்ளவர்களுக்கு உரிய கௌரவம் அளிக்கப்படவேண்டும். கனடா இந்துமத பீட தமிழ்ப் பிரிவினர் 2002ம் ஆண்டின் முத்தமிழ் இளைஞர்கள் என்று பாராட்டியவர்களை, நான் குறிப்பிட்டது போல காய்தல் உவத்தலின்றி தெரிவு செய்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பாராட்டில் ஒரு பெறுமதி இருக்கவேண்டும். இன்னும் ஏராளமான இளைஞர்களால் இன்னும் சிறப்பான சாதனை செய்யமுடியும். இளைஞர்களுக்கு உரிய சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களைக் கொடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் விரும்பவேண்டும். நாளைய தலைவர்கள் இன்றைய இளைஞர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. இளைஞர்கள் மட்டுமல்ல மாணவர்களுக்கும் உரிய பாராட்டுக்களும் அங்கீகாரங்களும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்"

இவ்வாறு சிவஸ்ரீ. தியாகராஜாக் குருக்கள் கணேஷ்சுவாமிகள் கருத்தரங்கில் தெரிவித்தார்.

## ரொறன்ரோ துர்க்கைஅம்மன் ஆலயத்தில் விநாயக சஷ்டி விரத அனுஷ்டானம் ஆரம்பம் - தினமும் பஞ்சமுக விநாயகருக்கு அலங்கார யாக மண்டபத்தில் லட்சார்ச்சனை

உருவப் பொலிவும் அருட்பொலிவும் கொண்ட ரொறன்ரோ துர்க்கையம்மன் ஆலய விநாயகர் சந்நிதியில் வீற்றிருக்கும் "ரொறன்ரோ பிள்ளையார்", நிர்மாணிக்கப்பட்டிருக்கம் அலங்கார மண்டபத்தில் பஞ்சமுக விநாயகராக வீற்றிருந்து, லட்சார்ச்சனை பெற்று, அருள் பாலிக்கும் தெய்வீகம் கடந்த புதன் கிழமை நவம்பர் 20ம் திகதி ஆரம்பித்திருக்கிறது. டிசெம்பர் 9ம் திகதி வரை நிகழும் விநாயக சஷ்டி விரதத்தின் போது, தினமும் விஷேட அபிஷேகம், பூஜைகள், அர்ச்சனைகள் நிகழவிருக்கின்றன.

ஐந்து சிவாச்சாரியார்கள் ஒன்றாக இணைந்து நிகழ்த்தும் பஞ்சமுகார்ச்சனையும், திவ்விய அலங்காரங்களும் கண்ணையும் கருத்தையும் கவர்வது மட்டுமல்லாமல் விநாயகப் பெருமான்பால் மனத்தினை முற்றாகச் சரணடைச் செய்துவிடுகின்றன. தினமும் காலை 8.30க்கு அபிஷேகம் நிகழ்ந்து விஷேட பூஜைகள் நிகழ்கின்றன. மாலையில் மீண்டும் அபிஷேகம் நிகழ்ந்து நியாசார்ச்சனை, லட்சார்ச்சனை, விஷேட பூஜைகள் நிகழ்ந்து வருகின்றன. விநாயகப் பெருமானின் சஷ்டி விரதத்தினை அனுஷ்டிப்பவர்கள் தமது பெயர், ராசி, நட்சத்திர விபரங்களை ஆலயத்தில் அறிவித்தால் தினமும் அர்ச்சனையில் அவை சேர்த்துக் கொள்ளப்படும்.



ரொறன்ரோ துர்க்கையம்பாள் ஆலயத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமான்

டிசெம்பர் 9ம் திகதி கஜமுகாசுர சம்ஹார சூரன் போர் விழா நிகழவிருக்கிறது. தினமும் நிகழும் பூஜை வழிபாடுகளையும் அபிஷேகங்களையும் பக்தர்கள் யாவரும் தரிசித்து சகல விக்கினங்களையும் நீக்கும் விநாயகப் பெருமானின் அருள் பெறுமாறு ஆலயத்தினர் வேண்டிக்கொள்கின்றனர்.




ரொப் குவாலிட்டி பூக்கடை

ஏன் எல்லோரும் இங்கு வருகிறார்கள்? இவர்கள் இயற்கையை இயற்கையாக தருபவர்கள்.
அழகா? ஆன்மீகமா? அத்தனையும் ரொப் குவாலிட்டி பூக்கடையில் நிறைந்திருக்கிறது.
பூக்கள், பூமாலைகள், மணவறை, பூச்செண்டு, பூக்கூடை, பூசோடனைகள்
மலர் வளையம் பூச்சோடனைகள் casket அலங்காரம் casket spary
**மணவறைகளில் பல ரகங்கள் விதம்விதமாய் .... இன்னும் பல**

தொடர்பு கொள்க : பிள்ளை

**2871 Lawrence Avenue East**
**Scarborough**
**Tel : (416) 269 5522 Fax : (416) 269 9784**



# வரலாற்று முக்கியத்துவம் பெறப்போகின்ற ஒஸ்லோ மகாநாடு


எதிர்வரும திங்கட்கிழமை நோர்வேயில் நடைபெறவுள்ள ஒஸ்லோ உச்சி மாநாடு இலங்கைக்கு வெறும் நிதியுதவிகளை வழங்குவதுடன் நின்று விடப்போவதில்லை, ஈழத்தமிழர்கள் வரலாற்றில் முக்கியமானதாகவும் இநத மகாநாடு விளங்கப்போகின்றது. இலங்கையில் இருபது வருடங்களுக்கு மேலாக நீடித்து வந்த யுத்தத்திற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்போவதாகவும் அமைந்து விடப் போவதில்லை, இரண்டுக்கும் மேலாக- நாடு சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் தமிழர்களுக்கு எதிராக பெரும்பான்மையின அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்குமுறைகள், இனப் படுகொலைகள் மற்றும் பாரபட்சங்களுக்கு முடிவு கட்டக்கூடியதான தமிழர்களின் நீண்ட கால அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தான, ஒரு நாட்டிற்குள் இரு இனங்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் சுயாட்சி அதிகாரங்களுடன் வாழக்கூடிய அரசியல் தீர்வொன்றுக்கு வித்திடப் போவதாக ஒஸ்லோ உச்சி மாநாடு அமையும் என்றே அரசியல் பகுப்பாய்வாளர்கள் நம்புகின்றனர்.

இனப்பிரச்சினை ஆரம்பமான காலத்திலிருந்து அரசியல் தீர்வொன்றை பேச்சுவார்த்தை மூலம் காணுவதற்கு எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள், அவற்றின் பெறுபேறாக உருவான உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் எல்லாம் பேரினவாத சக்திகளால் கிழித்தெறியப்பட்டன. தமிழ்த் தலைமை களுடன் சிங்கள அரசாங்கங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் வெளியிலிருந்து பேரினவாத சக்திகள் எதிர்த்தன. பதவியிலிருந்த அரசாங்கங்களில் அங்கம் வகித்த முக்கியஸ்தர்கள் பலரும் அப்பேரினவாத சக்திகளுக்கு மறைமுகமாக உதவினர். அதனால் தான், அவ்வுடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட வேண்டியதாயிற்று என்பது வரலாற்று உண்மை. மாறி மாறி பதவிக்கு வந்த பேரினவாத அரசுகள் எல்லாம் பதவியைப் பிடிப்பதற்கு தமிழ்த் தலை மைகளுடன் உடன்படிக்கைகளை தேர்தலுக்கு முன்பும், தேர்தலுக்குப் பின்பும் செய்து கொண்டன. பதவியில் ஸ்திரமாக அமர்ந்ததும், பேரினவாத சக்திகளைத் தூண்டிவிட்டு அவ்வுடன்படிக்கைகளைக் கிழித்தெறிந்து வந்தன. சிங்களத் தலைவர்களின் துரோகச் செயல்கள் தமிழ் இளைஞர்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தின. மிதவாதத் தமிழ்த் தலைமையை கொழும்பு அரசுகள் நடத்தும் முறையைக் கண்டு கொதித்தன. பேரினவாத சிந்தனைகளையும், செயற் பாடுகளையும் முறியடிப்பதற்கும் தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகளை நிறுத்துவதற்கும் ஒரே மார்க்கம் போராளிகளாக மாறுவதே யென்று தமிழ் இளைஞர்கள் திடசங்கற்பம் பூண்டனர். தமிழர்களின் ஆயுத விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது. இருபது ஆண்டுகளாக நடைபெற்று வரும் விடுத லைப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. தமிழர்கள் தங்களின் ஏகப் பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தேசியத் தலைவராக பிரபாகரனையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்பின்னணியில் நோர்வே அனுசரணையுடன் சர்வதேச சமூகத்தின் ஆசியுடன் ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தையின் முதலாவது சுற்றின் இரண்டாவது அமர்வு முடிவுற்றநிலையில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார் த்தை ஆரம்பமாவதற்கு முன்பு அனுசரணையாளராக பங்கு வகிக்கும் நாட்டின் தலைநகர் ஒஸ் லோவில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் உச்சிமாநாடு நவம்பர் 25 இல் நடைபெற விருக்கின்றது. இனப்பிரச் சினை தோன்றிய சில வருடங்களில் 1957 இல் அப்போது பதவியிலிருந்த பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தந்தை செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். 45 ஆண்டுகள் கழித்து அஹிம்சைப் போராட்டம், ஆயுத விடுதலைப் போராட்டமாக மாறிய நிலையில் விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் நாட்டின் ஒரு பகுதி மற்றும் அரச படைகளுடன் சமமாக-இரு கடற்படைகள், இரு இராணுவங்கள் என்பன சர்வதேச அனுசரணையுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் பங்கு பற்றுகின்றது. இது இலங்கைத் தமிழின வரலாற் றில் மாத்திரமல்ல, உலகத் தமிழரின் வரலாற்றிலேயே இந்த மிலேனியத்திலே தனித்துவமான முக்கிய நிகழ்வாக அமையப் போகின்றது. ஒஸ்லோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் தமது கட்டுப் பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழ காவல்துறை நிலையங்களை அமைத்து வரும் விர்யம் ஆராயப் படும் என்று அரசாங்கத்தின் உட்துறை அமைச்சர் அறிவித்திருக்கின்றார்.

சொந்தமாக தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தனி இராணுவம், தனி கடற்படையை வைத்திருக்கும் விடுதலைப் புலிகள், பொலிஸ் படையை வைத்திருப்பது குறித்து ஒஸ்லோ மாநாட்டின் கவனத்திற்கு கொண்டு வரப்படுமென்று அரசு அறிவித்திருப்பது சிரிப்புக்கிடமான விர்யமாகவே அவதானிகள் கருதுகின்றனர். அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் எல்லாம் உயர் நிலைப் பிரதிநிதிகளை, ஒஸ்லோ பிரதிநிதிகளை இம்மாநாட்டிற்கு அனுப்புகின்றன.

இம்மாநாட்டிற்கு தலைமை வகிக்கப் போகின்றவர்கள் இரண்டு பிரதமர்கள். ஒருவர் நோர்வே பிரதமர் மற்றவர் இலங்கைப் பிரதமர். இம்மாநாட்டில் தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் அதன் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் பங்கு பற்றவிருக்கின்றார். ஒஸ்லோ உச்சி மாநாடு தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு புதிய பரிமாணம் ஒன்றை கொடுக்கப் போகின்றது என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.


SHEPPARD -JANE DENTAL CLINIC




15 வருடங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு போதனா வைத்தியசாலைகளில் கடமையாற்றிய

டாக்டர் முத்துராஜா சத்தியபாலன்

DR. M. SATHIYABALAN

கனடா பல் மருத்துவ பீடத்தில் பல்வைத்திய துறையில் இரு வருட பயிற்சியை முடித்த பின் மீண்டும் கனடாவில் சேவையாற்றுகிறார்

சகல வயதினருக்கும் பற்களை நேராக்கி ஒழுங்கு படுத்தல்
Orthodontics - Braces / Removable Appliance

சிறுவர்களுக்கு பற்கள் கோணலாக, நெருக்கமாக முளைத்தலைத் தடுத்தல்
Paediatrics & Preventive Orthodontics

முரசு கரைவதை நிறுத்துவதற்கான சிகிற்ச்சை
Gum Disease Treatment

பழுதடைந்த வலிதரும் பற்களை அகற்றாது பாதுகாத்தல்
Root Canal Treatment

நிரந்தரமான செயற்கைப் பற்கள் கட்டுதல்
Crown & Bridge

இயற்கையான வெள்ளை நிறத்தில் பல் அடைத்தல்
White Filling

பற்களை சீராக்கி அழகு படுத்தும் சிகிற்ச்சை
Cosmetic Bonding


பற்களை வெண்மையாக்குதல்
Tooth whitening

சகல காப்புறுதிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்

Family benefit and Welfare உதவி பெறும் குடும்பத்தினருக்கு இலவச பற்சிகிற்சை

சனி, ஞாயிறு தினங்களிலும் திறக்கப்படும்

NORTH YORK
2715 Jane Street
(inside jane & sheppard mall)
TEL: 416-742-5111




தமிழில் தொடர்புகளுக்கு: 905-264-3504

உங்கள் வீட்டுச் சமையல்களிலும்
விருந்துகளிலும் கட்டாயம் இருக்கவேண்டியது.



So Soya+

இரசாயனக் கலப்பற்ற சோயா உணவு

Tel : 416-293-6555
Fax: 416-293-6459

Not a Genetically Engineered Product

Web: www.so-soyaplus.com
e-mail: info@portello.com



# நிறங்களின் மொழி அலங்காரம்

## பாரதி மதீஸ்

இங்கு நிறங்களின் மொழி அலங்காரம் பற்றி விளக்கமளிப்பவர் ஸ்காபரோ நகரில் அலங்கார் டொக்கோர் என்னும் மனையலங்கார நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தி வருகின்ற பாரதி மதீஸ். தொடர்புகளுக்கு 416-284-7464

நிறங்களுக்கு மொழி உண்டு. அது மௌன மொழி. நிறங்களினால் பேசாமலே தன்னைப் பார்ப்பவர் உணர்வுகளில் மனப்பார்வையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்த முடியும். இதனால் தான் மனிதசஞ்சாரமற்ற மலையுச்சியில் தவம் செய்த முனிவர்கள் கண்ணை மூடியபடி தியானத்தில் இருந்தார்கள். கண்ணைத் திறந்தால் பார்வையில் படும் இலை குழைகளின் பச்சை நிறமும், காய்கனிகளின் வண்ண நிறங்களும்,




மாமுனிவர்களின் மனதில் கூட சபலத்தை ஏற்படுத்தலாம். அவர்களின் மோன நிலையில் சரிவு வரலாம் என்பதாலும் இருக்கலாம்.

நிறம், வண்ணம், சாயல் என்பதெல்லாம் நிறத்தின் மறுபெயர்கள் தான். சிவப்பு, நீலம், மஞ்சள் மூன்றுமே தாய் நிறங்கள். ஏனையவை இவற்றின் கலவைகள். நிறங்களின் தனித்தன்மை என்பது அவை தனித்து, சுயமாக காட்சி தருவதை விட ஏனைய நிறங்களுடன் ஜோடி சேரும் போது பிரம்மாதமான வண்ணக் கலவைகளை படைக்கின்றன என்பதுதான். மஞ்சள் நிறத்தை எடுங்கள். எலுமிச்சம்பழமும் மஞ்சள் நிறந்தான். வெண்ணையும் மஞ்சள் நிறம். கோதுமையும் ஒருவகை மஞ்சள் நிறம். பொதுவாக நிறங்களை கருமையான வகையெனவும் பளிச் என்ற வெளுப்பான நிறம் எனவும் இருவகையாகப் பிரித்துச் சொல்வர்.

கருமை கலந்த நிறங்கள் குளிர்மையானவை. ஆனால் வெளிர் நிறங்கள் (லயிற் நிறம்) வெம்மையானவை. இவைகளை விட நியூற்ரல்ஸ் எனப்படும் நிறமில்லா நிறங்கள் கூட உண்டு. இவை யாவராலும் விரும்பப்படுபவை. காரணம் சுலபமாக காணப்படும் ஏனைய தன்னைச் சுற்றி நிறங்களுடன் அனுசரிச்சுப் போகக் கூடியவை. வளைந்து கொடுக்கும் தன்மையுடையவை. கறுப்பு, வெள்ளை, சாம்பல் நிறங்கள் தான் இந்த நிறமற்ற நிறங்கள். குடும்பத்தைச் சேர்ந்தவை. இன்று மனையலங்கார உலகில் ஸ்டைல் நிறங்கள் எனக் கருதப்படுபவை இவைதான். இலகுவில் இணையும் தன்மை யுடையதால், எல்லா வண்ணக் கலவைகளிலும் இவற்றின் சாயல் படிந்திருக்கும். நிறங்களின் குணங்கள் எவையெனப் பார்ப்போம். மஞ்சள்நிறம், இது மனதில் உற்சாகத் தையம், ஆனந்தத்தையும் ஏற்படுத்தும். இதனால் தான் திருமணம் போன்ற மகிழ்ச்சியான விழாக்களில் மஞ்சள்கலந்த பட்டை மங்களகரமான ஆடையாக அணிகிறார்கள். சிவப்புநிறம், கோவம், நாணம் முதலிய உணர்ச்சிகரமான தன்மையைக் கொண்டது. கோவத்தில் கண்கள் சிவந்தன நாணத்தில் முகம் சிவந்தது. எனக் குறிப்பிடுவதன் மூலம் சிவப்பு நிறம் உணர்வுபூர்வமான குணத்தை வரவழைக்கும் என்பது தெரிகிறது. இயற்கையின் செல்லக் கலர் பச்சை. பச்சை நிறத்தைக் குறிக்கும் அநேக பெயர்கள் இயற்கையிலிருந்து எடுக்கப்பட்டவை. உதாரணமாக இலைப் பச்சை, குருத்துப்பச்சை, பாசிப்பச்சை, மரகதப்பச்சை எனப் பல வகைப் பச்சை நிறங்களின் பெயர்கள் உண்டு. நிறம் என்பது அலங்காரத் திற்காக பயன்படுத்தப்படும் போது, மிகச் சக்தி வாய்ந்த கருவியாக செயல்படுகிறது. ஒரு அறையின் அமைப்பை, தோற்றத்தைப் பாவத்தை பிரதிபலிக்கும் சாதனம் நிறம் தான். வீட்டை அலங்கரிக்கும் போது மூன்று அறைகளைத் தான் முக்கியமாக கண்ணைக் கவரும்படி அலங்கரிப்போம்.



வரவேற்பறை என்ற லிவ்விங் ரூம் இல் கலரைவி.ட தளபாடம் முக்கியத்துவம் பெறுகிறது. உட்கார்ந்து பேசி உபசரிக்கும் இடம் என்பதால் நிறங்கள் இரண்டாவது இடத்தினையும் தளபாடம் (சோபா செட்) முதலிடத்தையும் பெறுகிறது. பலருடைய ரசனைக் கேற்ற நிறம் இங்கே உபயோகிக்கப்படல் வேண்டும். ஆனால் இதனுடன் ஒட்டியிருக்கும் டைனிங் ரூம் என்ற சாப்பாட்டறையின் நிலைமை அவ்வாறில்லை. டைனிங்றூம் என்ற பெயருக்கேற்றவாறு இரவு நேரத்தில் மின்சார ஒளியில் நான்கு அல்லது ஆறு குடும்ப அங்கத்தினர் இருந்து



உணவருந்தும் அறையென்பதால் தளபாடத்தை விட நிறம்தான் பிரதான அலங்காரச் சின்னம். கருமை கலந்த சிவப்பு நிறம் இந்த அறையை அலங்கரிக்க தெரிவு செய்வார்கள். மங்கலான விளக்கொளியில் கருமை கலந்த செம்மை நிறம் அந்நியோன்யமான ஆனந்தச் சூழல் உருவாக்குமென்பதே இதற்குக் காரணம். படுக்கையறை என்பது இரவு நேரத்தில் ஒருவரோ, இருவரோ பயன்படுத்தும் அறையென்பதால் உபயோகிப்பவரின் ரசனைக் கேற்ற கலர் இங்கே பயன்படும். இந்த அறையிலும் பெயருக்கேற்ப கட்டில்தான் முக்கியத்துவம் பெறுகிறது. நிறங்கள் இரண்டாவது இடம்தான். கட்டிலின் அளவு, வேலைப்பாடு, படுக்கை விரிப்புக் களின் நிறம் இவைகளைத்தான் முதலில் தெரிவு செய்வர். இந்த அறையின் நிறங்கள் மெலிதான கருமை கலந்த மங்கல நிறமாக இருக்க வேண்டும். தூங்குபவரின் உடலும், உள்ளமும் ஓய்வு எடுக்கும் அறை படுக்கையறை. பளிச் கலர்கள் தனிமையில் குறுக்கிடும் அத்தகைய வண்ணம் தவிர்க்கப்படல் வேண்டும்.

சரி இப்போ நான் கதைக்கும் கலர்கள் பற்றி சில உண்மைகளை விளக்கியுள்ளேன். இவைதவிர நாம் தினசரி நனவிலும் கனவிலும் காணும் கலர்கள் ஏராளமானவை. வாழ்க்கை கலர்புல்லாக இருக்க கலர்களின் குணமறிந்து மொழியறிந்து பயன்படுத்துங்கள்.

# இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களின் 25வது ஆண்டு நினைவுவிழா -ஒரு கண்ணோட்டம்





இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களின் 25வது ஆண்டு நினைவு தினவிழா குரும்பசிட்டி நலன்புரிச்சபை ஆதரவில் ஞாயிறு 4.30 மணியளவில் கொட்டும் பனிமழையையும் பொருட்படுத்தாது குழுமியிருந்த பார்வையாளர்களுடன் ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

கனக. செந்திநாதன் அவர்களுடன் கற்பித்த திரு. க. வை. தனேஸ்வரன் சுடரேற்ற மௌன அஞ்சலியும் அக வணக்கமும் இடம்பெற்றது. தொடர்ந்து திரு. க. சிவதாசன் அவர்களால் இரத்தினச் சுருக்கமாக வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தலைமையுரை நிகழ்த்திய திரு. செ. அசோகமூர்த்தி தமது உரையில் குரும்பசிட்டியின் புவியியல் ரீதியான அமைவை மிக அழகாக கனக. செந்திநாதனின் எழுத்துக்களில் இருந்து காட்டியதோடு இப்பெரியாரின் ஆளுமை இலக்கியத் தாகம் மிக்க இளைஞர்களை ஈர்த்துக்கொண்டமையும் அவரது கையெழுத்துக் கோவைகளை, கல்விபயிலும் பல தரத்தவரும் பயன்படுத்தியதும் கண்கூடு என்று குறிப்பிட்டார். அடுத்து மாணவி செல்வி தம்மியா வசந்தகுமார் இலக்கியகர்த்தரின் பணிகளை அழகாக எடுத்துரைத்தார்.

நினைவுரைகள் வரிசையில் திரு.க.வை.தனேஸ்வரன் உரையாற்றுகையில் குரும்பசிட்டி ஒரு நந்தவனம். பன்முகப்பட்ட ஆற்றல்மிக்க மேலாளர்களை அது தந்துள்ளது என்று குறிப்பிட்டு, கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, கவிஞர் கந்தவனம், ஆவணகானி கனகரத்தினம், கலைஞானி செல்வரத்தினம், சட்டத்தரணிகள் கே.வி.மகாதேவன், ஶ்ரீ, வேல் அமுதன், புகைப்படக்கலைஞர் குகதாசன் போன்றோரின் பணிகளை கனக. செந்திநாதன் அவர்கள் பாராட்டி மகிழும் பாங்கு அவருக்கே உரித்தானது என்றும் விதந்துரைத்தார். மேலும் தமது உரையில் 1957-58 இல் இடைக்காடு இந்துமகாவித்தியாலயத்தில் இரசிகமணி அவர்களுடன், சக ஆசிரியராக பணிபுரிந்த காலத்தை நினைவுபடுத்தினார். திருமதி நாகம்மா செந்திநாதனின் விருந்தோம்பல் பண்பையும் விதந்துரைத்தார்.

அடுத்து முன்னைநாள் மகாஜன அதிபர் பொ. கனகசபாபதி உரையாற்றுகையில் இரசிகமணியோடு நேரடித்தொடர்பு இல்லாத பொழுதும் அவரது எளிமையான தோற்றமும், பேச்சும் எழுத்தும் என்னைப் பெரிதும் கவர்ந்தது என்றும், இந்திய எழுத்தாளர் டி.கே.சி அவர்களை இரசிகமணியென எழுத்தாளர்கள் பாராட்டியதை அறிந்தவன் என்றும் குறிப்பிட்டார்.

உதயன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் உரையாற்றுகையில் தான் இளைஞனாக இருந்த நாட்களில் அவரைச் சந்தித்துக்கொண்ட சந்தர்ப்பங் களை நினைவுபடுத்துகையில் மல்லிகை ஆசிரியர் ஜீவாவின் மல்லிகைப் பந்தலும், பிரபல சிறுகதை எழுத்தாளர் டானியல் அவர்களின் தொழிற்சாலையும் ஞாபகத்திற்கு வருகின்றது என்றும் அவர்கள் இலக்கியம் பற்றிய பரிமாணங்களைக் கலந்து உரையாடிக் கொண்டிருந்ததையும் நினைவு படுத்தினார். மேலும் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் அவ்வாரம் வெளிவந்த படைப்புக்கள் பற்றிய பேச்சு விமர்சன அடிப்படையில் நிகழும் அச்சம்பாசனை கள் இலக்கிய மயமாக அமையும் பலதரப்பட்ட அணியைச் சேர்ந்திருந்த எழுத்தாளர் களை வேறுபட நோக்காது இலக்கிய கர்த்தாக்கள் என்ற வகையில் ஒன்று சேரப் பார்த்த பெரியார் கனக. செந்திநாதன் எனக் குறிப்பிட்டார்.

அடுத்து சிந்தனைப்பூக்கள் ஆசிரியர் விரிவுரையாளர் பத்மநாதன் தமது உரையில் இரசிகமணி ஒரு நேர்மையான இலக்கிய விமர்சகர் என்றும் பிரபல எழுத்தாளர் எஸ். பொ. அவர்களால் விதந்துரைக்கப்பட்ட இலக்கியவித்தகர் திரு. செந்திநாதன் என்றும் அவரது சுவாசம், சுகம், வாழ்வு எல்லாம் தமிழ் இலக்கியப் பணியாகும் என்றதோடு இலங்கையில் இலக்கிய பாரம்பரியத்தைத் தோற்றுவித்தவரும் இவரே என்றும் காலையிலும் மாலையிலும் இலக்கியக் கூட்டங்களை உருவாக்கிய பெருமை இரசிக மணியையே சாரும் என்றும் இவர் ஒரு அற்புதமான எழுத்தாளர் என்றும் குறிப்பட்டு தமது உரையை நிறைவு செய்தார்.

நினைவுரையினை நிறைவுசெய்த கவிநாயகர், கலாநிதி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார். "இவர் 25 சிறுகதைகளையும் ,4 நாவல்களையும் 12 நூல்களையும் இலக்கிய உலகிற்கு வழங்கினார். ஈழத்து கவிமலர்கள் ஈழத்து பேனா மன்னர்கள், முற்றத்து முல்லை, குழந்தைப்பாடல்கள், வெண்சாகு என்ற சிறுகதைத் தொகுதி, ஒருபிடி சோறு என்ற நாடகமும் தந்தவர் இரசிகமணியவர்கள். குரும்பசிட்டியில் பிறந்த இவர் கிழக்கிலங்கையில் இரசிகமணியெனப் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்" என்றும், ஏன் இரசிகமணிக்கு நினைவுவிழா எடுக்க வேண்டும் என்பதற்கு அருமையான விளக்கமும் தந்து இக்காலத்து இலக்கியம் பற்றிப் பேசுபவர்கள் இரசிகமணிபற்றி எவ்விடமும் குறிப்பிடாதது பற்றி விசனம் தெரிவித்து அவர்களைச் சாடினார். தொடர்ந்து திரு. இராசரத்தினம் அவர்களால் இலக்கியச் செல்வர் என்ற கவிதை வாசிக்கப்பட்டு அனைவரினதும் பாராட்டைப்பெற்றது.

அடுத்து செல்வி சிந்தியா சிறீதரன் இரசிகமணிபற்றி பல அரிய கருத்துக்களை முன்வைத்தார். உரையரங்கைத்தொடர்ந்து இசையரங்கம் ஆரம்பமாகியது. செல்வி திலீபா வைத்தியநாதன், செல்வி ஹர்சிதா தவராஜா, செல்வன் மயூரேசன் தவராஜா ஆகியோர் வயலின் இசை வழங்கி சபையோரை மகிழ்வித்தனர். தொடர்ந்து இசைக்குயில்கள் செல்வி சைலயா கணேசலிங்கம், செல்வி இந்திரா கணேசலிங்கம் ஆகியோர் மெல்லிசை வழங்கி, இசை நிகழ்ச்சியை நிறைவு செய்தனர். நலன்புரிச்சபை காரியதரிசி வாரணன் கந்தவனத்தின் சுருக்கமான நன்றியுரையுடன் இரசிகமணி கனக. செந்திநாதனின் நினைவு தினவிழா இனிது நிறைவெய்தியது.


உங்கள் Mortgage தேவைகளுக்கு அழையுங்கள்

**CANADIAN MORTGAGE CONSULTANT**

* Personal Line of Credit
*New Homes (1% down)
*Business Line of Credit
* Mortgage refinancing 1st & 2nd

Voice Mail(416) 850-7840
Prabha Shan (416) 850-7838
Jenan Krish (416) 850-7839


## தமிழர் புனர்வாழ்வுக்கழகம்-கனடா விடுக்கும்

### எதிர்காலச் செயற்திட்டம் பற்றிய கூட்டம்

மேற்படி கூட்டம் இலக்கம் 2130 Lawrence Ave. E. @ Birchmount என்னும் இடத்தில் 23.11.2002 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது இக்கூட்டத்திறகு அனைத்துப் பல்கலைக்கழக, கல்லூரி மாணவர் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள், மற்றும் ஈழத்தமிழர்களின் புனர்வாழ்வில் ஆர்வமும் அக்கறையும் உள்ள நலன்விரும்பிகள், அபிமானிகள் அனைவரையும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
(416) 788-5928 (416) 751-8777

# மென்மையான போக்குக்கொண்ட விடுதலைப்புலிகள்



இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்காக கடந்த 19 வருடங்களாக போராடி வரும் விடுதலைப்புலிகள் கடந்த சமாதானப் பெச்சுவார்த்தையின்போது தாங்கள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்கப் போவதாக தெரிவித்தற்போது அவர்களது தீவிர ஆதரவாளர்கள் கூட ஆச்சரியத்துக் குள்ளானார்கள்.

ஆனால் புலிகள் மென்போக்கைக் கடைப்பிடிக்கும் முயற்சியில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மாற்றுக் கட்சிகளுக்கு இடமளிக்கையில் தற்போதைய சமாதான நடைமுறைகளில் ஒவ்வொரு அடியும் எவ்வாறு எடுத்து வைக்கப்படுகிறது என்பதை அநேகமானோர் அவதானித்து வருகிறார்கள்.

நான் அவர்களை (புலிகளை) நம்ப மாட்டேன். அவர்கள் கூறுவதில் எப்பொழுதுமே முரண்பாடுகள் உண்டு. இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் (ஈ.பி.டி.பி.) சிரேஷ்ட உறுப்பினருமான எஸ். சிவதாசன் தெரிவித்தார். தமிழ் அரசியல் கட்சியான ஈ.பி.டி.பி.புலிகளின் பரம எதிரியாகும். சில அரவியல்வாதிகளினதும் நாட்டின் சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் உள்ள கடும் போக்கு குழுக்களினதும் விமர்சனத்தை எதிர்நோக்கும் அரசாங்கம் புரிகளின் வார்த்தைகள் சமாதான உடன்பாடு யதார்த்த தன்மை ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளிகளை நிரப்பவேண்டிய நிலையில் உள்ளது என்று அரசியல் ஆய்வாளர் ஜெஹான் பெரேரா கூறுகிறார்.

தேசிய சமாதான பேரவையில் ஊடகப் பணிப்பாளராக பணியாற்றும் பெரேரா புலிகளின் கூற்றுக்களில் நிறைய சந்தேகம் உண்டு என்பது தமக்குத் தெரியும் என்று குறிப்பட்டதுடன் புலிகளை நம்பகமானவர்களாக நடக்கச் செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் கூறினார். தமது தனிப்பட்ட அபிப்பிராயத்தைப் பொறுத்தவைரையில் புலிகள் தங்கள் பேரப் பேச்சுக்களை காப்பாற்றுவார்கள் என்றே தாம் அபிப்பிராயப்படுவதாகவும் குறிப்பிட்டார். தாய்லாந்தில் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து ஒரு வாரத்துக்கு மேலாகியும் புலிகளின் எதிர்பாராத அறிவிப்புக்கள் பற்றியே அநேகமானோர் இன்னமும் பேசிவருகின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாடு கோரும் நோக்கத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்றும் பதிலாக பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாழும் மாகாணங்களான வடக்கு கிழக்கில் உண்மையான சுயாட்சியையே கோருகின்றார்கள் என்றும் செப்ரம்பர் மாதம் நடைபெற்ற முதலாவது சுற்று சமாதானப்பேச்சு வார்த்தைகளில் புலிகளின் பிரதம பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். கடந்தவார பேச்சுவார்த்தைகளில் 64.000 பேரைப்பலிகொண்ட யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணப்பட்டதும் விடுதலைப்புலிகள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்கப்போவதாக பாலசிங்கம் தெரிவித்தார்.

தமிழ் சமுதாயத்திலுள்ள ஏனைய குழுக்களும் ஜனநாயக நடைமுறைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவர் என்றும் புலிகள் தெரிவித்தனர். தமிழ் சிவிலியன்களும், குழுக்களும் கடந்த காலத்தில் தெரிவித்த எதிர்ப்புகளை புலிகள் எவ்வாறு நசுக்கினார்கள், எதிப்பாளர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதற்கு இந்தக் கூற்றுக்கள் நேரெதிர் முரண்பாடாக அமைந்துள்ளன. போரிடும் பிரிவுகளுக்கு சிறுவர்களைச் சேர்ப்பதை நிறுத்திக்கொள்ளவதாக புலிகள் உறுதி அளித்தார்கள். ஐக்கிய நாடுகள் சபைக்கு சில வருடங்களுக்கு முன்னர் வழங்கிய இந்த உறுதி மொழியை புலிகள் காப்பாற்றத் தவறிவிட்டார்கள் என்றும் சிவதாசன் தெரிவித்தார்.

கடந்தவாரம் இருதரப்பினரும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கான கூட்டுக்குழு ஒன்றை நியமித்தார்கள். எதிர்வரும் பேச்சுவார்த்தைகளில் மேலும் சிக்கலானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான அரசியல் விடயங்கள் குறித்து ஆராய்வதென விடுதலைப்புலிகளும் அரசாங்க பிரதிசிதிகளும் இணங்கி உள்ளார்கள். இதுவரை வடக்கு, கிழக்கில் இடைக்கால நிருவாகசபை நிரந்தர தீர்வு எட்டப்படும் வரையிலான ஒரு தற்காலிக ஏற்பாடே என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் தற்போதைய மாகாண சபைகளுக்கு கூடுதல் சுயாட்சியை வழங்கும் வகையில் வடக்கு, கிழக்கிற்கான நிருவாக நடைமுறைகள் பற்றி இரு தரப்பினரும் ஆராய இருக்கின்றார்கள் என்று பேச்சுவார்த்தைக்கு நெருக்கமான அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென 1987 ஆம் ஆண்டில் இந்திய மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின்போது மாகாணசபைகள் அறிமுகம் செய்யப்பட்டன. மத்திய அரசாங்கத்துக்கும் பிராந்திய நிருவாகங்களுக்கும் இடையே வித்தியாசமான உறவுகளைக் கொண்ட கனடா, ஸ்கொட்லாந்து வடஅயர்லாந்து ஆகியவற்றின் சமஷ்டி அமைப்பு முறைகள் பரிசீலனைக்கு எடுக்கப்பட இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அரசாங்கம் அதன் சிங்களப் பெரும்பான்மை சமூகத்தின் மீது சமாதானத் திட்டத்தை திணிப்பதற்கு வேறு சிறந்த வழிகளும் இருக்கலாம். மிக்க அனுபவம் வாய்ந்த செய்தியாளரும் இராணுவ ஆய்வாளருமான தமது பெயரை வெளியிட வேண்டாமெனக் குறிப்பிட்டு கருத்துத்தெரிவிக்கையில்:

அரசாங்கம் சமாதானத்தின் பேரால் தெற்கை அபிவிருத்தி செய்து வடக்கு கிழக்கை கட்டி எழுப்பும்வகையில் அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்தை நீடித்துக் கொண்டே செல்லலாம் என்று கூறினார். யுத்த நிறுத்த, உடன்படிக்கையின் கீழ் இருதரப் பினருமே ஆயுதமேந்துகிறார்கள். ஆனால் யுத்தம் செய்ய மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். கொஞ்சகாலத்துக்கு இந்த நிலைமை நீடிக்கும். சமாதானத்தின் பெயரால் பொருளாதாரம் சுபிட்சமடையும். விடுதலைப்புலிகள் வடக்கையும் கிழக்கையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் அதேவேளையில், தெற்கில் கடும்போக்கு சக்திகளை சாந்தப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியை பயன்படுத்தலாம்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளினால் ஏற்கெனவே அமுலில் இருக்கும் சட்ட, வரிசேகரிப்பு, வங்கியியல்,மற்றும் நிருவாகக்கட்டமைப்புகளை அரசாங்கம் படிப்படியாக சட்டரீதியாக்க முயற்சி எடுத்து வருகிறது. தற்போதைக்கு புலிகள் எவ்வாறு அவர்களது வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகிறார்கள் என்பதையே அனைவரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். உதாரணமாக கொழும்பிலிருந்து இயங்கும் பிரித்தானிய டெய்லி ரெலிகிறாப் பத்திரிகையின் செய்தியாளர் தெரிவித்த முறைப்பாட்டில் தேசிய பாதுகாப்புக்கு தாம் அச்சுறுத்தலாக இருப்பதாக குற்றம் சாட்டி அரசாங்கம் தமது விசாவை நீடிக்க மறுத்துவிட்டது என்று கூறியதாக பத்திரிகைகளில் வெளியாகி உள்ளது.

விடுதலைப்புலிகளை விமர்சித்து வருபவரும் சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பவருமான ஹரிஸ் புலிகள் தங்களுக்கு எதிரான விமர்சனங்களை வரவேற்பதாக தெரிவித்து வருகின்ற போதிலும் தம்மை நாட்டிலிருந்து வெளியேறிவிடும்படி அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுத்ததாகவும் கூறினார். வாடகை கார் சாரதியான வின்ரன் சோமதாச கருத்துத் தெரிவிக்கையில் தாம் இன்னமும் புலிகளை நம்பாமலிருப்பதற்கு இதுவுமொரு காரணம் என்றார். புலிகள் இன்னமும் வெளியிலிருந்து ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்கள் எதற்காக? மற்றுமொரு தாக்குதலுக்கு தயாராகிறார்கள் என்கிறார் வின்ரன்.

# யாழ் பல்கலைக்கழகத்திற்கு புத்தக அன்பளிப்பு

Computek நிறுவனத்தினர் யாழ் பல்கலைக்கழக நூல்நிலையத்திற்கு இம்முறையும் புத்தகங்களை அன்பளிபாக வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். பல்கலைக்கழக மட்டத்தில் பாவிக்கக்கூடிய நல்ல நிலையிலுள்ள புத்தகங்களை நீங்களும் அன்பளிப்புச் செய்ய விரும்பினால் நவம்பர் மாதம் 30ம் திகதிக்கு முன்னதாக கீழ்வரும் Computek நிறுவனங்களில் ஒப்படைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றார்கள். தொழில்நுட்பம் எங்கும் அதிவேகத்தில் வளர்ந்து வருவதால் தற்போது பாவனையிலுள்ள பதிப்புக்களை தந்துதவுவதே நன்மை பயக்கும் அன்பளிப்பாகும்.

மேலதிக தொடர்புகளுக்கு: North York Campus (Leslie & Yorkmills Road, 801 Yorkmills Suite #200 North York, (416) 441-2900, Scarborough Campus (Kennedy/ Eglinton) 2390 Eglinton Ave East, (Just Above Public Library) Scarborough,
(416) 285-9941


Rajaguru Martial Arts
KARATE CLASSES
ராஜகுரு மார்ஷல் ஆர்ட்ஸ் அக்கடமி வழங்கும்
கராட்டி வகுப்புகள்



ஷோடோகான் கராட்டி வகுப்புகள்
அன்பு, அமைதி, கருணை, பொறுமை போன்ற நற்குணங்களோடு வாழவும், மற்றவர்களை நேசித்து சேவை செய்யும் மனப்பாண்மையுடன் வாழவும், உடலுக்கும் மனதிற்கும் உறுதியளிக்கும் பயிற்சியைப் பெறவும் தமக்கும் பிறருக்கும் ஆபத்து ஏற்படும் போது பாதுகாத்துக் கொள்ளவும் கீழேயுள்ள பயிற்சி நிலையங்களை அணுகவும்
ஷோ ஷிஹான் "ராஜகுரு" T. ரவீந்திரன் - நிறுவனர், சர்வதேச தலைமை ஆசிரியர்
ஷிஹான் R ஸ்ரீராம்
பெண் (வைசாளி ஸ்ரீராம்) பயிற்சியாளராலும் பயிற்றுவிக்கப்படுகிறது
DAILY NEEDS 2543 Pharmacy Ave (Finch / Pharmacy)
BEEMAH RESTAURANT 1450 Gerrard Street (Gerrard Indian Bazar)
ACADEMY OF TAMIL ARTS & TECH. 3150 Eglinton Avenue (Markham / Eglinton)
DAISY MART 5739 Finch Avenue East (Finch / Neilson)
416-473-8472

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை
உங்களுக்கு தெரியுமா?
• CRIMINAL
கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால்
- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்
• DOG BITES
• SLIP & FALL
• MOTOR VEHICLE ACCIDENTS
வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்
பின் இவரை அழையுங்கள்
கலகலப்பு தீசன்
416-490-9199
அன்று இணையில் - இன்று இன்றநெற்றில் கலகலப்பு
www.kalakalappu.net

# குத்த வந்தான் கொலைஞன் தப்பினார் எம் தலைவன்

(பாகம்- 13)

சட்டத்தரணி. கனக மனோகரன்

நெடுநாள் நண்பனாம் நெடுமாலைக் காணக் குசேலமுனிவர் வருகின்றார். கந்தனின் மாமனாம் நந்தனைக் காண ஆவலோடும் கந்தைப் பொதியில் அவலோடும் அவர் வருகின்றார். குசேலரிடம் குசலம் விசாரிக்கின்ற கண்ணன் அவலுடன் அவர் வந்திருப் பதை அறிந்து சொன்னது பட்டான ஒரு பாட்டானது.

"தரிசுவைப் பக்கணத்து என்
சிந்தனை நின்ற தென்றான்
தெரிவரும் வஞ்சக் கள்வன்"

S.W.R.D. பண்டாரநாயக்காவும் அவரது சமகால அரசியல்வாதிகள் தெட்டத் தெளிவுறத் தெரிந்து வைத்திருந்த "வஞ்சக் கள்வன்" தான்!

**கழுவிற மீனில் நழுவிற மீன்**

பண்டாரநாயக்காவின் வாக்கில் வாய்மையோ போக்கில் தூய்மையோ அற்ற போக்கிரித்தனத்தின் விளைவை இன்று ஆண்ட எம் இனமும் இலங்கையில் எமை ஆளும் இனமும் ஒருசேர அனுபவிக்கின்றன. ஒரு படி அரிசியை வாங்கிக்கொண்டு ஒரு படி நெல்லைக் கொடுத்த மன்னனை மக்கள் சபித்தார்களாம். அவனை அடுத்து அரசகட்டில் அமர்ந்த அவன் குமாரனோ ஒரு படி அரிசிக்குப் பதிலாக ஒரு படி பதரைக் கொடுத்து அப்பனுக்கு நற்பேர் தேடிக் கொடுத் தானாம். இலங்கையில் ஏறக்குறைய அதையே தான் தகப்பனுக்கு தப்பாமல் பிறந்து தப்புத் தாளங்கள் போடும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் தற்போது செய்து கொண்டிருக்கிறார்.

'Emergency 58' என்ற பேரில் ஒரு நூலை எழுதி 1958ல் இடம்பெற்ற இனக்கலவரத்தில் தமிழருக்கு இழைக் கப்பட்ட கொடுமைகளை நெஞ்சுரத் தோடும் நேர்மைத்திறத்தோடும் அகில இலங்கைக்கு மட்டுமல்ல விரிந்த உலகிற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியவர் Tarzie wittachi என்ற பெருமகன்... அவர் அந்நூலில் "பண்டா" வை குறிக்கப் பாவித்த ஒரு பதம்... 'electric eel', eel ஐ தமிழில் விலாங்கு மீன் என்கின்றோம். பிடிபடா மலும் பிடி கொடாமலும் தப்புகின்ற வனை கிராமியத் தமிழில் "கழுவிற மீனில் நழுவிற மீன்" என்பர். குறிப்பாக eel என்ற மீனை இலகுவில் கைகளால் பிடிக்க முடியாது. அம்மீன் மின்சக்தியில் இயங்கு மெனில் அதனைப் பிடிப்பது விண் மீனைப் பிடிப்பதை ஒத்த அசாத்தியமான கைங்கரியம் ஆகும்.

**தனிச் சிங்கள சபையும் தனிச் சிங்களச் சட்டமும்**

1956ம் ஆண்டு சித்திரையில் இடம்பெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு 10 ஆசனங்கள் கிடைத்தன. ஆட்சி பீடத்தில் இருந்த UNPக்கு அதளபாதாளத்தில் விழுந்ததை ஒத்த அவல நிலை. எட்டே எட்டு ஆசனங் களை மட்டும் பெற்றது. பண்டாரநாயக் காவின் M.E.P. 51 ஆசனங்களை பெற்று அமோக வெற்றி பெற்றது. பண்டா 12-04-1956 அன்று அமைத்த மந்திரி சபையில் தனி ஒரு தமிழரும் இடம்பெறவில்லை.

வட்டுக்கோட்டைத் தொகுதி வாக்காளர்கள் தொல்(பழைய)புரத்தில் தங்கள் "புதிய" இளம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒரு பாராட்டுவிழா எடுத்தார்கள். வழக்கமாகக் கூட்டங் கள் நடக்கும் வழக்கம்பறை அம்மன் கோவில் வளவில் அது இடம்பெற்றது.

[6-2-1975 அன்றுதான் K.K.S



தமிழரின் தலைவனாக 26-08-1927 — அமரருள் ஒருவனாக 13-07-1989

இடைத்தேர்தல். அதற்கு முன்தினம் அதே ஆலயத்தில் அமிர் அண்ணனின் பணிப்பை ஏற்று இளைஞர் பேரவையின் வட்டுக்கோட்டைக் கிளையை நான் அங்குரார்ப்பணம் செய்து வைத்தேன். தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது தம்பிப்பிள்ளை சந்ததியார். இரண்டு ஆண்டுகளில் அத் தம்பி துரையப்பா கொலை வழக்கில் 5ம் எதிரி. அதில் அமிர் அண்ணனும் ஒரு சட்டவாதி. யான் அவரின் துணைச் சட்டவாதி.]

அவ்வைபவத்தில் பேசிய விழா நாயகன் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் மந்திரிசபையில் இடம் பெற்றிருக்கும் கடுகண்ணாவ பா.உ. A.C.S. மரிக்கார் சிங்களவர்களை விட சிங்கள விசுவாசி ஆகையால் அமைந்திருப்பது ஒரு சிங்கள மந்திரி சபை தான் என்று குறிப்பிட்டார்.

அந்தத் தனிச் சிங்கள மந்திரிசபை ஒரு மாதத்தில் தனிச்சிங்களச் சட்ட மசோதாவை கொண்டுவரும் எத்தனத் தில் இறங்கியது.

தமிழரசுக் கட்சியின் செயற்குழு யாழ்ப்பாணத்தில் கூடி மேற்படி மசோதாவை எதிர்த்து பாராளுமன்ற வளவில் சத்தியாக்கிரகம் செய்வதென ஒரு மனதான ஒரு துணிகர முடிவை எடுத்தது.

16 வயதில் அரசுகட்டில் ஏறிய ஓர் இளஞ்சோழன் "எண்ணி எழு தினங் களில் என்னை வெண்ணிப்பறந்தலை யில் சந்தியுங்கள்" என்று பகைவருக்கு ஓலை அனுப்பியதாக சோழர் கால வரலாறு சொல்கின்றது.

**செல்வாவின் அறிவுறுத்தலும் பண்டாவின் அச்சுறுத்தலும்**

அங்ஙனமே தந்தை செல்வா அவர் களும் 4-6-1956 அன்று பண்டாரநாயக் காவிற்கு ஒரு "அஞ்சல்" அனுப்பினார். அதில் தான் மறு தினம் இருநூறு தொண்டர்களுடன் வந்து பாராளு மன்றத்தின் மேற்கு நுழை வாயிலில் முழு நாளும் உண்ணாவிரதம் இருந்து மறியல் போராட்டம் நடத்தப் போவதாக முன்னறிவித்தல் கொடுத்தார்

பதிலுக்கு பண்டா விடுத்த எச்சரிக்கை "அரசின் தீர்மானத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளை ஒடுக்கும் நடவடிக்கை எடுக்கப்படும்". அதற்கும் பேரறிஞர் செல்வா பயப்படாது பதில் அறிக்கை விட்டார். "உங்கள் ஒடுக்கும் நடவடிக்கைகள் தமிழர்களின் சுதந்திரப் பசியை மென்மேலும் தூண்டிவிடும்" ஏறக்குறைய ஐந்து வருடங்களின் பின்னர் (1961ம் ஆண்டில்) சத்தியாக் கிரகம் நடைபெறுகையில் தந்தை செல்வா இது போன்ற ஓர் எச்சரிக் கையை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விடமும் எதிர்நோக்கியதுண்டு....

"சத்திரக்கிரகிகள் மீது நான் இராணுவத்தை ஏவினால் என்ன செய்வீர்கள்?"

அம்மையாரின் துடுக்கு மிகுந்த வினாவிற்கு தமிழினத் தந்தையார் கொடுத்த அடக்கமாக விடை, "துப்பாக்கியுடன் தன் முன் தோன்றிய கொலைஞன் முன் உங்கள் கணவன் எங்ஙனம் நின்றிருந்தாரோ அங்ஙனம் நாமும் நின்றிருக்கக் கூடும்"

05-06-1956 அன்று ஒருவர் ஒருவராய் பிறந்த தமிழ் மறவர்கள் இருவர் இருவராய் அணிவகுத்து, சுலோக அட்டைகளை தாங்கி, விடுதலைப் பாடல்களைப் பாடிக்கொண்டு பாராளு மன்றத்தை நோக்கி முன்னேறினார்கள். நம்பூட்டானுக்கு மல்வானை என்றால் மாம்பழத்திற்கு யாழ்ப்பாணம் எனலாம். யாழ்ப்பாணத்து மாம்பழங்களில் கியாதி பெற்றவை கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், செம்பாட் டான்.... தந்தையோ நிறத்தால் வெள்ளையர்; கொழும்புவாசி; வன்னி யரோ கொல்லங்கலட்டி செம்பாட்டு மண்ணின் மைந்தர். இந்த வெள்ளைக் கொழும்பானும், செம்பாட்டானும் அந்த அறப்போர் அணியில் முன் நடந்தார்கள். அமரர் நாகநாதன், அமிர்தர் போன்ற அடுத்த பட்சத் தலைவர்கள் பின் நடந்தார்கள். தொண்டர்கள் அவர் களைத் தொடர்ந்தார்கள்.

பண்டாரநாயக்கா அவசர அவசரமாக முட்கம்பித் தடைகளைப் போட்டு சத்தியாக்கிரகிகளை பாராளுமன்றுக்கு வரவிடாது தடுத்ததாற்றான் காலிமுகத் திடல் அறப்போர்க் களமானது.

**துறைநிலாவணை தமிழ் வீரர் சாதனை**

இதனை தொடர்ந்து சிங்களக் காடை யர்கள் கொழும்பில் சில இடங்களிலும் கல்லோயாப் பகுதியிலும் தமிழருக்கு எதிரான காடைத்தனங்களை கட்ட விழ்த்து விட்டார்கள்.

தென்தமிழீழத்தில் அமைந்துள்ள துறைநிலா வாணைத் தமிழ் இளவல்கள் மட்டும் துப்பாக்கிகளின் துணையோடு தம்மைத் தாக்க வந்த சிங்களக் காடையர்களை மட்டுமல்ல அவர் களுக்கு ஒத்தாசை புரிவதற்கு ஜீப் வண்டியில் வந்த பொலிசாரையும் ஓட ஓட விரட்டினார்கள். ஈழவிடுதலை வரலாற்றில் ஆதவன் முகம் காட்டும் கிழக்கிற்றான் தமிழரின் ஆயுதப் போராட்டமும் முதன் முதலில் முகிழ்த்து மொட்டவிழ்த்தது.

வெந்த புண்ணில் வேல் பாச்சும் விதத்தில் 01-01-1957ல் வாகனங்களில் சிங்கள "சிறி" பொறிக்கப்பட வேண்டும் என்ற ஆணையை பண்டாவின் அரசு பிறப்பித்தது.

சிங்கள "சிறி" உடன் இ.போ.ச. பேருந்துகள் வடகிழக்கிற்கு அனுப்பப் பட்டன. தளபதி அமிர் தலைமையில் சிங்கள எழுத்துக்களை தார் கொண்டு அழிக்கும் மறம் கலந்த அறப் போர் 19-01-1957ல் ஆரம்பமானது. இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழ் காங்கிரஸ் தொண்டர்கள் ஒரு நாளுடன் ஒதுங்கிக் கொண்டார்கள். தமிழரசுக் கட்சியோ "சிறி" அழிப்பை பரந்துபட்ட முறையில் தொடர்ந்தும் நடத்தியது.

**சிங்களவர் திருநாள் செந்தமிழர் கரிநாள்**

மேலும் அக் கட்சி இலங்கையின் சுதந்திரதினமான (?) 04-02-1957 அன்று கடைகளை அடைக்க வைத்து கறுப்புக் கொடிகளை பறக்க விட்டு "ஹர்த்தால்" நடத்தியது. இப் போராட்டத்தினில் திருமதி கோமதி வன்னியசிங்கம் தலைமையில் தமிழரசு மகளிர் முன்னணி முக்கிய பங்கு வகித்தது. வட கிழக்கில் பரவலாக இடம்பெற்ற ஹர்த்தலில் பங்குகொண்டு திருகோண மலை மணிக்கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக்கொடி ஏற்று கையில் கொல் லப்பட்ட திருமலைத் தியாகியாகிய நடராஜன் தான் அறப் போர்க்களத்தில் பலியான முதல் தியாகி. தமிழகத்தில் கொடி காக்கையில் உயிர் நீத்தவன் திருப்பூர் குமரன். தமிழீழத்தில் கொடி ஏற்றுகையில் உயிர் நீத்தவன் நடராசன் என்ற இந்தத் தீந்தமிழ்க் குமரன்! 1958இன் பின்னர் ஆண்டாண்டு தோறும் ஆளும் இனத்தின் சுதந்திரத் திருநாள் ஆளப்படும் கன்னல் தமிழினத்திற்கு "கரிநாள்" ஆகியது.

சுதந்திர தினத்தில் பெருந் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தன் பரிவாரங் களுடன் போய் யாழ்நகரில் அடைபட்ட கடைகளை திறப்பிக்க இரும்பு மனிதர் DR. E.M.V. நாகநாதன் தன் பக்க துணைகளுடன் போய் பொன்னம்பலம் அவர்களுடன் பொருதி அவரை பின்வாங்க வைத்து பூட்டிய கடைகளை மீளவும் திறக்க வைத்த சுவாரசிய நிகழ்வுகளும் உண்டு.

இந்த நிலையிற்றான் சிறுபான்மைத் தமிழர்களின் வருடாந்த மாநாட்டில் பங்குகொண்டு தனிச் சிங்களச் சட்டத்தை ஆதரித்துப் பேசுவேன்.. என்று வீரசபதம் செய்து வீறாப்புடன் வடக்கே வந்த துணைத் தொழில் அமைச்சர் எம்.பி.டி. சொய்சா.. அமிர் தலைமையில் இடம்பெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை எதிர் கொண்டார். இராகவனிடம் தோல்வி கண்ட இராவணன் பாணியில்.

**"தொடர்ந்து போம் பழியினோடும் துங்கிய கரங் களோடும்"**

கொழும்பு திரும்பி இருந்தார்.

அன்று அமைச்சர் சொய்சாவின் போக்குவரத்திற்கு அக் காலத்தில் யாழ்பாணத்தில் வாழ்ந்த சிங்கள வர்த்தகர் பத்திரானாவின் "மகிழ்உந்து" (car) பாவிக்கப்பட்டது. அதன் சாரதி யான சிங்களவரை யாரோ இனந் தெரியாத இரு தமிழ் இளைஞர்கள் தாக்கியுள்ளார்கள். அதனால் ஆத்திரமடைந்த அந்தச் சாரதி அமிர் அண்ணனைக் கொல்லும் நோக்குடன் தமிழரசுக் கட்சிப் பணிமனைக்கு வந்துள்ளான். தான் வந்த நோக் கத்தை அவனாகவே அச்சமயம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இருந்த யாழ் முன்னாள் மேயர் திரு. சி. பொன்னம்பலம் அவர்கட்கு சொல்லி யுள்ளான். அவனைச் சோதித்தபோது அவனிடம் ஒரு "கிறிஸ் கத்தி" காணப்பட்டது. அவன் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

அன்று அந்தக் கொடியவனின் எண்ணம் ஈடேறி இருந்தால் இந்த ஈடில்லாத தலைவனின் இணையில்லா இருபத்திரெண்டு வருட சேவையை எம்மினம் இழந்திருக்கும் உலகம் புகழும் உன்னத தலைவனாகும் வாய்ப்பை அன்னவரும் இழந்திருப்பார்.

(தொடரும்)

# பயணம்

ஆசிரியர்: ஸ்ரீபதி சிவனடியான்

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இலண்டன், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கான உதயனின் விஷேட இணைப்பு

## அம்மா அமிர்தானந்தமாயி

சென்ற வாரத் தொடர்ச்சி

**சட்டத்தரணி முருகேசு சண்முகநாதன்**

### அம்மாவைக் கொல்ல முயற்சி

சூடாமணியின் தரிசனத்தையும் அருளுரைகளையும் செவிமடுக்க வரும் பக்தர்களுக்கிடையே நின்று நடப்பவைகளை அவர்கள் கவனித்தார்கள். எவர் போலி என்பதை உலகத்திற்குக் காட்ட வேண்டும் என்று வந்தார்களோ அவர் முன் வந்ததும் அவர்களை அறியாமலேயே அவர்களுடைய மனம் அவரது தெய்வீகப் பொலிவில் லயித்தது. அருளுரையில் மூழ்கித் திளைத்தது.

சூடாமணியை எதுவுமே செய்ய முடியாமல் போவதை பகுத்தறி வாளர்களுக்கு ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அதனால் அவர்கள் சூனியங்கள் செய்வதில் வல்லவன் என்று பெயர் பெற்ற மந்திரவாதி ஒருவனின் துணையை நாடினார்கள். பகுத்தறிவாளர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டவர்கள் தன்னை அதுவரை மதிக்காதவர்கள் தன்னிடம் சரணடைந்ததைக் கண்ட மந்திரவாதி எந்தவிதத்திலும் சூடாமணியைக் கொன்று விடுவதாக அவர்களிடம் உறுதி அளித்தான்.

கொடிய நாகபாம்பின் உடலை எரித்து அதன் சாம்பரை ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு சூடாமணி தரிசனம் தரும் இடத்திற்கு வந்தான். அவனை ஏற்பாடு செய்த பகுத்தறிவாளர்களும் சூடாமணி துடிதுடித்து சாகப் போவதைக் கண்டு மகிழ வந்திருந்தார்கள். மந்திரவாதி தனது உண்மைத் தோற்றத்தை மறைப்பதற்காக காவியுடை உடுத்தி திருநீற்றுக் குறியுடன் வந்திருந்தான். அவனைக் கண்ட மாத்திரத்தே அவன் யார் என்பதையும் எதற்காக வந்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட சூடாமணி அவனை தன்னருகில் அழைத்தார்.



அவன் நீட்டிய கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார். அதில் இருந்த சாம்பரை தனது உடலிலும் முகத்திலும் பூசினார். மந்திரவாதி அவர் கீழே விழுந்து வேதனையில் அவதிப்படப் போவதையும் மரணமாகப் போவதையும் எதிர்பார்த்து நின்றான். ஆனால் சூடமணிக்கு எதுவும் நடக்கவில்லை அதனால் அவன் வெட்கித் தலை குனிந்து அவ்விடத்தை விட்டு அகன்றான். பின்னர் சூடாமணியிடம் வந்து தனது செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரது பக்தனானான். சூடாமணியை

நாகம் ஒன்று தேடி வந்த சம்பவம் ஒன்றும் மந்திரவாதி அவரைக் கொல்ல முயன்றதன் பின்னர் இடம் பெற்றிருந்தது. கிராமத்தில் திடீரென்று பெரிய நாகம் ஒன்று வந்து சேர்ந்தது. அதனைப் பார்த்தவர்கள் அதனால் எங்கு தங்களுக்கு தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தார்கள். அதனால் சூடாமணியிடம் தங்களது பயத்தை எடுத்துக் கூறினார்கள். சூடாமணி அவர்களை பாம்பு எதுவும் செய்யாது என்று அறிவித்தார்கள். ஒரு நாள் சூடாமணி தரிசனம் தந்து கொண்டிருந்த கோவிலுக்குள் அந்த பாம்பு நுழைந்தது. அவரை நோக்கிச் சென்றது. படம் எடுத்து ஆடியது. சூடாமணி அதனை கையில் பற்றினார். தனது நாக்கை நீட்டி அதன் பிளவுபட்ட நாக்குடன் ஒன்றச் செய்தார். பின்னர் அதனை கீழே விட்டார். பாம்பு வந்த வழியே திரும்பிச் சென்று விட்டது. அதன் பின்னர் அது அந்தப் பகுதியில் காணப்படவேயில்லை.

மந்திரவாதியும் தோற்றுப் போனதைக் கண்ட பகுத்தறிவாளர் குழு சூடாமணியைச் சரணடைந்த போதிலும் கடவுள் நம்பிக்கையற்ற ஒரு கணவனும் மனைவியும் சூடாமணியை விஷப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தினார்கள்.

கிருஷ்ணர் தோற்றத்தில் அவர் தோற்றமளித்த ஒரு நாள் கொடிய நஞ்சு கலந்த பாலை தம்ளரில் கொண்டு வந்து அவரிடம் தந்து பருகும்படி வேண்டினார்கள். சூடாமணி அதனை அன்புடன் ஏற்று அருந்தினார்கள். சிறிது நேரத்தில் நஞ்சு கலந்த பாலை வாந்தி எடுத்து விட்டு எதுவும் நடக்காதது போன்று பக்தர்களுக்கு தொடர்ந்து ஆசிகள் வழங்கினார். சூடாமணிக்கு எதுவும் நடக்கவில்லை என்பதைக் கண்ட தம்பதிகள் இருவரும் பின்னர் சூடாமணியின் பக்தர்கள் ஆனார்கள். அவரை விஷம் வைத்துக் கொல்ல நினைத்த சிறுமைத்தனத்தையும் அவரின் பெற்றோரிடம் ஒத்துக் கொண்டார்கள். (தொடரும்)

## ஈழத்து எழுத்தாளர்களை பாராட்டிய தமிழக பேராசிரியை




தற்போது தமிழகத்தில் தங்கியுள்ள பிரபல ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொ.வும் மொன்றியலில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் அளவெட்டி சிறிசுக்கந்தராசாவும் அண்மையில் சென்னைப் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஒரு இலக்கியச் சந்திப்பை நடத்தினார்கள். அன்றைய தினம் சென்னை குயின்மேரி பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியையும், விமர்சகரும் கவிஞரும், எழுத்தாளருமான சுமதி எம் நாட்டு எழுத்தாளர்களின் இலக்கிய ரசனையையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொண்ட திறனையும், நன்கு பாராட்டினார். தமிழச்சி என்னும் புனைபெயரில் கவிதைகள் எழுதி வரும் சுமதியின் சில கவிதைகள் தொடர்ந்தும் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படத்தில் எஸ்.பொ., சிறிசுக்கந்தராசா ஆகியோருடன் சென்னைப் பல்கலைக்கழக முன்றலில் சுமதி காணப்படுகின்றார்.

உதயன் தொடர்புகளுக்கு
Tel: 416-752-1524 Fax: 416 752 6703 www.uthayan.ca

வீடு வாங்க, விற்க
HOMELIFE
HOMELIFE METRO
Realty Inc. - Real Estate Broker
Flexible Commission
FREE MARKET EVALUATION
• Buying Resale Homes & New Homes from Builder
• Selling your Home & Business
• Low-Rate Mortgage Arrangements
அழையுங்கள் நடா ஜி. நடராசா
416-616-8751
5200 Finch Ave. East #206, Scarborough, Ont. M1S 4Z4



Nada G. Nadarajah
B.V.Sc
Sales Representative
GOLD AWARD WINNER
416-293-5093 (24hr.)

MORTGAGE INTELLIGENCE
வீட்டு அடமானம் அல்லது கடன் வசதிகள் செய்து தரப்படும்
MORTGAGES & LOANS
• 5% DOWN PAYMENT TO BUY A HOME
• PRE-APPROVAL OF MORTGAGES
• ALL RESIDENTIAL MORTGAGES (1ST / 2ND)
• BAD CREDIT / BANKRUPTCY
VISA CARD FOR NON QUALIFIED APPLICANTS
ALL MORTGAGES & LOANS please call
Latchman Sukhdeo B.A. Dip. Com.
Mortgage Consultatnt
416-287-3289 ~ 416-566-5036

# அமிர்தலிங்கம் பவளவிழாவில் வெளியீடு செய்த இரு நூல்களின் அறிமுகம்

- வல்வை ந. நகுலசிகாமணி

## "வரலாற்றின் மனிதன்"




திரு. அமிர்தலிங்கம் அவர்களின் மறைவின் பின்பு திரு. ரி. சபாரெத்தினம் எழுதிய Murder of Moderate என்ற ஆங்கில வரலாற்று நூல் வெளிவந்தது. அதனையடுத்து ஆங்காங்கே பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளையும் தவிர அவர் மறைந்த 13 ஆண்டுகளில் அவர் தொடர்பாக அவரைப் பற்றிய வெளியீடு வேறு ஒன்றும் வரவில்லை.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கையின் சுதந்திர காலத்தோடு ஆரம்பித்த ஈழத் தமிழர்களின் நான்கு தசாப்த அரசியல் போராட்டத்தோடு இரண்டறக் கலந்தவர். தனித்துவமான ஒரு தலைவராகப் பரிணமித்தவர். உன்னதமான அரசியல் தலைவர். இலங்கைத் தமிழர்களுடைய வரலாறு அமிர்தலிங்கம் அவர்களைத் தவிர்த்து எழுதப்பட இயலாது.

உன்னதமான அரசியல் தலைவர்களைப்போல அமிர்தலிங்கம் அவர்களும் மறைக்கப்பட்டார். அது உலக வரலாறு. ஆனால் அந்த வரலாற்று மனிதர்கள் வரலாற்றில் இருந்தும் அழிக்கப்பட்டு விடுவதில்லை. அவர்களுடைய வரலாறுகள், ஆக்கங்கள், ஆற்றிய பணிகள், ஆய்வுகள் எழுதப்படுகின்றன. அந்த வகையில் "வரலாற்று மனிதன்" என்ற தலைப்பில் 288 பக்கங்களை உள்ளடக்கி வாழ்த்துச் செய்திகளும் இரங்கல் செய்திகளும் 55 வெளிநாட்டு உள்நாட்டு பிரமுகர்களின் கட்டுரைகளும் 12 ஆங்கிலக் கட்டுரைகளும் 2 கவிதைகளும் அடங்கிய 40 வருட வரலாற்றுப் பொக்கிஷம்.

## "அமிர்தலிங்கம் ஒளியில் எழுதுதல்"




மறைந்த தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் பங்களிப்புடன் சிறந்த ஈழத் தமிழர் அரசியல் போராட்ட வரலாற்று புகைப் படங்களின் ஓர் ஆவணம் இந்நூல் Graphos Phos என்ற கிரெக்க மூலத்திலிருந்து உருவான Photo Graphy என்பது Writing in Light என்று அர்த்தம் கொள்கிறது. "ஒளியில் எழுதுதல்" என்ற இத்தொகுப்பின் தலைப்பு இந்த மூலத்தில் இருந்தே பெறப்பட்டிருக்கிறது.

புகைப்படங்கள் காலத்தின் ஒரு கணத்துகளை சாசுவதமாகச் சிறைப்பிடித்து விடுகின்றது. காலத்தை உறைநிலையில் வைத்திருக்கும் அசாத்திய வேலை அது. அழிவின் இருளில் இருந்து மீட்கப்பட்ட வரலாற்றுப் படிமானங்களாகப் புகைப்படங்கள் தனிச்சிறப்புப்பெறுகின்றன. வரலாற்றின் உன்னத சாட்சியங்களாக அங்கீகாரம் பெறுகின்றன. ஈழத் தமிழர் சமூகம் ஆவணப்படுத்தலில் அக்கறை கொள்ளாத சமூகமாகவே இருந்திருக்கின்றது. ஆறுமுகநாவலரது அசலான ஒரு படமேனும் எம்மவரிடையே இல்லை. 1976இல் காலமான தந்தை செல்வாவின் பேச்சு ஒலிநாடா யாரிடமும் இல்லை.

இந்த பின்னணியில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு "சிறீ" எதிர்ப்பியக்கத்தில் இருந்து சாத்வீகப் போராட்டத்திற்கூடாக ஈழத்தமிழர் நடாத்திய போராட்ட வரலாற்றினை இந்நூல் புகைப்படப் படிமங்களுக்கூடாக முதல் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு ஒளிபாய்ச்சுகிறது. ஒவ்வொரு படமும் பல பக்கங்களைக் கூறும் அரசியல் உணர்வலைகளை ஒரு கணத்துள் எழுப்பி விடுகிறது.

"தமிழனுக்கு சுயநிர்ணய உரிமை" வேண்டும் என்ற தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் கவனத்தை ஈர்த்து அரசியலில் தளம் பதித்த திரு. அமிர் அண்ணனின் 40 ஆண்டுகால அரசியல் வாழ்வு ஈழத்தமிழர் பிரச்சனையை சர்வதேச சமூகத்தின் முன்பு அவர் வெற்றிகரமாகச் சாதித்தவை அவருடைய ஆளுமையின் பரிமாணங்கள் இப்புகைப்படத் தொகுப்பு தந்துள்ளது.

தமிழ் பகுதிகளில் மேற்கொண்ட இராணுவ நாசகார அழிப்பு நடவடிக்கைகளில் தமிழரசுக் கட்சி சார்ந்த அரிய ஆவணங்கள் அழிந்து போயின. 1986இல் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் இல்லம் தமிழ் ஆயுத தாரிகளால் சூறையாடப்பட்டு அங்கு அவர் சேர்த்து வைத்திருந்த ஆவணங்கள் அனைத்தும் எரிக்கப்பட்டு சில எடுத்துச் செல்லப்பட்டன.

இவ்வளவு அழிவுகளையும் கடந்த நிலையில் தமிழர்களின் போராட்ட வரலாற்றை புகைப்படங்களாத் தொகுத்த ஆவணமாக மிளிர்கின்றது.

ஈழத்திற்கு செல்லும் ஒவ்வொரு தமிழ் மகனும் தனது ஊர்ப்பாடசாலை, நூல் நிலையம் ஆகியவற்றிற்கு அன்பளிப்பு செய்யும் வரலாற்று நூல் இது. நூல் தேவையானவர்கள் தொடர்புகளுக்கு: (416) 438-7650



பஞ் சொக்கலிங்கம்
Punch Sockalingam

Century 21
Affiliate Realty Inc.
80 Corporate Dr., Suite 208
Toronto, ON M1H 3G5

416-290-1200




Punch

Bus: 416-290-1200
Res: 416-490-1340

TRAFFIC TICKET ADVOCATE

CONSULTATION & COURT REPRESENTATION
AFFORDABLE RATES

| | |
|---|---|
| ▪ Speeding | ▪ வேகமாக வாகனம் செலுத்துதல் |
| ▪ Careless Driving | ▪ கவனக் குறைவில் வாகனம் செலுத்துதல் |
| ▪ Accident Offences | ▪ வாகன விபத்துக் குற்றங்கள் |
| ▪ Drive while Licence under suspension | ▪ சாரதி அனுதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்ட பின்பும் வாகனம் செலுத்துதல் |
| ▪ Drive without Auto Insurance | ▪ வாகனக்காப்புறுதி இல்லாமல் வாகனம் செலுத்துதல் |
| ▪ All Traffic Tickets | ▪ ஏனைய வாகனப் போக்குவரத்து குற்றச்சாட்டுகள் |
| ▪ Immigration | ▪ குடிவரவு சட்ட ஆலோசனைகள் |
| ▪ Other Selected Paralegal Services | ▪ சிறுவிடயங்கள் பற்றிய சட்ட ஆலோசனைகள் |
| ▪ Legal Matters in Sri Lanka (Consultation only) | ▪ இலங்கையில் சட்ட விடயங்கள் பற்றிய ஆலோசனைகள் |

For FREE Consultation Call
இலவச ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

**C.S. Bala LL.B. (Lond. U.K.)**
Court Agent & Consultant
**416-294-4166 or 416-261-2168**

*Over 30 years courtroom experience*
*Former Provincial Prosecutor*
*(Dept. of Attorney General - Toronto)*
*Attorney-at-Law & Notary Public - Sri Lanka*
*(Former Partner of John Wilson (Law Firm Colombo)*

**Hillside Plaze**
**2857 Lawrence Ave. E., Suite 12 (2nd Floor)**
**Scarborough, ON M1P 1S8**

## உதயன்

# சோதிட விளக்கங்கள்

# குளிகாதியர் இராகுகாலங்களின் நிர்ணயங்கள்

### சோதிடர் இ. மெய்யழகன் (416-284-0215)

குளிகாதியர், இராகுகால நிர்ணயம் செய்வதில் இருவிதம் கையாளுகிறார்கள். பிரபலமான ஒரு பஞ்சாங்கத்திலும் அதனோடு சம்பந்தப்பட்ட நாட்காட்டிகளிலும் ஒருவிதமாகவும் மற்றவர்கள் வெளியிடும் பஞ்சாங்கங்கள் நாட்காட்டிகளில் வேறொரு விதமாகவும் இவை குறிப்பிடப்படுகின்றன. முக்கியமாக இராகு கால வேறுபாடு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. பகல் இரவை 30 நாளிகையாகக் கொண்டு அதை 8 சம பங்காக்கி கணிக்கப்படும். இராகுகாலம் பிரபலமான சோதிடப் புத்தகங்களிலுள்ள விதிகளுக்கு மாறானவையாகும். இதனால் இராகுகாலப் பூசை நேரங்களிலும் சுபமுகூர்த்த நேரம் கணிக்கும் போதும் பிழையான நேரம் எடுக்க வேண்டியுள்ளது. குளிகாதியர் நிர்ணயமும் இராகுகால நிர்ணயமும் பொதுவானவிதி நிரட்சரேகைக்கு உரியதாகக் கணிக்கப்பட்டிருந்தாலும் அசை அந்தந்த இடங்களுக்குரிய அகசுப்பிரமாணத்தின் (பகல்மானத்தின்) பிரகாரம் அகசை 8 சமபங்காக்கி கால நிர்ணயம் செய்ய வேண்டும். இரவும் இதேபோல் இரசு நேர அகசுக்கு (இரவு மாணத்திற்கு) அமையக் கணிக்க வேண்டும் என்பதுதான் விதி முறை. இதனை சாதகலங்காரம் மூலமும் உரையும் என்ற நூலிலும் வேறு சில புத்தகங்களிலும் இருப்பதை அவதானிக்கலாம். சாதகலங்காரம் மூலமும் உரையும் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை பின்வருமாறுள்ளதை அவதானிக்கலாம்.

விளக்க விருத்தியுரை

குளிர் வெள்ளிக்கு
இருமூன்று மாலைபதின்
எட்டுஆம்

கூறுசனிக்கு ஓர்
இரண்டாம் ஏழ இரண்டாம்
நிசிக்கே

(இ-ள்) ஜாதகங்களில் குளிகன் இருக்கும் இருப்பைக் கூறுமிடத்து ஞாயிற்றுக்கிழமை பகலில் நா-26 இரவில் நா-10, திங்கட்கிழமை பகலில் நா-22, இரவில் நா-16, செவ்வாய் கிழமை பகலில் நா-18 இரவில் நா-2, புதன்கிழமை பகலில் நா-14, இரவில் நா-26 வியாழக கிழமை பகலில் நா-10, இரவில் நா-22 வெள்ளிக்கிழமை பகலில் நா-6, சனிக்கிழமை பகலில் நா-2, இரவில் நா-14 ஆகும். எ-று

(வி-ரை) முன்பு பகலிரவு சக்கரங்களில் விளக்கிக் காட்டிய குளிர்காதி நால்வர்களின் கால ஆரம்ப முடிவுகள் நிரட்சஸ் தலமாகிய பூமத்திய ஸ்தானத்திற்குரியது. பிற இடங்களுக்கு அந்தந்த இடங்களுக்குரிய பகல் இரவு அக்சு பிரமாணங்களை எட்டு பங்கு செய்து பங்கு ஒன்றுக்கு இவ்வளவு நாழிகை என்று சுத்தமாக அறிந்து கொள்ளல் வேண்டும். தற்காலம் வழங்கப்பட்டுவரும் இராகு காலத்தின் காலநிர்ணயங்கள் கூட பூமத்தியஸ்தானமாகிய நிரட்சஸ்தலத்திற்குரியதேயன்றி வேறிடங்கட்குரியதல்ல. அந்தந்த இடங்களில் அக்சு கொண்ட இதனையும் அறிக.

இதன்படி பகலிரவு அகசுப்படி (பகலிரவு மானங்களின்படி) கணிக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது. நிரட்சரேகைக்குரிய கணிப்புக்கும் மற்ற இடங்களுக்குமான கணிப்புக்கும் வித்தியாசப்படுவதற்கு காரணம் நிரட்சரேகையிலுள்ள இடங்களின் பகல்மானமும் இரவுமானமும் ஒரே அளவாக அதாவது 30 நாளிகையுள்ளதாக அமையும். மற்ற இடங்களுக்கு சூரிய உதயம் சூரிய அஸ்தமனம் கூடிக்குறைந்து காணப்படுவதால் ஒரே அளவான 30 நாளிகை இருப்பதில்லை. இதனால் தான் அகசுப்பிரமாணங்களில் மாற்றம் ஏற்படுகின்றது என்பதை அவதானிக்க வேண்டும். ஆகவே வாசகர்களும் சோதிடமணிகளும் குறிப்பிட்ட விதிமுறையை அனுசரித்து குளிகாதியர் காலங்களையும் இராகு கால நேரங்களையும் கடைப்பிடித்தொழுகுமாறு கேட்டுக் கொள்கிறேன். (தொடரும்)


உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்- கனடா

பெருமையுடன் வழங்கும் உரும்பிராய் பாடசாலைகளின்

# பொங்கல் விழா – 2003

வழமைபோல் இவ்வருடமும் பல சிறப்பான கலை நிகழ்ச்சிகளுடன் உங்களை மகிழ்விக்க



**Saturday January 4th 2003- 5.00 pm**
**Stephen Leaclck C.I**
**2450 Birchmount Road**
**(Huntingwood & Sheppard)**

தொடர்புகளுக்கு
அழையுங்கள்
416-496-0608
416-321-6533

விளம்பர அன்பளிப்பு
SANTHA
416-200-5470

நுழைவுச்சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்

# பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் பார்வையில் அளவெட்டி சிறீசுக்கந்தராஜாவின் சிறுகதைகள்

எழுத்தாளர் ஜெயமோகன் தமிழகத்தின் சிறந்த படைப்பாளிகளுள் ஒருவர்



சிறீசுக்கந்தராசா

கடந்த வாரத் தொடர்ச்சி.....

அதேபோல பண்டைத் தமிழை அங்கதத் தன்மையுடன் பயன்படுத்தி அரிய தருணங்கள் சிலவற்றை அவரது மொழி கண்டடைகிறது. ஆனால் பலசமயம் கொண்டு கூட்டினாலும் பொருள் கொள்ள முடியவில்லை. பல கதைகளுக்கு பாயிரம் அல்லது தொகுப்புரை போல வரும் வெண்பாக்கள் வித்தியாசமாக அனுபவத்தை அளிக்கின்றன.

சிறிசுவின் கதைகளின் அமைப்பு அங்கதக் கதைகளுக்கேற்ப போலிசெய்தல் (பாரடி) என்ற தளத்திலேயே உள்ளது. துப்பறியும் கதை, (கொலைஞனை தேடி) அறிவியல் கதை (சிறியரும் அவர்தம் ஏழில் செவ்வாயும்) செவ்வியல் படைப்பு, (சிதைப்பதிகாரம்) என இதற்கு பல உதாரணங்கள் சொல்லலாம். இவ்வடிவங்களை அணுகும்போது இதில் நேர்த்தியான ஒரு கதையைக் கற்பனை செய்ய முயன்றால் மூளைக் களைப்பும் கதைகள்மீது உதாசீனமும் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்வரிகளை அப்படியே எடுத்துக் கொண்டு வாசித்துச் செல்வதே சிறப்பானதாக இருக்கும் என்று படுகிறது.

சிறிசுவின் கதைகளில் உள்ள விழுமிய மீறல் அல்லது 'விழுமியமற்ற' தன்மை (அப்படி ஒன்று உண்டு என நான் நம்பவில்லை) நம்முடைய அன்றாட போதத்தை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. ஆனால் அது சிறிசுவைப் போன்ற வாழ்வுள்ள ஒருவருக்கு இயல்பானதே என நாம் உணர வேண்டும். அவருடன் ஒருநாள் அலையும் போதே உலகில் உள்ள பலவிதமான உணவுப் பழக்கங்களைப் பற்றி சொன்னார். அப்போது எனக்கு ஒன்றுபட்டது. உணவிலே அசிங்கம் என்று ஒன்று இல்லை. அது மனப்பிரமை. மேலும் தோன்றியது. உலகில் எங்காவது 'என்ன அசிங்கமான சனங்கள் பார். இட்லியை சாம்பாரில் தோய்த்து விழுங்குகிறார்கள்' என்று நம்மைப்பற்றி எண்ணக்கூடிய மக்களும் இருக்கலாம். ஒழுக்கம் என்பது ஒரு சமூக ஒப்பந்தமும் அதன் விளைவான நியதியே அல்லாமல் அது ஓர் அறமல்ல என்பதை இன்றைய புலம்பெயர்ந்த ஈழ எழுத்துக்கள் தமிழ் மனதுக்கு காட்டுவது மிக முக்கியமான திறப்பு.

சிறிசு மற்றும் அவரது வகைப்பட்ட படைப்பாளிகளினூடாக சிங்காரம் மிக வலுவாக முளைத்தெழுவதை காணும்போது வியப்பே எழுகிறது. 70களில் எழுதிய சிங்காரம் அன்று புதைக்கப்பட்டு இப்போது எழுகிறார் என்று படுகிறது. இவர்களுக்கும் சிங்காரத்துக்கும் உள்ள ஒற்றுமை மிக முக்கியமானது. அவரும் உலகம் சுற்றியவர். போர்களை, அழிவை கண்டவர். அவரது மொழியில் வட்டார வழக்கும் செவ்வியல் கூறுகளும் கலந்து எடுத்தாளப்படுகின்றன. அவரும் வீரகதை என்ற வடிவத்தை போலிசெய்தே எழுதியுள்ளார். அவரது ஆக்கங்களும் ஒழுக்க பிராந்தியத்தில் தன்னை நிறுவிக் கொண்டிருக்கிறது. சிங்காரமும் சிதைவின் கலைஞரே! அவரது மொழி எங்கு அதன் அனைத்து நியதிகளையும் மீறுகிறதோ அங்கேதான் ஆற்றலுடன் வெளிப்படுகிறது.

சிறிசுவின் இருகதைகளை சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி'யின் சந்தர்ப்பங்களுடன் ஒப்பிட்டு வாசிப்பது ஆர்வமூட்டுவது. சிதைப்பதிகாரம் கதையை சிங்காரத்தின் நாவலில் பாண்டியன் குடித்துவிட்டு பினாங்கு தெருவில் வரும்போது 'கோவலன் செட்டியாரை' காணும் இடத்துடன் ஒப்பிடலாம். அதேபோல 'படுப்பது பற்றி கதை'யை சிங்காரத்தின் 'பஞ்சாங்' விடுதியுடன் ஒரு பரிணாம மாற்றத்தை நாம் உணரலாம். சிறிசுவின் தாவல்கள் மூர்க்கமாக இருக்கின்றன. சிங்காரத்தின் சிதறடிப்பின் நளினம் இவற்றில் இல்லை. விரிவான ஓர் ஒப்பீட்டுக்கு இது தருணமல்ல. சிங்காரம் சிலப்பதிகாரத்தை சிதைக்கும்போது அதில் ஓர் ஆழமான வரலாற்றுப் பிரக்ஞை செயல்படுகிறது. காலகாலமாக கற்பரசியின் சிலம்பை விற்று கணிகை தெருவில் நிற்கும் கோவல - பட்டினத்தார் - செட்டியார்களின் மாறாத ஒரு வரிசை நம் கண்முன் விரியும் அனுபவம் அது. பஞ்சாங் விடுதியில் 'மலைநாடியர் மங்கோலியர் மகளிர் கடை திறமின்!' என மதுவுடனாட முடியாதபடி திருவள்ளுவரும் மணிமேகலையும் வந்து தொந்தரவு தருகிறார்கள். ஆனால் 'லௌறா பொடிச்சி' யை கொஞ்ச நேரமாவது தடுக்கும் வேலிகள் ஏதுமில்லை.

சிறிசுவின் கதைகளின் குறைபாடு என்ன என நான் எதை சொல்கிறேன் என இப்போது ஒருவாறு விளக்கியிருப்பேன் என நம்புகிறேன். சிதைவு என்பது இலக்கிய கலையின் மிக முக்கியமான ஓர் நிகழ்வேயாகும். எந்த இலக்கியப்படைப்பும் தன்னளவில் ஒரு சிதைவை நிகழ்த்தவே செய்கிறது. கட்டும் இலக்கியம் என்பது கலாச்சாரம் என்பது இருக்கும்வரை சாத்தியமல்ல. இடித்துக் கட்டுவதே எந்த இலக்கியமும் செய்யும் செயல். ஆனால் சிதைவு மட்டுமே ஒரு போதும் இலக்கியமாகிவிடாது. இலக்கியம் என்பது சிதைவாக்கம். ஒன்றின் சிதைவு இயல்பாக பிறிதொன்றின் ஆக்கமாக மாறிவிடுகிறது. ஒரு பெரும் கோபுரம் இடிக்கப்பட்டு விழுகிறது. விழுந்த வடிவம் பிறிதொரு கட்டுமானமாக இருக்கிறது. அதுவே இலக்கியகலை. இவ்வெண்ணத்தை மாற்றும் எந்தப்படைப்பையும் நான் இன்றுவரை படிக்கவில்லை. படைப்பு எந்த தர்க்கத்தையும் மீறலாம். அதனால் மீறமுடியாத ஒன்று அது உருவாக்கும் புனைவுத் தர்க்கம்தான்.

ஏன் வடிவமின்மை ஓர் இலக்கியமாக இருக்கக் கூடாது? ஏனெனில் வாழ்க்கை என்பது வடிவற்றது என்பதே. வாழ்க்கை இலக்கற்றதாக, ஒழுங்கற்றதாக, தர்க்கமற்றதாக, கட்டுப்பாடற்றதாக, அர்த்தமற்றதாக இருக்கிறது. இலக்கியம் அதை ஏதேனும் ஒரு முறையில் அர்த்தப்படுத்திக் கொள்ளும் முயற்சியே. அதுதான் இலக்கியத்தின் பிறவிக்காரணம். அதை அது மீற முடியாது. இதோ பேசிக் கொண்டிருக்கும் நான் வெளியே போய் ஒரு விபத்தில் சாகலாம். ஒரு காரணமும் இல்லை. ஆனால் அது இலக்கியத்தில் சாத்தியமில்லை. நான் சாக புனைவுத் தர்க்கம் சார்ந்த ஒரு காரணம் தேவை. அப்படி எந்த காரணமும் இல்லை என்று காட்டுவதும் புனைவுத் தர்க்கமேயாகும். சிறிசுவின் கதைகளை படித்து முடிக்கும்போது ஓர் சீண்டல் மட்டுமே நம்மை வந்தடைகிறது. தன்னை கலாச்சாரம், மதம், கருத்தியல் சார்ந்து இறுக்கமாக வைத்திருக்கும் பழமைவாதிக்கு அச்சீண்டல் ஒருவேளை வாள்த் தீற்றலாகப் படலாம். முதிர்ச்சியுள்ள இலக்கியவாசகனுக்கு ஒரு புல் அரம் உரசிப்போவதற்கப்பால் அது ஏதுமில்லை. ஆம்! இக்கதைகள் முயற்சிகளே.

சிறிசு மேலும் ஊக்கத்துடனும் தீவிரத்துடனும் தனது சிறந்த கதைகளை கண்டடைவார் என நம்புகிறேன். வாழ்த்துக்கள்!***

## தமிழச்சி கவிதைகள் பயணம்

பிறந்த இடம் துறந்து வளர்ந்த தடம் மறந்து
புயல் மழையின் உக்கிரம் உணர்ந்து
புறமும் அகமும் சுழல்நீர்ப் பரப்பிலே திரிந்து
புதையலாய் உள்ளிருக்கும் நிழல் நினைவு மட்டுமே சுமந்து
ஊன் வடம் ஊர்ந்து சுருண்டு
உயிர்த்தேர் நிலை கொண்ட களைப்பில்
அந்நிய தேசத்தின் அயல்மொழி மண்ணில் ஒதுங்கும்
அள்ளுவதற்கு ஆளில்லாத அநாதைக் கிளிஞ்சல்களாய்....
உதிரம் உலர்ந்த உப்புக் கண்டங்களாய்ப்
பயமெனும் கடவுச் சீட்டைப் பத்திரப்படுத்திப்
பயணித்த அகதிகளோடு வந்த அந்தக் கப்பல்,
உலகின் ஏதோவொரு துறைமுகத்தில்
உமிழ்ந்து விட்டுப் போனது வாழ்வின் உவர் சுவையை!


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
ரவி நடராஜா
தற்போது இரண்டு இடங்களில் சேவையாற்றுகின்றார்



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் நஷ்டஈடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய நஷ்டஈடுகள்
- மற்றைய இழப்புகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதிமுறைகளை மீறிய குற்றங்கள்


Accident & Traffic Ticket
(12 Years Insurance Claims Experience)

Weston நகரில்
2095 Weston Road, Suite 203,
Toronto, ON
Tel: 416-245-6555
Fax: 416-245-7766

Scarborough நகரில்
2390 Eglnton Ave. E., Suite 223,
Scarborough, ON
Tel: 416-755-2801
Fax: 416-755-8030

# அகிலம் போற்றும் பாபாவிற்கு அகவை 77





எஸ்.ரி. சிங்கம்

**உலகின் அமைதிக்காகவும் உலகில் உள்ள மக்களின் மகிழ்ச்சிக்காகவும் அவர்களின் பிறவி விடுதலைக்காகவும் அவதரித்த நடமாடும் அவதார புருஷர் எம் கண்கண்ட தெய்வம் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 77வது பிறந்த தினம் (23.11.2002) உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான சாயி பக்தர்களால் நாளை பக்தி பூர்வமாகக் கொண்டாடப் படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

**-எஸ்.ரி. சிங்கம்**

**வை**யத்து மாந்தரின் பெரும் பாக்யத்தாலும் ஞானியர் முனிவர்களின் கடும் தவத்தாலும் நடமாடும் அவதார புருஷனாக கலியுகத்திற்கு கிடைத்த தனிப்பெரும் அவதாரமான பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 77வது பிறந்த தினம் நாளை (23 நவம்பர் 2002) சனிக்கிழமை உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான சாயி பக்தர்களால் மிகப் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்பட அருள் பாலித்துள்ளது.

அன்பு, ஞானம், கிருபை, சர்வசத்தி ஆகிய அனைத்தாலும் உருவான பாபா "நான் ஒரு சாதாரண மனிதனாக வந்திருந்தால், நீங்கள் என்னை மதித்து என் உபதேசங்களைக் கேட்டு நடந்திருக்கமாட்டீர்கள். அதனாலேயே நான் அதிமானுஷ ஞானம் சத்தியுடன் உங்கள் முன்தோன்றி இருக்கிறேன்" எனக் கூறும் பாபா, தனது பிறந்த தினக் கொண்டாட்டம் பற்றிய சில ஒழுங்குமுறைகளையும் கடைப்பிடிக்கும்படி கூறியுள்ளார்.

நான் மானிட வடிவில் அவதரித்தாலும் எனக்கென்று குறிப்பிட்ட திகதியையும் மாதத்தையும் பிறந்த நாளாகக் கொண்டாட விரும்பவில்லையெனக் கூறியுள்ள பாபா, உங்கள் இதயத்தில் தெய்வீகம் மலரும் நாளையே பிறந்த நாளாகக் கருதுகிறேன். ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைப் பொறுத்தவரை அந்த நாளை பிறந்தநாளாகக் கொண்டாட வேண்டும் என்பதே எனது விருப்பம். எனது அறிவுரைகளை நீங்கள் செயற்படுத்த முனையும் போதும் என் நல்வழிகளைப் பின்பற்றிக்கொள்ளும் போதும் அந்த நாளிலே நான் உங்களிடையே பிறப்பதாக எண்ணிக் கொண்டாடுங்கள். நவம்பர் 23ஆம் திகதி எனது பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு அன்று எந்த நற்பணிக்கும் உங்களை அர்ப்பணித்துக் கொள்ள முற்படாவிட்டால் இதனால் எந்த நற்பலனும் இல்லை. இந் நன்னாளில் ஏழை எளியவர்களிடம் அன்பும் கருணையும் காட்டுங்கள். மக்கள் சமுதாய முன்னேற்றத்தில் ஈடுபடுங்கள். இறைவனிடம் கொள்ளும் பக்தியை மக்களிடம் கொள்ளும் அன்பாக வெளிப்படுத்துங்கள். இதுவே பிறந்தநாள் கொண்டாடுவதன் நோக்கம். இதுவே எல்லோருக்கும் நன்மை தரக்கூடியதாகவும் அமையும்.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள இயற்கை எழில் நிறைந்த 'புட்டபர்த்தி' என்னும் சிற்றூரில் 1926ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை பகவான் அவதரித்தார். சத்திய நாராயணன் எனப் பெயர் சூட்டப்பட்ட அப்பாலகன் "சத்யா" என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு தன் சத்திய வாக்குக்கு நிருபணம் காட்டி "சத்திய சாயிபாபா" ஆனார்.

"நான்தான் சாயிபாபா" ஆம் நான்தான் பாரத்துவாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் பிறந்த சாயி பாபா. உங்கள் துயர் தீர்க்கவே மீண்டும் வந்துள்ளேன். உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். நான் அங்கெல்லாம் குடிகொண்டு காப்பாற்றுவேன் என்று திருவாய் மலர்ந்து அருளியதுடன் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கும் மக்கள் இனத்தை மறுபடியும் உய்விக்கும் பொருட்டு தான் தோன்றியுள்ளதாகவும் பிரகடனம் செய்து தெய்வீக நெறியின் முதற்படியாக தன்னை ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் வணங்குமாறு அறிவுறுத்தினார். அன்று தொட்டு பகவானின் வழிபாட்டிற்குரிய நன்னாளாக வியாழக்கிழமை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

"நீ அன்போடு என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் நான் உன்னை நோக்கி நூறு அடிகள் எடுத்து வைக்கிறேன்" எனக் கூறியுள்ள பாபா, மற்றைய அவதார புருஷர்களைப் போலவே தனது ஊர், நாடு, மதம், குலம், ஏழை, செல்வந்தர் என்ற வேறுபாடின்றி உலகம் முழுவதும் உள்ள மக்கள் அனைவரும் தம்மவர் என்று கொள்வதால் உலகத்தின் பன்னாட்டு மக்களும் அவரைக் கண்டு அருள்பெற வருகின்றனர். பாபா தனது பக்தர்களிடம் பரந்த மனப்பான்மையையும் கருணை காட்டும் உள்ளத்தையும் எல்லா உயிர்களையும் பரம்பொருளின் வடிவமாகப் பார்க்கும் நோக்கம் உள்ளவராக இருக்கிறார். மேலும் தன் பக்தர்களின் முற்பிறவி, கடந்த காலம், வருங்காலம் எல்லாவற்றையும் உணர்ந்து அவர்தம் ஆன்மா பெறவேண்டிய அனுபவத்திற்கான சக்தியையும் மனோதிடத்தையும் தந்தருளி அவர்களின் துயரத்தைப் போக்குகிறார்.

"உலகம் முழுவதும் என்வீடு, ஒவ்வொரு நாடும் ஒவ்வோர் அறை" என பாபா கூறினாலும் அவர் மனமுவந்து நிலையாகக் குடியிருப்பது புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்திலேயேதான். பிரசாந்தி நிலையம் என்றால் 'முழு அமைதி நிலவும் இடம்' என்று பொருள். இந்நிலையம் 1950ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு அழகிய வழிபாட்டுக் கூடம். இதன் முகப்பிலேயே மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் விளக்கமாகவும் அழகாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

"நீ துன்பப்படும்போது என்னை நினைத்துக் கண்ணீர் விட்டால் அந்தக் கண்ணீர் துளிகளைத் துடைக்க நான் உடனே உன்முன் வருகிறேன். இது என் தர்மம். எல்லோரையும் காண எல்லா இடத்திற்கும் நான் செல்லுகிறேன். எம்மொழியினராயினும் எந்நாட்டவராயினும் இதயபூர்வமாக என்னை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் என்னுடையவரே. எனவே இந்தப் பிரசாந்தி நிலையம் ஒன்றிலேயே என்னைக் கட்டிவிடாதீர்கள். ஒருவன் அமைதிதேடி என்னைப் பிரார்த்தனை செய்யும் இடமும் ஒரு பிரசாந்தி நிலையம்தான்" என பிரசாந்தி நிலையத்தின் மகிமையையும் வெளிப்படுத்தி உள்ளார்.

"நீ எவ்வளவுதான் கடவுள் பக்தனாக இருந்தாலும் நீ எவ்வளவு தர்மத்தை செய்தாலும் நீ ஒழுக்கம் தவறுவாயேயானால் உனது பக்தியும் தர்மமும் பயனற்றுப் போகிறது" எனக் கூறியுள்ள பாபா மக்களை அன்புவழி மூலம் நெறிப்படுத்த இரண்டு சேவை அமைப்புக்களை தேர்ந்தெடுத்துள்ளார். இதில் முதலாவதாக நமது சாதாரண தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்க்கையை நெறிப்படுத்தும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி அமைப்புக்களை ஏற்படுத்தி, இதற்காக நாடு முழுவதும் சத்தியசாயி விஹாரங்களைத் தோற்றுவித்து பல கல்விக்கூடங்களை நடத்துவதுடன் பாலவிகாஸ் மூலம் குழந்தைப் பருவத்திலேயே நெறிமுறைகளைக் கற்பிக்கச் செய்கிறார். இரண்டாவதாக பகவான் பாபா உருவாக்கி நடைமுறைப்படுத்தி வரும் மருத்துவ சேவை தமது பக்தர்கள் பலருடைய நோக்களையும் வேதனைகளையும் குணப்படுத்தும் பகவான் அந்த மக்களை நல்வழிப்படுத்தி இறைவழியில் ஈடுபடவும் சேவை உணர்வு கொள்ளவும் செய்ததுடன் ஆரம்ப காலத்தில் தனது விபூதியின் மூலமே பல்வேறு நோய்களைக் குணப்படுத்திய பகவான், காலப்போக்கில் தனது சங்கல்பத்தின் மூலமும் அறுவைச் சிகிச்சையின் பலன்களைக்கூட அளித்து வருகிறார். சிக்கலான அறுவை தேவைப்படும் பல்வேறு நோய்களும் பாபாவினுடைய அருளால் குணம் அடைந்து வருகின்றது.

தொடர்ச்சி மறுவாரம்.....


**Mortgage! Mortgage!!**

**உங்கள் Mortgage தேவை எதுவாக இருந்தாலும், இன்றே நாடுங்கள்!**

**14 வருடங்கள் பல வங்கிகளுடன் சேவையாற்றி அவர்களது நன்மதிப்பைப் பெற்ற Mortgage துறையில் அனுபவமிக்க**

**Raj Sheela**
**905-764-3029**

Scotia Bankஇலேயே அவர்கள் கூறும் வட்டி வீதத்தைவிடக் குறைவாக எங்களால் எடுத்துத் தர முடியும் என உத்தரவாதம் அளிக்கின்றோம்!!!

- புதிய வீடு வாங்குவதற்கு உரிய Mortgage
- Buliders Mortgage
- பலராலும் இப்போது விரும்பப்படும் Line of Credit Mortgage
- Switch - ஒரு bankஇல் இருந்து வட்டி வீதம் கூட இன்னொரு bankஇற்கு மாற்றுதல்
- Transfers
- பெயர் எடுத்தல்
- Bankruptcy
- Bad Credit

**Raj Sheela**

ABACUS MORTGAGES INC.
638A Sheppard Ave. West, Suite 214
Toronto, ON M3H 2S1
Tel: 416-638-6200 Res: 905-764-9794
Fax: 416-638-6281

# மதத்தைப் பரப்ப வந்தவர்கள் உடுப்பிட்டியில் அமெரிக்க மிஷன் கல்லூரியை ஆரம்பித்து கல்விப்பணி ஆற்றினர்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் 150வது வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. இலங்கை தபால் திணைக்களம் 4ரூ.50 சதம் பெறுமதியான முத்திரையை வெளியிடுகிறது. இதனையொட்டி கனடாவில் வாழ்ந்துவரும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பழைய மாணவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் இக்கட்டுரை இடம்பெறுகிறது. - பிரதம ஆசிரியர்

கிறிஸ்தவ மதப் பிரசாரத்தின் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்த கிறிஸ்தவ மதக் குழுக்களினால் யாழ். மாவட்டம் கல்வித் துறையில் பாரிய முன்னேற்றங்களைக் கண்டிருந்தது. அகில இலங்கையிலும் யாழ் மாவட்டம் இன்றும் கல்வித்துறையில் முதன்மை வகிப்பதற்கு கிறிஸ்தவ மத குழுக்களின் பங்களிப்பு மகத்தானது. உடுப்பிட்டியிலும் மிஷனரிமாரின் வருகையினால் தலைசிறந்த இரண்டு கல்லூரிகள் உருவாகியுள்ளன. 1852ஆம் ஆண்டில் எமது கல்லூரியும் 1868ஆம் ஆண்டில் மகளிர் கல்லூரியும் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

1847ல் அமெரிக்க இலங்கை மிஷன் உடுப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டதாயினும் 1850ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. 1848ஆம் ஆண்டு உடுப்பிட்டி திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட போது கோப். ஐயர் போதகராக நிமிக்கப்பட்டார். தென்னிந்திய திருச்சபையின் கனம் பெஞ்சமின் டமெக்ஸ் அவர்கள் ஊழியம் செய்த காலத்தில் 4.1.1852இல் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. சுதேச கல்வியை கற்பிப்பதற்கு விரும்பிய தென்னிந்தியத் திருச்சபை ஆங்கிலக் கல்வியையும் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கில் இக்கல்லூரி ஆரம்ப காலத்தில் இரு பகுதிகளாக இயங்கி வந்தது. 1. சுயபாஷா அபிவிருத்திப் பாடசாலை 2. ஆங்கில மொழிப் பாடசாலை.

மிஷன் ஊழியத்திற்கு ஆட்களை பயிற்றவும் திருச்சபையின் விருத்திக்கு அனுகூலமாக இருக்கவும் உயர்ந்த வேத அறிவு, தமிழ் மொழியறிவு, சாத்திர அறிவு ஆகியனவற்றை இக்கிராம மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற அடிப்படையிலும் இப்பாடசாலை அமைக்கப்பட்டது. சுய மொழிப் பாடசாலை 8ம் வகுப்புவரை மிகக் குறுகிய காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தது. ஜே.எஸ். அம்பலவாணர் போன்ற தலைமை ஆசிரியர்களினால் சுயமொழிப் பாடசாலை நன்கு விருத்தியடைந்து சென்றது. ஆங்கில மொழிப் பாடசாலை 5ம் வகுப்புவரையே இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. கல்லூரி வளர்ச்சியில் வீ..க. சின்னத்தம்பி, திரு. கணபதிப்பிள்ளை, திரு. இராமலிங்கம், திரு. பிலிப் போன்றவர்கள் தலைமையாசிரியர்களாக இருந்தார்கள் என அறியப்படுகின்றது. வீ.கே. சின்னத்தம்பி அதிபராக இருந்த காலத்தில் முதலாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்புவரை *100* மாணவர் ஆங்கில மொழிக் கல்வி கற்றதாக அறியப்படுகின்றது. 1932ஆம் ஆண்டிலிருந்து 38ஆம் ஆண்டுவரை எஸ்.கே. இராசையா அதிபராக இருந்தபோது 5ஆம் வகுப்புவரை இயங்கிவந்த ஆங்கிலக்கல்வி 8ஆம் வகுப்புவரை விஸ்தரிக்கப்பட்டது. இதே சமயம் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுத்தவரை 1868இல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் இரு கல்லூரியினது நிர்வாகமும் ஒருமுகப்பட்டதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எஸ்.கே. இராசையா அதிபராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மாணவர்களில் மறைந்த உயர் நீதிமன்ற நீதியரசர் பி. சிறீஸ்கந்தராசா, அண்மையில் காலமாகிய அணுசக்தித்துறை விஞ்ஞான பேராசிரியர் கந்தையா போன்றவர்கள் இவரது காலத்திலேயே உருவாக்கப்பட்டவர்கள். 1938ஆம் ஆண்டு எஸ்.கே. இராசையா இடமாற்றம் பெற்று தெல்லிப்பளைக்குச் சென்றதும் கே.ரி. ஜோன் பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

கே.ரி. ஜோன் அவர்களின் வருகை கல்லூரி வளர்ச்சியில் ஓர் திருப்பு மையமாகும். இந்தியாவின் கேரளப் பகுதியை சேர்ந்த இவர் 1939ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியவர். இவரைப்பற்றி பலர் எழுதியிருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திரு.கே.ரி.ஜோன் காலத்தில் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் விஞ்ஞானிகளாக, பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாக, உபவேந்தராக, பொறியியலாளர்களாக, மருத்துவர்களாக, கணக்கியலாளராக, நல்லாசிரியர்களாக திணைக்களங்களிலும் நிறுவனங்களிலும் தலைமைத்துவப் பொறுப்புக்களை வகிப்பவர்களாக கடமையாற்றியுள்ளார்கள். சட்ட அறிஞர்களையும் இக்கல்லூரி உருவாக்கத் தவறவில்லை. நாட்டுக்கு ஏற்ற நல்ல பிரஜைகளையும் இக்கல்லூரி உருவாக்கியிருக்கிறது. கே.ரி.ஜோன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றபோது கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 256ஆகும். அவர் ஓய்வு பெறகின்றபோது (1956) 608ஆகக் காணப்பட்டது. இக்காலத்தில் திரு.எஸ்.எஸ். செல்லத்துரை, திரு. றோபேர்ட் நவரட்ணம், கே.எம். மத்தியூ, திரு. எஸ்.எஸ். கணபதிப்பிள்ளை, திரு.கே. நேசதுரை, திரு. ஏபிரகாம் போன்ற ஆற்றல்மிக்க அறிஞர்கள் ஆசிரியர்களாக அமர்ந்திருந்தனர்.

திரு.கே.ரி. ஜோன் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுத் தனது சொந்த ஊரான கேரளத்திற்குச் சென்ற பின்னர் அவர் காலத்தில் அவரால் வழி நடத்தப்பட்ட உப அதிபரான திரு. சாமுவேல் சரவணமுத்து செல்லத்துரை அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். விஞ்ஞானப் பட்டதாரியான செல்லத்துரை பதவியை ஏற்றதன் பின்னர் விஞ்ஞானக்கல்வி விருத்தியை மையமாகக் கொண்டு ஆய்வுகூட வசதிகளும் நூலக வசதிகளும் விஸ்தரிக்கப்பட்டன. வடமாராட்சியில் மற்றக் கல்லூரிகளில் இல்லாத அளவுக்கு இவை விஸ்தரிக்கப்பட்டன. இக்கல்லூரியில் கல்வி பயின்ற அமரர் பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் உயர்தர வகுப்பு வசதியின்மை காரணமாக வேறுபாடசாலைக்கு சென்றமை அதிபரின் உள்ளத்தில் பல மன உளைச்சல்களை ஏற்படுத்தியது. தன் கல்லூரி மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியையும் அதே கல்லூரியில் பயில வேண்டும் என்ற இலட்சியத்திற்காக அயராது உழைத்து 1959ஆம் ஆண்டு உயர்தர வகுப்புக்களை நடாத்துவதற்கும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. முதலாந்தரப் பாடசாலையாக கல்லூரி தரம் உயர்த்தப்பட்டது. திரு. கே. சண்முகசுந்தரம், திரு. ஆர். பொன்னம்பலம், திரு.எஸ். தில்லையம்பலம், திரு.கே. செல்வநாயகம், ரிபூசியஸ், ஏபிரகாம் போன்ற ஆற்றல்மிகு அறிஞர்களினால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை நோக்கி மாணவர் படை எடுத்தனர். பல்கலைக்கழகத்திற்கு செல்வோர் எண்ணிக்கை அதிகரித்தது. இத்தகையதொரு சூழ்நிலையில் திரு.கே. சிதம்பரப்பிள்ளை அதிபராகப் பொறுப்பேற்றதன் பின்னர் எவ்வாறாயினும் கல்லூரியை முன்னைய நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அவரது அயராத உழைப்பினால் மீண்டும் மறுமலர்ச்சி ஒன்று உருவானது. இவர் பாடசாலையைப் பொறுப்பெற்ற காலத்தில் வான்வழித் தாக்குதலினால் அனைத்துக் கட்டிடங்களும் அழிந்து போயின. மாணவர் சமுதாயம் இடம் பெயர்ந்தது போல கல்லூரியும் இடம்பெயர வேண்டியதாயிற்று. உடுப்பிட்டி வர்த்தக சங்கத்தினரதும் பழைய மாணவ சங்கத்தினரதும் உதவிகளைப் பெற்று தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு போதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவருக்குப் பின்னர் இவரது பணியை ஏற்ற திரு. ந. அனந்தராஜ் அவர்களும் பல சிரமங்களின் மத்தியில் கல்லூரியை முன்னேற்றுவதில் மும்மரமாக முயன்றார். தனது அனுபவங்களை கட்டுரையாக ஆக்கித் தந்திருக்கின்றார். சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் காரணமாக யாழ். மாவட்ட மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்த நேரத்தில் தி'ரு. அனந்தராஜ் அவர்களும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் அவர் காலத்தில் உப அதிபராக இருந்த தி'ரு.எஸ். தில்லையம்பலம் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாலும் அவரது உடல்நலக் குறைபாடு காரணமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உப அதிபராக இருந்த திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா அவர்கள் 9.6.1997 முதல் அதிபராகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

- மாயன்


வீடு வாங்க விற்க

இந்த மண்ணில் உங்களுக்கென ஒரு சுய அடையாளம் தேவை அது தனித் தன்மையானதோர் வீடு.

HOMELIFE HIGHER STANDARDS

Future Reality Inc.

SPECIALIZED IN MORTGAGE





Rajeef Koneswaran
Sales Representative
Cell: (416) 568-1078

குறித்த நேரத்தில் குறித்த இடத்தில்
வீடு வாங்கவும் விற்கவும் Mortgage
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்...

262 Markham Rd,
Scarborough
M1J 3C5
(Markham/Eglinton)

Bus: (416) 261-1544
Fax: (416) 261-1519
Pag: (416) 718-5101

# இரசிகமணி கனக செந்திநாதனின் நீங்காத நினைவுகள்...

கவிஞர் வி. கந்தவனம்

கடந்த வாரத் தொடர்ச்சி



விமர்சனக் கலையில் வித்தகர் செந்திநாதன். அவரது விமர்சனங்கள் முளையிலே கிள்ளி விடும் நோக்கத்தைக் கொண்டிருப்பதில்லை; வித்துவத்தைக் காட்டும் விளம்பரங்களுமல்ல. ஊக்குவிக்கும் ஆக்க முயற்சிகளாக அவை அமையும். சிலரது விமர்சனங்களில் உதடுகளே பேசும். செந்திநாதனின் விமர்சனத்தில் உள்ளம் பேசும். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று சிலர் பிறரை உதவிக்கு இழுப்பார்கள். செந்திநாதன், 'இது என் கருத்து' என்று தன்னம்பிக்கையுடன் அழுத்துவார்.

தன்னம்பிக்கை செந்திநாதனின் தனிச்சொத்து. உதாரணத்துக்கு 'விதி யின் கை' என்னும் அவரது சமூக நாவலுக்கு அவர் எழுதிய முன்னுரையில் இருந்து ஒரு பந்தி இதோ:

"இந்தக் காலத்தில் 'யதார்த்தம்' என்ற பெயரில் உயிரற்றவைகளைக் காட்டுவதில் சிலர் இன்பம் காண்கின்றனர். அதுவே பெரிய புதுமை என்றும் ஆர்ப்பரிக்கின்றனர். பண்பாடற்ற விஷயங்களைப் பூதக்கண்ணாடியால் இளம் பரம்பரைக்குக் காட்டும் போக்கை நான் முற்றாக எதிர்க்கிறேன். அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பது எனது நம்பிக்கை."

இந்தப் பசையே என்னைச் செந்திநாதனுடன் ஒட்டவைத்தது. எனினும் பல விடயங்களில் நாம் முரண்பட்டு உள்வாதம் புரிந்திருக்கின்றோம். தலை முறை இடைவெளி பிரதான காரணம். விவாதங்களின் முடிவில், 'நீங்கள் எல்லாம் ஆங்கில மூலம் படித்து வந்த ஆட்கள். நான் தமிழிலேயே படித்துத் தமிழிலேயே சிந்திப்பவன். அதனால் சில கருத்து வேறுபாடுகள் இருக்கவே செய்யும்' என்று சமாதானக் கொடிபிடிப்பார்.

கருத்து வேறுபாடுகளால் அவரது உள்ளம் களங்கப்படுவதில்லை. அவரது உள்ளம் சுத்தமான இலக்கிய உள்ளம். இலக்கிய உள்ளம் கரவு வஞ்சகம் அற்றது என்பதற்கு செந்திநாதன் உதாரணம். இலக்கிய கர்த்தாக்களுடன் அன்புடன் பழகி அவர்களை ஊக்குவிப்பது அவரது இயல்பு. அந்த இயல்பு எழுத்தாளர் மத்தியில் ஒற்றுமையை வளர்க்க உதவியது. இலக்கியம் கட்சிகளுக்கும் சாதி சமய வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டது என்பதனைக் கொள்கையளவில் மட்டுமன்றி நடைமுறையில் வாழ்ந்துகாட்டிய வகையாலும் நிறுவிச் சென்ற பெருமை செந்திநாதனுக்குரியது.

தற்கால இலக்கியத்துறையில் எப்பொருள்பற்றியேனும் எந்நேரத்திலும் பேச்சூடிய அல்லது எழுதக்கூடிய தன்னிகரற்ற ஒரு பேராசிரியராக விளங்கிய வர் செந்திநாதன். அவரது எழுத்தாற்றல் சொல்லுந்தரமன்று. சிறுகதைகள், நாவல்கள், விமர்சனங்கள், இரசனைக் கட்டுரைகள், வரலாறுகள், கவிதைகள், சிறுவர் கட்டுரைகளென எல்லாவகையிலும் தனது கைவண்ணத்தைக் காட்டி யிருக்கின்றார். இரசிகமணியின் படைப்புகள் பல அச்சுவாகனம் ஏறியுள்ளன; ஏறாது ஒட்டுப் புத்தகங்களாகவும் பல முடங்கிக் கிடக்கின்றன. அவரது ஆக்கங்கள் அனைத்தையும் 1976ஆம் ஆண்டு யாழ் இலக்கியவட்டம் அவருக்கு எடுத்த மணிவிழாவின்போது 'பூச்சரம்' என்ற தலைப்பில் தொகுத் திருக்கின்றேன். அவரது பன்முகப்பட்ட எழுத்தாற்றலை இத்தொகுப்பு நூல் நன்கு எடுத்துக்காட்டவல்லது.

இரசிகமணி அவர்கள் இறுதிக் காலத்தில் கால் ஒன்றை இழந்து படுக்கையிலே கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அக்கால கட்டத்தில் எனது வேலைகளையும் புறக்கணித்து அதிக நேரம் அவர் பக்கத்தில் இருந்தேன். அவருக்குப் பேசுவதற்கு - இலக்கியம் பேசுவதற்கு யாராகிலும் ஒருவர் பக்கத்தில் இருந்தால் நோயினால் ஏற்படும் துன்பம் தூரப்போய்விடும். 'விதியின் கை' என்ற அவரது நாவலை வீரகேசரி வெளியீடாகப் பிரசுரிப்பதற்கு வேண்டிய முயற்சியையும் மேற்கொண்டேன். 1977 மார்ச் மாதம் 'விதியின் கை' வீரகேசரியின் 51ஆவது பிரசுரமாக வெளிவந்தது. நூலைப் பார்த்து எட்டு மாதங்களின்பின் அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

இறுதிச் சடங்கின்போது இரங்கலுரை நிகழ்வுக்குத் தலைமை தாங்கினேன். பேசிக்கொண்டிருக்கையில் அழுகை வந்து பேச்சைத் தடைப் படுத்தியது. பல்பேர் முன்னிலையில் நான் கண்ணீர் விட்ட முதற் சம்பவம் அது. 'ஓர் இலக்கிய மலை சரிந்து விட்டது' என்று உரைக்கும் பொழுதே உணர்ச்சி பிரவாகித்தது. இலக்கியத்துக்கு இருக்கும் சக்தியை அன்று அனுபவரீதியாக அறிந்து கொள்ள முடிந்தது. இரசிகமணியின் இலக்கியத் தொண்டு ஈடு இணையற்றது. அவரின் தமிழ் நெஞ்சம் தாமரை போன்று என்றும் மலர்ந்திருப்பது. அவரின் படைப்புகள் மதிப்பு வாய்ந்ததை; மக்கள் வளர்ச்சி சார்ந்தவை; என்றென்றும் வாழத் தக்கவை.

அவர் பற்றிய எனது நினைவுகள் என்றும் நீங்காத நினைவுகள்!

**"கங்குல் பகலோ களைப்புச் சலிப்போ குடும்பக் கடமைகளோ**
**கருதா துயர்ந்த இலக்கியத் தொழிலே கதிகொள் வாழ்க்கையென**
**எங்கள் தேசம் எங்கள் நூல்கள் எங்கள் எழுத்தாளர்**
**என்றே பெருமை அறியா திருந்த ஈழத் தமிழர்க்குத்**
**தங்கப் பேச்சால் எழுத்தால் இரசனை தழைக்க எடுத்தோதித்**
**தமிழை வளர்த்த பேரா சிரியர் தன்னே ரில்லாத**
**கங்கை போல எங்கும் பாய்ந்து கலந்த இரசிகமணி**
**கனக செந்தி நாதன் கலையைக் கடப்பார் இனியாரோ?"**

# மலரும் மணமும்



(உருவகக் கதை) -வண்ணை தெய்வம்

அழகிய நந்தவனம்! அங்கு பல இனப்பூச்செடிகள்! பலவித வர்ணங்களில் அழகான மலர்கள்! மலர்களில்தான் எத்தனை விதங்கள்! எத்தனை நிறங்கள்! எத்தனை விதமான நறுமணங்கள்! மலர்களின் தோட்டத்தினுள் வண்டுகளுக்குப் பஞ்சமா இருக்கும்! ஒரு மலரில் திருப்தி காணாத வண்டுகள் மலருக்கு மலர் தாவி தேன்களைச் சுவைத்துக் கொண்டன.

சுவைப்பதில் வண்டுகளுக்குள் போட்டிகளுடன் சண்டைகளும் நடந்தன.

மலர்களோ தங்களை மொய்க்கும் வண்டுகளைப் பார்த்தவுடன் ஆனந்தப்படுபவையும் அகங்காரம் கொள்பவையுமாக இருந்தன.

வண்ணத்துப்பூச்சி ஒன்று மல்லிகையின் மலரினில் அமர்ந்து தேனைச் சுவைக்க முயன்றது. அப்பொழுது மல்லிகை வண்ணத்துப் பூச்சியைப் பார்த்து ஏளனமாகக் கெட்டது "வண்ணத்துப் பூச்சியாரே எங்களின் மதிப்பினைப் பார்த்தீர்களா? நாங்கள் ஒரு இடத்தில் நிலையாக நிற்கின்றோம். நீங்கள் எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு எங்களைச் சுற்றிச் சுற்றி வருகின்றீர்கள்" என்றது.

வண்ணத்துப் பூச்சி அமைதியாகச் சொன்னது "மல்லிகையாரே தேன் எமது உணவு. உம்மிடம் தேன் இருக்கின்றது. நாம் உணவிற்காகத் தேனைச் சுவைக்கின்றோம். ஆனால் வண்டுகளோ தேனையும் சுவைக்கும் மலத்தையும் சுவைக்கும் அவைகளுக்கு மலரும் மலமும் ஒன்றுதான்" என்று சொல்லிக்கொண்டு மல்லிகையுடன் கதையை வளர்க்க விரும்பாது அடுத்த மலருக்குத் தாவியது.

அது ஒரு அழகான செம்பருத்திப்பூ. பூவை நெருங்கிய நேரத்திலேயே சுவரில் அடிபட்டு திரும்பி வரும் பந்தைப்போல மூக்கைப் பொத்தியபடி திரும்பிவந்தது. அருகினில் இருந்த மரக்கிளையினில் அமர்ந்தது வண்ணத்துப் பூச்சி.

"வண்ணத்துப் பூச்சியாரே ஏன் தேன் சுவைக்காமல் திரும்ப வருகின்றீர்? செம்பருத்திப் பூவில் உள்ள தேனில் சுவையில்லையா?" என்று மரம் கேட்டது.

வண்ணத்துப் பூச்சியோ மூக்கைப் பிடித்தபடி அந்தச் செம்பருத்திப் பூவையே பார்த்தது. மரமும் திரும்பி அந்த செம்பருத்திப் பூவைப் பார்த்தது. இரண்டு கருவண்டுகள் அந்தப் பூவில் அமர்ந்து போட்டி போட்டுக்கொண்டு தேனைச் சுவைத்துப் பருகிக்கொண்டிருந்தன. பூவும் மகிழ்வோடு இதழ்களை மலர விரித்து ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டிருந்தது.

மரத்திற்கு விளங்கிவிட்டது மலரின் நறுமணத்தைவிட வண்டுகளின் மீதுள்ள துர்நாற்றம்தான் வண்ணத்துப் பூச்சியை விரட்டியிருக்க வேண்டும் என்று.

மரம் அந்த நந்தவனத்தை நன்றாகச் சுற்றி நோட்டம் விட்டது. அங்குள்ள மலர்களையெல்லாம் சுற்றிச் சுற்றி வண்டுகளும் தேனீக்களும் மொய்த்தவண்ணம் இருந்தன. மலர்களும் ஆனந்தத்தில் அனைத்தையும் அரவணைத்துக் கொண்டிருந்தன

"மரம் சொன்னது இறந்து கொண்டிருப்பதை மறந்துகொண்டு சிரிக்கும் பூக்கள்"


ஓம் சாயிராம்

**பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 77வது ஜெயந்தி தினம்**



**இடம்:**
சாயி சேவா நிலையம்
Daily Needs Super Market Hall
2543 Pharmacy Ave.
(Finch & Pharmacy)
Scarborough, Ont.

**காலம்:**
23.11.2002 சனிக்கிழமை
மாலை 6.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**
6.00 மணி: புல்லாங்குழல் இசை (அருளானந்தம் குமரன்)
6.30 மணி: பாதபூஜையும் பஜனையும்
8.30 மணி: ஊஞ்சல்
9.00 மணி: மங்கள ஆரத்தி

மிகவும் சிறப்பாக நடைபெறும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் பஜனையில் கலந்து கொண்டு பகவானின் நல்லருளைப் பெற்று நலமுடன் வாழவேண்டி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: (905) 947-1522 (416) 286-5220

தொடர் நாவல்

# திசை மாறிய தென்றல்

தொடர்:29 - அகில், U.K

கடந்த வாரத் தொடர்ச்சி........



"ஏங்க நாங்க போறதில்லையா?"
"போகத்தான் வேண்டும், அதுதான் யோசிக்கிறன்"
"ஏங்க போறதெண்டா பாடியை எடுக்கிற துக்கு முன்னாடி போறதுதான் நல்லது. என்னங்க நான் சொல்லுறது"
"உண்மைதான் அப்படிப்போற தென்றால் இன்று அல்லது நாளை புறப்பட வேண்டும். டிக்கெட் கிடைக்குமோ தெரியாது. எதற்கும் நான் வெளியில்போய் டிக்கெட் அலுவலை முடிச்சுப்போட்டு வாறன். நீ மற்ற அலுவல்களை ஒழுங்கு பண்ணு" என்று கூறிவிட்டு அவன் போய் விட்டான். அரசு திரும்பி வருவதற்குள் தென்மொழி சகல வேலைகளையும் செய்து முடித்திருந்தாள். டிக்கெட் விசாரிக்கப் போன அரசு எல்லா அலுவல்களை யும் முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.
"என்னங்க டிக்கெட் எடுத்திட்டீங்களா?" அவளது கேள்வியில் ஒருவித வேதனையும் படபடப்பும் இருந்தது.
"ஆம் எடுத்திட்டன். பணம் யாஸ்தியாக முடிஞ்சது. நாளைக்கு இரவே நாங்கள் புறப்படலாம்.
"எத்தனை மணிக்கு?"
"இரவு ஒன்பது மணிக்கு"

அஸ்வினி வீட்டிற்கு அவர்கள் போனபோது, "வாங்க தம்பி இவ இப்படி செய்வா என்று நாங்கள் கொஞ்சம்கூட நினைக்கவில்லை. என்ன பிரச்சனையெண்டாலும் எங்களிட்ட சொல்லியிருந்திருக்க லாம். திருமணம் செய்த பிறகு எங்களுக்கு என்ன என்று பேசாமல் விட்டிடுவமா என்ன?" கோபாலகிருஷ்ணன் தனது வேதனையை கண்ணீரோடு அரசிடம் ஒப்புவித்தார். அஸ்வினியின் உயிரற்ற உடலைப் பார்க்கப் போகின்றேனே என்று நினைக்கும் போது அரசுக்கு முன்பைவிட மனம் கனத்தது. உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என்று வீடு நிரம்பி வழிந்தது. அஸ்வினியின் உடலை வீட்டின் நடுக்கூடத்தில் போடப் பட்டிருந்த கட்டிலில் கிடத்தியிருந்தார் கள். வண்டுபோல் சுத்திச் சுத்தி வந்தவள் ரீங்காரம் அடங்கிக் கிடந்தாள். பொங்கி வந்த உணர்வை மனதுக்குள் அடக்க நினைத்த போதும் கண்ணீர் கட்டுக்கடங்காது வர அதை அவ்வப்போது கச்சிப்பால் அரசு துடைத்துக்கொண்டான்.

கோகிலா தேன்மொழியின் கையைப் பிடித்துக் கொண்டு அஸ்வினியின் கால் மாட்டில் உட்கார்ந்திருந்தாள். பாவம் மூன்று நாட்களாகத் தொடர்ந்து அழுததால் அழுவதற்கு சக்தியின்றி இருந்தாள். அந்த நேரம் அங்கு வந்த குடும்ப டாக்டர் அமெரிக்காவில் இருந்து வந்த அஸ்வினியின் அண்ணன் ரூபனைக் கூட்டிக்கொண்டு போய்க் கதைத்தார். "இஞ்ச பார் தம்பி ரொம்ப நேரத் திற்கு உடம்பை வைச்சிருக்கிறது நல்லது இல்லை. சீக்கிரமாக எடுக்கப்பாருங்க" என சொல்லிவிட்டுப் போனார். டாக்டர் சொல்லுறதும் சரிதான். தற்கொலை 'கேஸ்' என்பதால் பிரேதப்பரிசோதனை செய்திருப்பார்கள். அப்படிப்பட்ட உடம்பு அதிக நேரத்துக்குத் தாக்குப் பிடிக்காதுதான். அந்தச் சிந்தனை அரசின் மனதில் வந்து வெட்டிவிட்டு செல்ல அரசுக்கு அடுத்ததொரு சிந்தனையுடன் கேள்வி பிறந்தது.

எங்க அஸ்வினியின் கணவன் என்று? அரசின் கண்கள் அவரைத் தேடியது. முன்பு அவரைச் சந்தித்தது கிடையாதுதான். அஸ்வினியின் திருமண வீட்டுக்குப்போன மூர்த்தி எடுத்த போட்டோவை வீட்டுக்கு அனுப்பியிருந்தார். அப்பொழுது பார்த்ததுதான். ஆனால் அவரது முகம் போட்டோவை பார்த்த அன்றே அரசின் மனதில் ஆழமாக ஒட்டிக்கொண்டது. அதுக்குக் காரணம் அஸ்வினியின் கணவர் என்பதாலோ! தெரியவில்லை. நேரம் செல்லச் செல்லக் கூட்டம் அதிகமாகிக்கொண்டே போனது. அந்த நேரத்தில் அங்கு வந்த மூர்த்தி "என்ன மாப்பிள்ளை ஏதோ பலமான யோசனை!"
"அப்படியொண்டும் இல்லை சார்"
"ஏன் மாப்பிள்ளை செத்தவீட்டுக்கு வாறது என்று அறிவிக்காமலே வந்திட்டீங்க?"
"திடீரெண்டு டிக்கெட் போட்டு வெளிக்கிட்டதால அறிவிக்க முடியாமல் போச்சு. சென்னை வந்த பிறகு போன் எடுத்துச் சொல்லுவம் என்று நினைச்சா நீங்க இங்கு வந்திருப்பீங்களென்று" சொன்னா தேன்மொழி
"சரி தங்கச்சி எங்க?"
"உள்ளுக்குள்ள" என்று சொன்னதைத் தொடர்ந்து அவர் உள்ளுக்குள் போக வெளிக்கிட அவரை மறித்து அரசு கேட்டான்.
"ஆமா எங்க காணோம் அஸ்வினியின் கணவரை"
"உன்னாலைதான் மகள் இறந்தவ என்று அப்பா மாப்பிள்ளையைத் திட்டியிருக்கார். அதோட நடந்த வாய்த் தகராறில வீட்டை விட்டு அவர் போயிட்டார். ஆனா இப்ப சில ஊர்ப் பெரியவர்கள் போயிருக்கினம் கூட்டிக்கொண்டு வர"
"அதுசரி எப்படி தற்கொலை செய்தவா?"
"தூக்கமாத்திரை போட்டு" அவர்களின் பேச்சின் கவனத்தை திருப்புவதைப் போல அங்கு ஒரு கார் வந்து நின்றது.
"ஐயோ! என்ர தங்கச்சி" என்று அழுதபடி காரில் இருந்து இறங்கிய அஸ்வினியின் சகோதரி மயூரி வாசலில் தந்தையைக் கண்டதும் "அப்பா....." என அலறிக்கொண்டு அவரிடம் ஓடினாள்.
"மயூரி......" நம்ம அஸ்வினி நம்மைவிட்டுப் போயிட்டாளடி" என மயூரியின் கையைப்பற்றிய கோபாலகிருஷ்ணன் அவளை அஸ்வினியின் உடல் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் அழைத்து வந்தார். கோகிலா தனது மகளைக் கண்டதும் எழுந்திருப்பதற்குச் சக்தியில்லாத போதும் மகளோடு அழுத காட்சி கரையாத மனங்களையெல்லாம் நிச்சயம் கரைய வைத்திருக்கும்.
"மரணம் என்பது எல்லோருக்கும் பொதுவான விடயம் என நினைக்க வேண்டும். யாரும் மரணம் அடைந்தால் அழக்கூடாது" என்று சொல்கின்ற வேதாந்திகளின் பேச்சு அவர்களுக்குப் பொருந்தும். ஆனால் பந்த பாசத்துடன் கட்டுப்பட்டுள்ள மனிதனுக்கு அது எப்படிப் பொருந்தும்.

அப்பொழுது சேகரைக் கூட்டிக்கொண்டு வரப்போன ஊர்ப் பெரியவர்கள் சேகரை ரொம்பச் சிரமப்பட்டுக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். சேகரைக்கண்டதும் அரசுக்கு கோபம் பொங்கி வந்தது.
"அடப்பாவி அவளை அநியாயமாக தற்கொலை செய்ய வைச்சிட்டாயடா" அரசின் மனசு நெருப்பாய் சீறியது.
"இனியும் ஏன் வெயிட் பண்ணுறீங்க சேகர் வந்திட்டார்தானே. காரியத்தை முடியுங்கள்" என பெரயவர்கள் சிலர் சொல்ல அஸ்வினியின் உடல் திருச்சி பொது மயானத்துக்குக் கொண்டு போகப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

வீடு வெறிச் சோடிக்கிடந்தது. வெளிச் சுவரின் ஓரமாகக் கிடந்த கதிரையொன்றில் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தார் கோபாலகிருஷ் ணன். இருக்காதா பின்னை. அவருடைய ஆசை மகளல்லவா இறந்தது. "வயது போன காலத் தில் என்னை யார் பார்க்கிறார் களோ இல்லையோ இவள் பார்ப் பாள்" என்று அடிக்கடி சொல்லு வார். இன்று அவளே உயிரோடு இல்லை என்கின்றபோது அந்த மனிதனால் எப்படித் தாங்க முடியும். பெண் பிள்ளைகள் அப்பாமீது பாசமாக இருப்பார்கள் என்றும், ஆண் பிள்ளைகள் தாய்மீது பாசமாக இருப்பார்கள் என்றும் பொதுவாகச் சொல்லுவார்கள். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ இல்லையோ தெரியாது. ஆனால் அஸ்வினி தந்தைமீது ரொம்ப பாசம் வைத் திருந்தாள். கோபாலகிருஷ்ண னைப் பார்க்கப் பார்க்க அரசின் மனம் நெகிழ்ந்தது. எல்லோரைப் போலவும் நாங்களும் போகக் கூடாது. இங்கு கொஞ்ச நாளைக் காவது இவர்களோடு இருந்திட்டுப் போகணும். அது நடக்கிற காரியமா? வேலையில நீண்ட நாளைக்கு லீவு எடுக்க முடியாது. என்ன செய்ய லாம் என சிந்தனை செய்து கொண் டிருந்த அவனின் தோள்பட்டையை யாரோ தொடுவதைப்போல தோன்ற அவன் திரும்பிப்பார்க்க அருகில் தென்மொழி நின்றிருந்தாள்.
"என்னங்க நாங்கள் எப்ப புறப்படுகிறது?" தொடரும்.......


**DEBT MANAGEMENT CLINIC**

**கடன் தொல்லைகளிலிருந்து விடுபட உதவி வேண்டுமா?**

- உங்கள் கடன் கட்டுப்பணத்தை 80%வரை குறைத்தல்
- எல்லாக் கடன் அட்டைகளின் மாதாந்தக்கட்டுப் பணத்தை ஒன்றாக்குதல்
- மேலதிக சதவீத வட்டி (Interest) இல்லாமல் செய்தல்
- அறவீட்டாளர்களின் (Debt Collection Agencies) தொல்லைகளில் இருந்து விடுபடுதல்
- கடன் கொடுத்தவர்களின் (Creditor's) சட்ட நடவடிக்கை களிலிருந்து (Legal Action) விடுபடுதல்
- கடன் தீர்க்க வகையற்ற நிலையிலிருந்து (Bankruptcy) விடுபடுதல்

**நாங்கள் உங்கள் சார்பில் கடன் கொடுத்தவர்களிடம் வாதாடுவோம்**

*Additional Services:*
**Bookkeeping, Tax Returns
Internet Access, Fax**

முதல் ஆலோசனைக்கு (FREE Consultation) அழையுங்கள்

**G. Kumar Thevendra**
Debt Management Counseller
**Tel: 416-261-2168**
**Tel: 416-618-7294**

**TL Debt Management & Financial Services**
Hillside Plaza
2857 Lawrence Ave. E., Suite 12
Scarborough, Ontario M1P 2S8

# ராசி பலன்

22.11.2002 - 28.11.2002

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்**

மனதில் இனம் புரியாத திகில் காணப்படலாம். பொருளாதாரச் சீர்கேடுகள் நிலவலாம். விபத்துகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதால் எச்சரிக்கையும் அவதானமும் வேண்டும். உற்றார் உறவினர்கள் ஆதரவு தர முன்வரலாம். பெரியோர்களது ஆதரவும் ஆசியும் கிட்டும். எதிரிகள் விடயத்தில் முன்னெச்சரிக்கை வேண்டும்.

**இடபம்: கார்த்திகை2ம், 3ம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ம் , 2ம் பாதங்கள்**

உடலாரோக்கியத்திற்குக் கேடுவிளையலாம். பணக்கஷ்டம் காணப்படக்கூடிய தாக இருக்கும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படாவண்ணம் நடந்துகொள்ளவும். மனதிற்கு சங்கடத்தைத் தரக்கூடிய நிகழ்வுகள் ஏற்படக்கூடும். கஷ்டத்தைத் தாங்கக்கூடியமனோவலிமை ஏற்படும். கல்வியில் நாட்டமிருக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3ம், 4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம்-1ம், 2ம், 3ம், பாதங்கள்**

மேலதிகாரிகளது கோபத்திற்குள்ளாக வேண்டிவரலாம். வழக்கு விவகாரங்களில் எதிர்பார்த்தது போன்ற தீர்ப்பு இல்லாமல் இருக்கக் கூடும் விபத்துக்களைச் சந்திக்கும் நிலை ஏற்படலாம் மனக்கவலைகள் சிறிது சிறிதாக மறையக்கூடும். வீண்செலவுகளும் வீண் அலைச்சலும் இருக்கலாம். விவாக பலன் காணப்படலாம்.

**கடகம்: புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்**

குடும்பத்தில் புதிய ஜீவன் தோன்றலாம். எடுத்தகாரியங்கள் ஜெயம் தருவனவாக இருக்கும் மேற்படிப்பிற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும். மனதில் இருந்து வந்த கவலைகள் அகன்று மகிழ்ச்சி ஏற்படக்கூடியதாக அமையலாம். தொல்லைகள் மறையும். உடலாரோக்கியம் அபிவிருத்தியடையும். செலவுகள் குறையும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.**

சுபகாரியங்களால் செலவுகள் ஏற்படக்கூடும். செலவுகளினால் மனப்பாதிப்புக்கள் ஏற்படும் படியாக இருக்கலாம். தொழிலில் மனஅமைதி தென்படாது போகலாம். அதிகாரிகளின் அதிருப்தியைச் சம்பாதிக்க வேண்டிவரலாம்.

**கன்னி: உத்திரம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதங்கள்**

சில நூதன நோய்களின் தாக்கத்தைக் காணமுடியும். மனக்கவலைகள் அத்துமீறியுள்ளதாக நினைக்கத்தோன்றும். பண வரவிற்கு மிஞ்சிய செலவுகளை எதிர்பார்க்கலாம்.. செய்தொழிலில் ஏனோதானோ என்றிராமல் மிகவும் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும்.

**துலாம்: சித்திரை 3ம், 4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதங்கள்**

எதிர்பாராத சிக்கல்களால் மனம் பாதிப்பிற்குள்ளாகலாம். தகப்பனாரது உடல் நிலை பாதிப்படையக்கூடும். அரசாங்கத்தாரின் கோபத்திற்குள்ளாகும் நிலை வரலாம். காயம்படவேண்டி இருக்கும். கல்வியில் ஈடுபாடுகள் ஏற்படும். மனை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும் பலனுண்டு.

**விருச்சிகம்: விசாகம்4ம் பாதம், அனுஷம், கேட்டை**

பொருட் சேதம் ஏற்படலாம். சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலை வரலாம். இதன் காரணமாகக் கெட்டபெயர் அவமானம் ஏற்படலாம். மன அமைதியைக் கெடுக்கும் நிலை தோன்றி கோபமேலீட்டினால் நல்லவர்களது விரோதத்தை ஏற்படுத்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

**தனுஸ்: மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்**

பொருளாதாரப் பின்னடைவுகளினால் பணத்தட்டுப்பாடு ஏற்படலாம். குடும்பத்தில் ஒருவர் மிகவும் நோய்வாய்ப்படக்கூடும். உரியநேரத்தில் சிகிச்சையளிக்கப்படின் குணமாகும். மனைவி மக்களால் தொல்லைகள் ஏற்படும். நண்பர்களும் எதிர்மாறாக நடக்கக்கூடுமாதலால் அவதானம் வேண்டும்.

**மகரம்: உத்திராடம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், திருவோணம் , அவிட்டம் 1ம், 2ம் பாதங்கள்**

பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படலாம். பெரியோர்களால் பாராட்டும்படியாக இருக்கும். சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் ஏற்படும் பிரயாணத்தால் நன்மைகள் ஏற்படும்படியாக இருக்கும். ஆதரவு எல்லாமட்டத்திலிருந்தும் ஏற்படலாம். திருமணமாகாதவர்கட்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது.

**கும்பம்: அவிட்டம் 3ம், 4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம், பாதங்கள்**

உஷ்ண சம்பந்தமான நோயினால் பீடிக்கப்படலாம் மனதின் அமைதிநிலை குலைந்து கவலைகளால் சூழ்ந்து வெதும்பும் நிலை ஏற்படலாம். செலவுகள் அதிகரித்துக் காணப்பட்டபோதும் தட்டுப்பாடிராது. புதிய முயற்சிகள் ஈடுபாடு கொள்ளநேர்ந்தால் அதைபிற்போடவும் வீண்விவாதங்களில் ஈடுபடாதீர்.

**மீனம்: பூரட்டாதி4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மேலதிகாரிகளின் சீற்றத்திற்கு ஆளாக வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். சிறியோரிடம் தலைக்குனிவு ஏற்படக்கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படலாம். சிறு விபத்துக்கள் ஏற்படக்கூடுமாதலால் கூடியளவு எச்சரிக்கையுடன் இருக்கவும். அரசாங்கத்தாரின் கோபத்திற்கும் ஆளாகலாம். பணத்தட்டுப்பாடு ஏற்படலாம்.

905 793 2085
ஜோதிடமணி ஈஸ்வர முத்துக்குமாரசாமிக்குருக்கள்
74, DANDELION ROAD, BRAMPTON, ONTARIO L6R1Y3.

**Do you need a LOAN or MORTGAGE?**
உங்களுக்கு கடன் வசதி Mortgage வசதி செய்து தர வேண்டுமா?
Mortgage
(Residential & Commercial)
Loans
(Business, Personal, Credit Cards, Line of Credit, Taxi, Taxi plate, Car, Truck etc.)
*Note: No brokerage fees from qualified buyers and interest rate discount up to 1% or 3% cash back and more...*
TARLOCHAN AUJLA (Ph.D)
ALPHA FINANCIAL SERVICES
PHONE: 416-750-1496 CELL: 416-885-1490
2390 Eglinton Avenue East, Suite 238, Scarborough, ON

**Dr. Nirmala Siva**
Family Dentist
டாக்டர். நிர்மலா சிவா
குடும்ப பல் வைத்தியர்



உங்கள் பற்களை உறுதியாகவும்,
ஆரோக்கியமாகவும் பேணுவதற்கு நாடுங்கள்

HUMBER VALLEY DENTAL CENTER
2630 Kipling Avenue
Suite 8,
Rexdale, ON, M9V 4B9
(Kipling / Steeles)
416-745-4500
CELL: 416-457-7482
SIVA
திங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு

GOREWAY DENTAL CENTRE
7125 Gorway Drive,
Suite 206,
Malton, ON, L4T 4H3
(Derry / Gorway Derive)
905-673-7874
CELL: 416-457-7482
SIVA
திங்கள், செவ்வாய், வியாழன், சனி.

உங்கள் வீடு ஒன்றை
விற்க விரும்புகிறீர்களா?
வாங்க விரும்புகிறீர்களா?



Meena Sakthivel
(Sales Associate)
Gold Award Winner up to 2000
Platinum Award Winner 2001
Bus:
416-281-8090
Res:
905-428-9299
Fax:
416-281-2753

தரமான
சுத்தமான சூழல்
சுற்றாடல்

நியாயமான விலை

குறைந்த வட்டி வீத
அடைமான ஒழுங்குகள்

இலவச மதிப்பீடு

வெற்றிகரமான
சந்தைப்படுத்தும் திட்டம்

இவையாவும் கலந்த
எனது மாசற்ற சேவைக்கு
எனது உத்தரவாதம்

விபரங்களுக்கு
அழையுங்கள்

மீனா சக்திவேல்
416-281-8090

HOMELIFE
Home Life / Champions Realty Inc.
Realtor Member
8130 Sheppard Ave. E., Suite 206, Toronto, ON M1B 3W3

"உதயன்" வாசகர்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்ற **"ஒரு சிறீலங்கா நாயின் கதை", "மிஸ் ஆச்சி"** ஆகிய நகைச்சுவைத் தொடர்களைத் தொடர்ந்து உங்கள் அபிமான நகைச்சுவை எழுத்தாளர் **"டொன்மில்ஸ்" சிவப்பிரகாசம்** எழுதும் **"பெரியப்பாவின் ஆவி"** என்னும் நகைச்சுவைத் தொடர் உதயன் வார இதழில் வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

- பிரதம ஆசிரியர்

அங்கம் - 16

# பெரியப்பாவின் ஆவி!

**- டொன்மில்ஸ் சிவப்பிரகாசம்**

தம்பி தங்கைகளே! இன்று கந்த சஷ்டி என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். எங்கே விக்னிஸ் நீங்கள் சொல்லுங்க பார்ப்பம் கந்த சஷ்டி என்றால் என்ன?

அந்த தமிழ் படிப்பிக்கும் ஆசிரியை தமிழ் படிக்க வந்த கனேடிய தமிழ் மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்.

எங்கடை வீட்டிலை டீச்சர், அம்மம்மா இவ்வளவு நாளும் மீன் கறி, இறைச்சி கறி வைச்ச சட்டியளை கட்டி பேஸ்மன்டிலை வைச்சுப் போட்டு புது சட்டியளை வாங்கி ஆறு நாளைக்கு மரக்கறி சமைக்கிறதுதான் கந்த சட்டி.

இல்லை....இல்லை....அது பிழையான கூற்று. எங்கே சுரேஷ் நீர் சொல்லும் பார்ப்போம் என்று சுரேஷைக் கேட்டார் ஆசிரியர்.

எங்கடை அப்பா ஆறு நாளைக்கு பியர் குடிக்காமல் அம்மாவைக் கோயிலுக்குக் கூட்டிப் போவார்.

நோ....நோ.....அது தவறான கருத்து. எங்கே லக்சன் நீர் சொல்லும் பார்ப்பம்.

எங்கடை அப்பப்பாவும் அம்மம்மாவும் வீட்டிலை சண்டை பிடிக்காமல் கோயில்லை போய் சூரன் சாமியும் முருகன் சாமியும் பிடிக்கிற சண்டையைப் பார்க்கப் போவினம்.

தவறு....தவறு.... நீங்கள் எல்லோரும் தவறான கருத்தைச் சொல்கின்றீர்கள். நீங்கள் அவரவர் வீடுகளில் நடக்கும் விசையங்களைப் பார்த்துவிட்டு அதற்கு ஏற்றாப்போல் சொல்கின்றீர்கள். கந்த சஷ்டி என்றால்.....என்ன? என்பதை ஆசிரியை விரிவாக மாணவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

கலிகாலம்...கலிகாலம்...என்ன பெரியப்பா இந்த நாட்டிலை எங்கடை சமுதாயம் இப்படிப் போய்கொண்டிருக்கு கேட்டியளே! ஆசிரியரும் மாணவரும் கதைக்கிற கதையை என்றார் அம்பலவாணர். அவரைத் தொடர்ந்து பெரியப்பா அம்பலவாணி.. அம்பலவாணி....அது பிள்ளைகளின் பிழை இல்லை. எங்கடை பெரியவையின்ரை குறை கண்டியோ. அங்கைபார் உன்ரை கடைசி பெடியன் விஸ்கி குடிக்கிறான். அவனுக்கு வாய்க்கு மீன் பொரியல் ரேஸ்ற் கேக்கிது. அதை ஆர் கொண்டே கொடுக்கினம் எண்டு பார். அவன்ரை பத்து வயசு பொடியன். அப்ப பத்து வயசிலை இருந்து தகப்பன் மகனுக்கு றெயினிங் கொடுக்கிறான் கண்டியே! ஊரிலை நாங்கள் இப்பிடியே இருந்த நாங்கள். ஊரிலை கள்ளுக் கொட்டிலுக்குப் போய் அடிக்கிறது. இல்லாட்டி வைரமுத்து மாமா, பொன்னுச்சாமி அண்ணையிட்டை அதிலை நிண்டு கிளாசை வாங்கி அடித் தொண்டைக்குள்ளை ஊத்திப்போட்டு அயலுக்குத் தெரியாமல் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுப் போட்டுப் படுத்து விடுவம். என்ரை மனிசியை ஆரும் கேட்டாலும் ஐயோ என்ரை மனுசனிலை உந்தப் பழக்கம் ஒண்டும் இல்லை எண்டு எந்தக் கோவிலிலும் அடிச்சு சத்தியம் பண்ணும்.

இது வெளிநாடாம். அதுதான் வெளியிலை வைச்சு அடிக்கினம். அப்ப ஏன் பிள்ளையள் கெட்டுப் போகாது. என்ரை ஒண்டுவிட்ட அண்ணன் வீட்டை அவர் தான் சாப்பிடேக்கை பிள்ளைக்கு வையின் ஊத்திக் குடுப்பார். எட நாசமாப் போறவனே எண்டா அது மருந்து மாதிரி என்னமோ அதுக்கு ரொனிக் எண்டு சொல்லி குடுப்பான். பிறகு மகன்காறன் இருபது வயதிலை தகப்பனுக்கு ரொனிக் ஊத்திக் குடுத்ததை என்ரை கண்ணாலை கண்டுபோட்டுத் தான் இந்த உலகத்துக்கு வந்தனான் எண்டார் பெரியப்பா.

சரியாச் சொன்னியள் பெரியப்பா அண்டைக்கு நானும் ஒருக்கா மருந்துக் கடையுக்கை போனபோது எங்கடை ஊர் பொம்புளை அதுக்கை இருந்து வந்தா. என்னைக் கண்டுபோட்டு அவருக்கு காலிலை சுழுக்கு. காருக்கை இருக்கிறார். ஆ....அ..... அதுதான் நான் இதுக்கை வந்தனான் எண்டு சொன்னாள். நான் என்ன அவளை கேட்டனானே! ஏன் எனக்கு விளக்கம் சொல்லுறாள் எண்டுபோட்டு ஆ....சரி...சரி....பிள்ளை எண்டு சொல்லிப்போட்டு போனன். ஆனால் நான் வருகிறபோது புருசன்காறனை வெளியிலை சந்திச்சு கதைச்சுப் போட்டுத்தான் வந்தனான். அவன் நல்லாதான் நடந்து வந்தவன். இவள் ஏன் எனக்கு சுழுக்கு எடுத்தவளோ தெரியேல்லை.

அம்பலவாணி நீயும் உன்னை ஒத்த என்னை ஒத்த வயசுக்காறர் உந்த மோலுகளுக்கை வாங்குகளிலை நந்தியள் மாதிரி பொழுது போகாமல் தூங்கி வழிஞ்சு கொண்டு இருக்கிறது எங்கடை சிலபேருக்குப் பெரிய எரிச்சல் கண்டியோ. பள்ளிக்குப் போகாமல் மோலுகளுக்கு வாறவையும் தில்லு முல்லு பண்ணுறவையும் இதுகளுக்கை தானே! என்ன செய்யிறது. ஊரிலை அந்தக் காலத்திலை மதவுகளிலை இருந்து பழகின பழக்கம் இஞ்சை முடியுமே!

இஞ்சை நடக்கிற தில்லு முல்லுகள் எங்களாலைதான் வெளியாலை போகுது எண்டு இவையளுக்கு ஒரு சந்தேகம் கண்டியோ! எட நாங்கள் வாறது லொத்தோ கிறாச் அன் வின் உரசிப்பார்க்கிறதுக்குத் தானே. என்ன செய்யிறது? வீட்டிலை இருந்தா மருமகளின்ரை சுடு சொல்லுகள் தாங்கமுடியிறதில்லை எண்டு இதுக்கை வாறம். எங்களுக்கு என்ன ஆர் எக்கேடு கெட்டா.

சரி...சரி...அம்பலவாணி அதுகளைவிடு எங்கடை பேரக் குழந்தையள்தான் நாளைக்கு எங்கடை சமுதாயத்தை வாழ வைக்கப் போகுதுகள். ஆனால் அதுகளும் இப்பிடி குறுக்கு வழிகளிலை போகுதுகள். அதை நினைக்க நீ ஏதோ கதைச்சுக் கொண்டு போறாய் என்று கதையை திருப்பினார் பெரியப்பா.

போன கிழமை சூரன் போருக்கு என்ரை பூட்டனை கூட்டிக் கொண்டு போனவையாம். அவன் பேத்தியாரோடைதான் போயிருக்கிறான். ஐயா அர்ச்சனை முடிஞ்சு கற்பூர தீபத்தட்டோடை வெளியே ஆட்களுக்கு தீபத்தட்டை கண்ணிலை ஒத்தி கும்பிடக் கொண்டு வந்தாராம். அர்ச்சனை காறர் மட்டும்.... அர்ச்சனை காறர் மட்டும் .....எண்டு சொல்லிக் கொண்டு வந்தாராம். அப்ப காசு இல்லாதவனுக்கு கடவுளே கனடாவிலை தடைவிதிக்கிற அளவுக்கு கோவில் சட்டங்கள். ஏன் ஐயா ஊரிலை இல்லாத புராணத்திலை இல்லாத சட்டங்களை விதிக்கிறீர்கள்? பூஜைக்கு பூக்களை கையிலை எடுங்கய்யா சட்டங்களை எடுக்காதீர்கள். இதுகளைப் பார்த்துக் கொண்டிருந்த பேராண்டி கேள்விக்கு மேலை கேட்டு தொலைக்கிறாங்கள் ஐயா. இத்தோடை வீட்டிலை இதை விடுவாங்கள் எண்டு நினைக்கிறியளே. இல்லை இது கனடா, இதை பாடசாலைகளில் கொண்டுபோய் டிஸ்கசன் பண்ணி எதிர்காலத்தில் எங்கடை கோவில்களுக்கு நாங்கள் போறதையே நிற்பாட்டிப் போடும் சந்தர்ப்பத்தை உண்டாக்கி விடுவாங்கள். எங்கடை தலைமுறையுடன் கோவிலைப் பூட்டாக்கூடாது. எதிர்காலத்திலும் கோவில் எமது சமூகத்தில் பிரகாசமாக இருக்க வேணும். சின்ன வயசிலை ஏற்படும் பழக்கம்தான் வயது ஏற ஏற அதுவும் ஏறிக்கொண்டு போகும். ஏதோ எங்கடை சமயத்தை நாங்கள் வளர்க்க வேணும். இல்லை மற்ற சமயத்தவன் எங்கடை ஆக்களை இலகுவாய் இழுத்துக்கொண்டு போயிடுவான்.

நான் என்ன சொல்கிறேன் எண்டா அம்பலவாணி, பிள்ளைகளை வளர்க்கும்போது வலு கவனமாக இருக்கவேணும். அப்பதான் அதுகள் எங்கடை ஊர் பிள்ளைகள் மாதிரி வரும். உதாரணத்துக்கு ஒண்டு சொல்லுறன், போனகிழமை என்ரை மருமகன் ஊருக்குப் போய் திரும்பி வந்தவன். அவன்ரை பிள்ளையள் வீடியோவிலை ஊரிலை உள்ள "கக்கூசிலை இருந்து அடிவளவுவரை" எல்லாம் எடுத்துக்கொண்டு வந்தாங்கள். அதைப்போட்டு பார்த்தம் அங்கையுள்ள கலாசாலையிலை கல்வி கற்கிற பெண்பிள்ளையும் அவளின்ரை தங்கச்சியும் தாய்க்குத் தகப்பனுக்கு எவ்வளவு பயபக்தியா வீட்டு வேலை செய்து கொடுக்கிதுகள். அதை அந்த பெடியன் எதேச்சையாகத்தான் படம் எடுத்திருக்கிறான். ஆனால் அதிலிருந்து ஒண்டு விளங்குது இன்னும் எங்கடை கலாச்சாரம், பண்பு மறைய இல்லை. ஆனால் இஞ்சை தாய் தகப்பன் சொன்னா..... ஏ....யூ.....சூ...அவ்.... ஏதாவது விளங்குதோ?

அடுத்தமுறை சந்திப்பம்.....


**PROMOTERS AUTO CENTRE**

**புறமோட்டோஸ் ஓட்டோ சென்ரர்**

*Complete Automotive Services and Repairs by fully Licensed Class 'A' Mechanics*

**SIVA / சிவா**

உங்கள் வாகன திருத்த வேலைகள் அனைத்தையும் மிகச் சிறந்த முறையில் செய்து கொள்ள நகரில் இரு இடங்களில்

**Safety Certification**

(Inspected & Certifired While You Wait)

DRIVE CLEAN EMISSION INSPECTIONS & REPAIR FACILITY

ONTARIO'S DRIVE CLEAN

For the air we breathe.

ஒன்ராரியோ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வாகன புகை வெளியேற்றத்தை பரிசோதனை செய்து அது சம்பந்தமான திருத்த வேலை தேவையான பட்சத்தில் உரிமையாளரின் அனுமதியுடன் சரி செய்து சான்றிதழ் வழங்கும் நிலையம்

**All Kind Of Insurance Claim Work Done Here. We Pay Your Deductible. Free Inspection & Estimate.**


சகலவிதமான காப்புறுதி சம்பந்தமான திருத்தவேலைகள் செய்து தரப்படும். வேலைகளின் மதிப்பீடு இலவசம்.

WHEEL BALANCING - COMPUTERIZED WHEEL ALIGNMENT & AIR-CONDITIONING

**MAIN**

773 Warden Ave., Unit #8
Scarborough, ON. M1L 4C2

Tel: 416-285-8608
416-752-9797
Fax: 416-285-4326




**BRANCH**

3 Heritage Road, Unit #2
Markham, ON L3P 1M3

Tel: 905-294-2223
Fax: 905-294-0009



## சிறுகதை



# சுந்தரராமசாமிக்கு ஜே!

ஆக்கம்: எஸ். ஜெகநாதன்

கடந்த வாரத் தொடர்ச்சி

"வட் ஏ ஹொட் டே ருடே" என்றவன் கட்டியிருந்த 'ரை' ஐ சற்றே தளர்த்தி, சேட்டின் மேல் பொத்தானையும் கழற்றிவிட்டு கைகளை அகல விரித்தபடி ஹாயாக சோபாமீது இருந்து கொண்டான்.
சிறிது நேரம் நிலவிய நிசப்தத்தை முரளியே முதலில் கலைத்து
"ஏன் சங்கர் இன்றைக்கு ஒவ் ஆ?"
சங்கர் காட்டிய கணப்பொழுது தயக்கத்திற்கிடையில்
"அவருக்கு இப்போது 'லே ஒவ்' யு.ஐ பெனிவிற் இல் இருக்கிறார்"
ஜமுனா முந்திக் கொண்டாள்.
அவனது கேள்வியே தேவை இல்லாததொன்று என்று எரிச்சலடைந்தவனுக்கு அவளது அதிகப்பிரசங்கித்தனம் இவனை குறுகச் செய்து சங்கடப்படுத்தி விட்டது. ஒருவேளை "ஆம் இன்று சுகவீனம் அல்லது ஏதாவது 'அப்பொயின்மென்ற்' என்று பொய் சொல்லிச் சமாளித்திருப்பேனே" என்று ஒரு கணம் எண்ணத்தோன்றியது சங்கருக்கு.
"யெஸ் பத்து வருஷமாக கனேடியன் கவர்ண்மென்றுக்கு அடித்துக் கொடுத்ததுதானே. கொஞ்ச நாளைக்கு கவர்ண்மென்ற் காசையும் 'என்ஜோய்' பண்ணலாம்தானே"
தன்னுடைய இயலாமையை நியாயப்படுத்துகிற மாதிரி பதிலுரைத்தான் சங்கர்.
"அதுவும் சரிதான். அப்போ வேறு ஒரு இடமும் 'க்ளிக்' ஆகவில்லையா?"
"யு நோ, ஐ ஆம் ஏ சாட்டற் எக்கவுண்டன்ற் பாக் ஹோம். எக்கவுண்டிங் பீல்டில் இப்போது வெரி ஹாட் டு கெட் ஏ ஜொப்"
'ஐ நோ' என்று ஆரம்பித்த முரளி தான் ஓமானில் புரொஜக்ற் என்ஜினியராக வேலை பார்த்ததாகவும் கனடா வந்ததும் வேலை ஏதும் கிடைக்காமல் கே.எவ்.சி இல் அஸிஸ்டன்ற் மனேஜராக கோழிக்கால் பிஸ்னஸ் பண்ணியதாக தமாஷாகச் சொன்னான். மேலும் தொடர்ந்து
"இந்த நாடு ஒரு லான்ட் ஒவ் ஒப்பசுனிற்றி இதைப் பயன்படுத்துவது எங்கள் கையில்தான் இருக்கிறது. நாட்டிற்கு ஏற்ற மாதிரி தொழிலை மாற்றினாலும் பரவாயில்லை. ஆனால் வாழ்க்கையில் எப்போதும் மேல் நோக்கி முன்னேறுவதற்கு முயற்சிக்க வேண்டும். என்னால் இப்படி காலத்தை வீணடித்துக் கொண்டிருக்க முடியாது. நாங்கள்தான் சந்தர்ப்பத்தை உருவாக்கி உபயோகப் படுத்த வேண்டும். நான் கூட தற்போதைய புரொடக்ஷன் மனேஜர் வேலையில் எவ்வளவு காலம் வேலை செய்வேனோ தெரியாது. சந்தர்ப்பம் கிடைக்கும்போது இதைவிட உயர்வான வேறொன்றிற்கு முயற்சிப்பேன். "யு நோ ஒன் திங்' ஒரு வேலையில் இருக்கும்போது இன்னொரு வேலைக்கு முயற்சிப்பதுதான் சுலபம்" என்று பெரும்பாலும் ஆங்கிலக் கலவையில் ஒரு குட்டி உரை நிகழ்த்தினான்.
தன்னைவிட வயதில் இளையவன் ஆனாலும் அவனுடைய சரளமான ஆங்கிலமும் சுயநம்பிக்கையுடன் கூடிய ஆழுமையும் அவன்மீது சங்கருக்கு இருந்த காழ்ப்புணர்ச்சியை அகற்றிவிட்டு அவனை ஆச்சரியத்துடன் நோக்க வைத்தது.
"இப்போது இன்புளுவன்ஸ் இல்லாமல் வேலை கிடைப்பது கஷ்டம்" என்றான் சங்கர்.
"டீ ஆறப்போகிறது குடியுங்கோ" என்றாள் ஜமுனா.
தேநீரை உறிஞ்சி ஒரு தடவை குடித்துவிட்டு "உங்களுக்கு இன்ரஸ்ட் இருந்தால் சொல்லுங்கள். என்னுடைய நண்பன் ஒருத்தன் 'ரியல் எஸ்டேட்' செய்கிறான். அவன் கூட என்ஜினியர்தான். தடியன் மாதம் மூன்று வீடாவது விற்றுவிடுவான். கொள்ளைக்காசு சம்பாதிக்கிறான். இன்னொருத்தன் 'இன்சூரன்ஸ் பிஸ்னஸ்' செய்கிறான். அவர்கள் உதவி செய்வார்கள். நீங்கள் நினைத்தால் உங்களாலும் நிச்சயமாக முடியும். அல்லது உங்களுடைய எக்கவுண்டிங் பீல்டில் வேலை வேண்டுமாயிருந்தால் எனக்கு இரண்டு மூன்று கிழமை 'ரைம்' தாருங்கோ. 'ஐ ஹாவ் லொட் ஒவ் பிரண்ட்ஸ் இன் த பினான்சியல் சர்க்கில். இது ஒன்றும் பெரிய பிரச்சனை அல்ல" என்றான் முரளி.
அவனுடைய பேச்சு சங்கரை ஆசுவாசப்படுத்தியதோடு நம்பிக்கை மூட்டைகளை அவன் தலைக்குள் ஏற்றிய மாதிரி ஒரு உணர்வு.
தேநீரை குடித்துவிட்டு சிறிய மேசைமீது வைக்கச் சென்றவன் கவிழ்த்து வைக்கப் பட்டிருந்த புத்தகத்தைக் கண்டதும் கையில் எடுத்துக் கொண்டான். "பொழுது போக்கப் பத்தகம் வாசிக்கிறீர்களா? நல்லது"
புத்தகத்தின் முன் பக்கத்தைப் புரட்டியவன் ஏதோ புதையல் கிடைத்த மாதிரி கண்களை அகல விரித்தபடி சோபாவின் விளிம்பிற்கே வந்துவிட்டான்.
"நீங்கள் சுந்தர ராமசாமியின் வாசகனா?"
சங்கருக்கு இப்போது சற்று தென்பு ஏற்பட்டது. இதோ தன்னையும் உயர்வாகக் காட்டிக்கொள்ள ஒரு சந்தர்ப்பம்.
"ஆம்....ஆம் ற் இஸ் ஏ கிரேட் றைற்றர்"
"ஓ மை காட், தேவகிக்கு இந்தப் புத்தகம் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாள். நான் நினைக்கிறேன் என்னுடைய மனைவி இந்த நாவலைத் தவிர சுந்தர ராமசாமியின் எல்லாக் கதைகளையும் வாசித்து இருக்கிறாள். தேவகிக்கு அவருடைய எழுத்துக்களென்றால் உயிர். அத்துடன் மிகுந்த மரியாதையும் வைத்திருக்கிறாள். உங்களுக்கு எப்படிக் கிடைத்தது லைபிறரியிலா" கூறிக்கொண்டே புத்தகத்தின் சில பக்கங்களை மிகவும் பவ்வியமாகப் புரட்டினான். அவனது செய்கை அந்த எழுத்தாளர்மீது அவனுக்கிருந்த மதிப்பையும் ஈடுபாட்டையும் புலப்படுத்தியது. தொடர்ந்து கூறினான்.
"இதை வாசிப்பதென்றால் கொஞ்சம் நிதானம் தேவை இல்லையா! இவருடைய 'ஒரு புளிய மரத்தின் கதை' நாவலைக்கூட என்னால் முதலில் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அப்புறம் தேவகிதான் அதன் உள்ளார்ந்த அர்த்தங்களை புரியவைத்த பிற்பாடு எனக்குக்கூட அவருடைய எழுத்துக்களில் மிகுந்த விரும்பம் உண்டாயிற்று" மீண்டும் அவனே
"சங்கர் நீங்கள் கட்டாயமாக ஒரு நாளைக்கு எங்கள் வீட்டிற்கு வாருங்கள். தேவகிக்கு இப்படியான விஷயங்களைக் கதைப்பதென்றால் மிகவும் இஷ்டம்" என்றவன் "சங்கர் எனக்கொரு உதவி செய்ய முடியுமா? இந்தப் புத்தகத்தை லைபிறரியிலை 'ரிநியு' பண்ணி தேவகி வாசிப்பதற்கு எடுத்துத்தர முடியுமா" என்று மிகவும் வாஞ்சையுடன் கேட்டான்.
"நோ, நோ நீங்கள் இப்போதே இதைக் கொண்டு போங்கள். என்னுடைய வேலைப் பிரச்சனையில் இதை வாசிக்கின்ற மூட் இப்போது எனக்கு இல்லை"
"தாங்யு சங்கர், வேலையைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஒரு மாதத்திற்குள் வேலை எடுத்துத் தருவது என்னுடைய பொறுப்பு ஓ.கே" என்றவன் கடிகாரத்தைப் பார்த்தான்.
"நான் புறப்படப் போகிறேன் நேரமாகிறது"
"அப்போ நான் என்னுடைய 'றெசுமி'ஐ ஜமுனாவிடம் கொடுத்து விடவா" சங்கர் அங்கலாய்த்தான்.
"நோ நோ ஜமுனா எதற்கு இடையில். நாங்கள் தான் பிரண்ஸ் ஆயிட்டோமே. இந்த நம்பருக்கு பக்ஸ் பண்ணுங்கோ" தன்னுடைய பொக்கற்றிலிருந்து 'பிஸ்னஸ் காட்' ஐ எடுத்து சங்கரிடம் கொடுத்துவிட்டு "யு கேற் கோல் மீ அற் எனி ரைம்" என்றுகூறி கை குலுக்கி விடைபெறுகிறான்.
வாசல்வரை சங்கரும் ஜமுனாவும் சென்று வழியனுப்புகிறார்கள். காரில் ஏறும்போது முரளி திரும்பிப்பார்த்து புத்தகத்தைச் சுட்டிக்காட்டி "தாங்ஸ்" என்றான். இருவரும் கார் மறையும்வரை நின்றுவிட்டு உள்ளே செல்கின்றனர்.
"அருமையான பெடியன்" என்றான் சங்கர்.

முற்றும்.


தமிழில் உரையாடி சர்வதேச தரம் மிக்க புதிய, பாவித்த



TOYOTA
வாகனங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
Mr. Pillai
416-292-2241 Ext: 4116
Cell: 416-565-9080
brimell toyota 30 YEARS
5060 Sheppard Avenue East, Scarborough, Ont. M1S 4N5
Visit us on the web www.brimelltoyota.com

# யமலோக நீதிமன்றம்



பல்கலைச் செல்வன்
முஹம்மது ஹன்ஸீர்



## "யமலோக நீதிமன்றம்" தொடர் நாடகம் -37

*கதை வசனம்: பல்கலைச் செல்வன் முஹம்மது ஹன்ஸீர்*

**"உதயன்" ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டிய விஷேட வெளியீடு**

கடந்த வாரத் தொடர்ச்சி..........

**கொத்தலாவல:** சிங்கள மக்களுக்கு வேலை கொடுக்வேண்டுமென்ற நோக்கில்தான் அவ்வாறு செய்தேன்.

**தேவதேவன்:** ஓ...அப்படியா? சிங்கள மக்களுக்கு நன்றாய் வேலை கொடுத்து விட்டீர். சிங்கள மக்கள் நல்ல வேலை செய்துள்ளார்கள். தெரியுமா?

**கொத்தலாவல:** தெரியும்.

**தேவதேவன்:** அவர்களை உடனடியாக அனுப்ப எந்த ஏற்பாடும் செய்யப்பட வில்லை. அதற்கிடையில்அவர்களது பிரஜா உரிமைகளை இல்லாமலாக்கி வாக்குரிமைகளை இல்லாமலாக்கி அவர்களுக்கென எந்தப் பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் இல்லாமலாக்கி அவர்களது கஷ்டங்களை எடுத்துக்கூற ஒருவரையும் இல்லாமலாக்கி வைத்ததும் நீர்தானே.

**கொத்தலாவல:** நான் மட்டுமல்ல, டீ.எஸ். சேனநாயக்காவும்

**தேவதேவன்:** ஒன்றில் அவர்களுக்குப் பிரஜாவுரிமை இருக்க வேண்டும். அல்லது நாட்டைவிட்டு அனுப்பியிருக்க வேண்டும். இரண்டும் நடைபெறவில்லையல்லவா?

**கொத்தலாவல:** ஆமாம் சில காலங்களுக்கு.

**தேவதேவன்:** அனுப்புவதற்கான ஏற்பாடுகளை முதலில் செய்து கொண்ட பிறகல்லவா அவர்களது பிரஜா உரிமைமீது கைவைக்க வேண்டும்.

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** இங்கு குதிரைக்கு முன்னால் வண்டியை வைத்த கதையாக அல்லவா ஆகிவிட்டது.

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** இன்னொரு விடயம்! அவர்களை அனுப்பும் வரையிலாவது அம்மலைநாட்டுத் தமிழ் மக்களுக்குத் தேவைப்பட்ட அடிப்படைத் தேவைகளையாவது ஒழுங்காகச் செய்து கொடுக்கவில்லையல்லவா?

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** ஏன்?

**கொத்தலாவல:** அதாவது சிங்கள அரசியல் தலைவர்கள் இவ்விடயத்தில் பெரிதாக அக்கறை காட்டவில்லை.

**தேவதேவன்:** ஏன் அவர்களை மிருகங்களிலும் கேவலமாக நினைத்து விட்டனரா?

**கொத்தலாவல:** அவ்வாறு கூறவும் இயலாது.

**தேவதேவன்:** அவர்களுக்கு ஏற்பட்டிருந்த இன்னல்களையாவது அறிந்து கொண்டுதான் இருந்தீர்கள்.

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** பிரித்தானியர்களால் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்களது வழித்தோன்றல்கள்தானே இலங்கை 1948ல் சுதந்திரமடையும்போது இருந்த இந்தியத் தமிழர்கள்.

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** இவ்வழித் தோன்றல்கள் எல்லோரும் இலங்கையில் பிறந்தவர்கள்தானே!

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** அவர்களெல்லோரும் இலங்கையின் நிரந்தர பிரஜைகளாகத்தானே இருந்தனர்.

**கொத்தலாவல:** ஆமாம்.

**தேவதேவன்:** அவர்கள் கடுமையாக இந்த நாட்டுக்காக உழைத்துக் கொண்டிருந்தவர்களல்லவா?

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** இலங்கையில் பிறந்து பரம்பரையாகத் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வளர்ந்தவர்கள்தானே அவர்கள்?

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** அவர்களுக்கு வாக்குரிமைகூட இருந்ததோடு 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் ஒன்பது அங்கத்தவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிந்தெடுத்துக்கொண்டுள்ளனரல்லவா?

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** டொனமூர் அரசியல் திட்டத்தின் பிரகாரம் மலைநாட்டுத் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களில் ஒருவர் மந்திரி சபையின் மந்திரியாகக் கூட இருந்திருக்கின்றாரல்லவா?

**கொத்தலாவல:** ஆமாம்

**தேவதேவன்:** அவ்வாறெல்லாம் இருக்கும் பொழுது அவர்களது உரிமைகள் யாவற்றையும் பறித்து அவர்களைத் திருப்பி அனுப்ப முற்பட்டமை காட்டுமிராண்டித்தனம் தானே.

**கொத்தலாவல:** (கண்ணீர் வடித்துக் கொண்டு) ஆமாம். மலை நாட்டுத் தமிழ் மக்களை இந்தியாவுக்கு மீண்டும் திருப்பி அனுப்பத் திட்டமிட்டமை கூடாதென்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

**தேவதேவன்:** உமது தீய எண்ணங்களினால் நடைபெற்ற விபரீதங்களை ஏற்றுக் கொள்கின்றீரா?

**கொத்தலாவல:** ஆமாம் (கண்ணீர் வடிக்கின்றார்)

**தேவதேவன்:** 1983ம் ஆண்டுக் கலவரத்தின் பொழுது கனகசபை மலைநாட்டுத் தோட்டத்திலே தாக்கப்பட்டாரென்றால் அதற்கு முக்கியமான காரணம் நீராகவும் இருக்கின்றீர் என்பதை ஒப்புக் கொள்கின்றீரா?

**கொத்தலாவல:** (மௌனம் சாதிக்கின்றார்)

**தேவதேவன்:** மௌனம் சம்மதத்திற்கு அடையாளம் கனம் நீதிபதியவர்களே! இத்துடன் கொத்தலாவலை மீதான என் விசாரணைகளை முடித்துக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**நீதிபதி:** நன்றி தேவதேவா. இப்பொழுது கொத்தலாவலைமீது இருவரும் விசாரணைகளை முடித்துக் கொண்டுள்ளனர். இனித் தொகுப்புரைகள் வழங்கப்பட வேண்டும். அடுத்தமுறை நீதிமன்றம் கூடும்பொழுது தொகுப்புரை ஆரம்பிக்கப்படலாம். இத்துடன் இன்றைய நீதிமன்ற நடவடிக்கைகளை முடித்துக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**சித்திர புத்திரன்:** வணக்கம்

(நீதிபதி செல்லும் பொழுது எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்)

நீதிமன்றம் கலைகின்றது.

**காட்சி - 14 (நீதிமன்றம் கூடுகின்றது)**

**நீதிமன்ற சேவகன்:** அமைதி, அமைதி, அமைதி. இந்த யமலோக நீதிமன்றத்திலே சிவபெருமானின் பிரதிநிதி நீதிபதியாகக் கடமையாற்ற வருகின்றார். அமைதி, அமைதி

(நீதிபதி வந்ததும் எல்லோரும் அமர்ந்துகொள்கின்றனர்)

**நீதிபதி:** வணக்கம்

**நீதிமன்றக் காரியதரிசி:** வணக்கம் கனம் நீதிபதியவர்களே! கனகசபை எதிர் கருணாதாச என்ற இந்த வழக்கிலே கொத்தலாவலையிடம் விசாரணைகள் முடிவடைந்துள்ளன. இன்று தொகுப்புரை வழங்கும் தினமாகும்.

**நீதிபதி:** ஆமாம்

தொடரும்.......


**உங்கள் பிரயாணச் சீட்டுகளை குறைந்த விலையிலும் சிறந்த சேவையுடனும் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்**

**CANADIAN EXECUTIVE TRAVELS LTD.**

| | | | |
|---|---|---|---|
| Colombo | $1275.00 | London | $499.00 |
| India | $1499.00 | Paris | $599.00 |
| Singapore | $1299.00 | Frankfurt | $629.00 |
| | | Zurich | $739.00 |
| | | Amsterdam | $629.00 |
| Colombo to Toronto one way | $998.00 | Vancouver | $289.00 |
| | | Edmonton | $259.00 |
| | | Montreal | $159.00 |
| | | New York | $289.00 |



**CANADIAN EXECUTIVE TRAVELS LTD.**

2555 Eglinton Ave. E, Suite 103, Scarborough, ON. M1K 5J1

**Tel: 416-264-2193**

# Cisco Training

CISCO SYSTEMS

## We Produced 17 CCIEs' IN TEN MONTHS

| | |
|---|---|
| CCNA | $399. |
| CCNP - Module | $599. |
| CISCO PIX Security | $699. |
| CISCO VPN Security | $699. |
| CISCO MPLS | $699. |
| CCIE Theory | $799. |
| VOICE OVER IP | $799. |
| MCSE 2000 | $2100 |
| UNIX - SOLARIS | $499. |
| CHECK POINT | $499. |
| MCSE 2000- PROFESSIONAL | $399. |
| MCSE 2000- SERVER | $399. |
| SQL ADMINSTRATION | $399. |
| LINUX | $399. |

**FREE CCNA or MCP FOR EI RECIPIENTS**

The courses are designed by:

*Visit Our Lab.....*

- **ISDN lines, ADSL Line & Frame Relay Circuit**
- **60 Cisco Routers- 7500, 4500, 4000, 3600, & 2500**
- **Catalyst 5500, 5000, 3920 & 1900 Switches**



**A. HARITH K.**
MS Certified Trainer
B.Sc. Eng., MIBM, CNE, MCSE, MCT, CCNP, CCDP,
Cisco Security Specialist,
CCIE #8661

## WinNET SYSTEMS

HI-TECH TRAINING & CONSULTING

MISSISSAUGA — **905-949-TEST**

TORONTO — **1200 Eglinton Ave. East, Suite 100, Toronto,** (Don Mills & Eglinton)

SCARBOROUGH — **416-299-TEST**

## Tel: 416-447-TEST (8378)

1-877 3-WINNET **www.winnetsystems.com** email:teachme@winnetsystems.com

USC-RESP
"சொத்துக்களில் அழியாச் சொத்து கல்வி"
தயாபரன் ஆறுமுகம்
24hrs: (416) 889-3088
Home: (905) 426-6624
grant $400

உங்கள் நிதித்தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்வோம்
invis Financial Group
Mortgage
First and Second Residential Mortgage
Commercial Mortgages
Secured Lines of credit
Bad Credit/Bakruptcy
Self Employed
அழையுங்கள் சுமதி
416-427-6102
905-417-1563

S.K.T. JEWELLERS AND TEXTILES LTD.
நகரில் எங்குமே காணமுடியாத நவீன டிசைன் நகைகள் ஆயிரக்கணக்கான தெரிவுகளில்....
மங்கையர், ஆடவர் சிறுவர், சிறுமியருக்கான சகல ஆடை வகைகளும்
WARDEN & LAWRENCE
Tel: 416-615-0197

நோர்விச் யூனியன்
நம்பிக்கை • நாணயம் • உத்தரவாதம்
Call: T. K. THEVARAJAH
Tel : (905) 471-9061 Fax: (905) 471-2202
NORWICH UNION

SHIYARAA FINANCIAL SERVICE
உங்களுக்கு நிதி உதவி தேவையா?
• தனிப்பட்ட நிதி - வியாபார நிதி கடன் அட்டை - கடன் நிவர்த்தி வாகன நிதி - வீடு, வர்த்தக அடமானங்கள்
• புதிய குடிவரவாளர்களுக்கு! நீங்கள் வேலைசெய்யும் பட்சத்தில் 3000 டொலர் வரை கடனுதவி பெற்றுத்தர முடியும்!
கிருஷ்ணா
416-473-9278

UTHAYAN WEB:
www.uthayan.ca

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

(416) 752-1524 (416) 752-6703

உதயம்: 345 | Chief Editor: R. N. Logendralingam | 22.11.2002 FRIDAY

வீடு வாங்க விற்க
உங்கள் வீட்டுப் பெறுமதியை இலவசமாக மதிப்பீடு செய்ய உத்தரவாதமான சேவைக்கு நாடுங்கள்.
Flexible Commission
Century 21 Affiliate Realty Inc.
தனா மாணிக்கவாசகர்
Tel :416-290-1200
Cell:416-728-5772

KUGANANTHY RAVINDRAN
B.D.S.M, M.S., F.D.S.R.C.S. (ENG)
குகாநந்தி ரவீந்திரன்
குடும்ப பல்வைத்தியர்
1371 Neilon Road, #212., Scarborough
416-281-7555

LAW OFFICES
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public
ஸ்காபரோ அலுவலகம்
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, ON M1H 3B7
Tel: 416-265-3456
மிசிசாகா அலுவலகம்
Tel: 905-306-1100

எலி, பூச்சிகளின் தொல்லையா? நாடுங்கள்
Mr. Pest Control
100% உத்தரவாதம்
24 Hrs./7days - week
www.mrpestcontrol.ca
Raja 416-997-9969

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
$35.00
மட்டுமே

கடன் தேவையா!
Personal Loan - Line of Credit - Credit Card Consolidation Loan, Car Loan, Mortgage
மற்றும் கடன் சம்பந்தமான தேவைகளுக்கு அழையுங்கள்.
ரவி 416-562-3815

The Art of Videography
Weddings, T.V Production, Entertainment, Multi-Camera, 3-D ANIMATION, JIB ARm (32 Feet crane), Broadcast Quality NON-LINER EDITING
OFFICE: 416-299-9030
CELL : 416-200-9080
2250 Midland Ave. Unit 25
Scarborough, ON
VS Production

## Durham தமிழர் ஒன்றியத்தின் இளைஞர் விழா







இளைஞர் விழா 2002 **Pickering** இல் உள்ள **Pine Ridge Highschool** இல் **16th November** இடம்பெற்றது. இந்நிகழ்ச்சி (**Durham Tamil Association**) **Durham** தமிழ் ஒன்றியத்தின் இளைஞர் பிரிவுக்கு பொறுப்பாக சேர்ந்து வெற்றிகரமாக நடத்தி வைத்தார்கள். இவ்விழாவின் **Scotiabank** இன் **Sponsor** இல் இடம்பெற்றது. இவ்விளைஞர் விழாவில் பிரதம விருந்தினராக **Durham Region Chief of Police Mr. Kevin McApline** உம் சிறப்பு விருந்தினராக **Scotiabank Manager Mr. Tom Thiru** உம் கலந்து சிறப்பித்தனர். கலைஞர்களின் கலை நடன நிகழ்ச்சிகளை படத்தில் காணலாம். இந்நிகழ்ச்சின் உடாக இளைஞர்களுக்கும் நுரசாயஅ இல் வாழும் தமிழ் மக்களுக்கும் **Police** க்கு மிக கூடிய நெருக்கமான உறவு ஏற்பட்டுள்ளது. இவ் நிகழ்ச்சியில் 60 இற்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியரும் இளைஞர்களும் பங்குபற்றி எல்லோரையும் மகிழ்வித்தனர்.

என்றும் சுவைதரும் வெதுப்பகம்
KESTREL BAKERY
TAKE-OUT & BAKERY
416-744-7279
5010 Steeles Ave. West
Etobicoke

செந்தியின் நிர்வாகத்தில் ஓர் அச்சுக்கூடம்
உங்கள் அச்சுத் தேவைகளுக்கு
ஆதவன் அச்சகம்
ஸ்காபரோ
(கென்னடி எக்லிங்ரன் சந்திப்புக்கருகில்)
(416) 615-4646

மோட்டார் வாகன உதிரிப்பாகங்களுக்கு நம்பிக்கையான இடம்
ME MIDLAND ENTERPRISES INC.
IMPORT & DOMESTIC AUTO PARTS
Tel: 416-446-0249 cell: 647-280-3493
416-446-7632 Fax: 416-446-0827
1530 Warden Ave., Scarborough, Ont. M1r 2S8

"ONE MAN DOES EVERYTHING"
ELECTRICAL - PLUMBING - APPLIANCE & DRAINAGE SERVICES
24 HRS EMERGENCY SERVICE
SANTHA
SINCE 1987
416-200-5470

NKS
DRAPERIES & BLINDS
Custom made
• Vertical Blinds
• Venetian Blinds
• Draperies
• Curtains
• Shutters
FREE
Estimates & Installation
Call: Ketha
Tel: 416-321-6420
Tel: 905-944-0218
210 SILVER STAR BLVD., #825, SCARBOROUGH ON M1V 5J9

GOWRIEMALAN ASSOCIATES
Accounting | Income Tax
Real Estate | Finance
Immigration | Social Services
வுநட: 416-742-0449 குயஒ: 416-744-3011